www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2010
ரூ. 7.00



2 ஜி அலைக்கற்றை ஊழல்:

## தனியார்மயக் கொள்ளையின் புதிய சாதனை!

படிப்பகம்

முதலாளித்துவத்தின் முது கெலும்பை முறித்து, பஞ்சைப் பராரி களான பாட்டாளிகளின் முதல் சோச லிச அரசு உதித்த நாள் நவம்பர் 7, 1917. அன்றைய சோவியத் ஒன்றியத் தில் - உலகின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி மலர்ந்த 93-ஆம் ஆண்டு சோச லிசப் புரட்சி நாளை தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சி கர அமைப்புகள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து தாங்கள் செயல்படும் பகுதிகளில் எழுச்சியோடு கொண்டாடின. மறுகாலனியாக்கத்துக் கும் இந்துவெறி பாசிசத்துக்கும் எதிரா கவும், புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்கச் சூளுரைத்தும் கொட்டும் மழையிலும் பேருற்சாகத்தோடும் வர்க்க உணர்வோடும் இந்த விழாக்கள் நடை பெற்றன.




# முதலாளித்துவம் மக்களைக் கொல்லும்! மக்களைக் காக்கும் கம்யூனிசமே வெல்லும்!

## – புரட்சிகர அமைப்புகளின் நவம்பர் புரட்சி நாள் சூளுரை

**திருச்சியில்...**

தில்லைநகர் ஐந்தாவது கிராஸ் காந்திபுரத்தில் ம.க.இ.க; பெ.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சி கர அமைப்புகள் இணைந்து நவம்பர் புரட்சி நாளை எழுச்சியூட்டும் விழா வாக காலை முதல் இரவுவரை நடத்தின. காந்திபுரம், மூவேந்தர் நகர் உழைக்கும் மக்கள் தங்கள் குடும்பத்து டன் பெருந்திரளாகக் கலந்து கொண்ட இந்த விழாவில் பானை உடைத்தல், பானையில் நீர் நிரப்பு தல், இசை நாற்காலி, கயிறு இழுத்தல், ஓட்டப் பந்தயம், ஓவி யப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, மாறுவேடப் போட்டி - என பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சார்லி சாப்ளின், கட்டபொம்மன், ஜான்சி ராணி, பகத்சிங், அம்பேத்கர், காஷ்மீர் பெண்போராளி ஆகியோர் வேடம் தறித்து மாறுவேடப் போட்டியில் குழந்தைகள் மேடை யில் தோன்றி உரையாற்றிய விதம், பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம், அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங் கம், சுமைப்பணி தொழிலாளர் பாதுகாப்பு சங்கம், பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன், மனித உரிமை பாதுகாப்பு மையம் ஆகிய அமைப்புகளின் முன்னணியாளர்கள் போட்டி களில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் அளித்தனர். ம.க.இ.க. மாவட்டச் செயலர் தோழர் ராஜா தலைமையில் நடந்த இந்த விழாவில், இன்றைய உலகளாவிய நெருக்கடிகளுக்குப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியே ஒரே தீர்வு என்பதை உணர்த்தி பு.மா.இ.மு. மாவட்டச் செயலர் தோழர் கிளர்ச்சி யாளன், வழக்குரைஞர் இராமலிங்கம், ஜீவா உள்ளிட்ட பலர் சிறப்புரையாற்றினர். ம.க.இ.க. மையக் கலைக்குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது. நிகழ்ச்சியின் இறுதியில் இவ்விழாவில் கலந்து கொண்ட 700-க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களுக்கு மாட்டு கறி விருந்து அளிக்கப்பட்டது.




**ஒசூரில்...**

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் விவசாயி கள் விடுதலை முன்னணியும் இணைந்து பாகலூரில் நவம்பர் புரட்சிநாள் விழாவை எழுச்சியோடு நடத்தின. பெருந்திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்புடன் விண்ணதிரும் முழக்கங்க ளுடன் கொடியேற்றி, இனிப்பு வழங்கி, சிறு வர்களுக்கான பல்வேறு போட்டிகள் நடத்தப் பட்டன. பு.ஜ.தொ.மு. மாவட்டத் தலைவர் தோழர் பரசுராமன் பரிசுகளை வழங்கினார். பின் னர் நடந்த அரங்கக் கூட்டத்தில் பு.ஜ.தொ.மு. முன்னணியாளர்களும் கமாஸ் வெக்ட்ரா ஆலை யின் தொழிற்சங்க முன்னணியாளர்களும் சிறப் புரையாற்றினர். தொழிலாளர்கள் குடும்பத் தோடு பங்கேற்ற இந்த விழா வர்க்க உணர்வை பறைசாற்றுவதாக அமைந்தது.

**தஞ்சையில்...**

ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து நவம்பர் புரட்சிநாள் விழாவை உணர்வோடு நடத்தின. மானோஜிப் பட்டி உப்பிலி மண்டபம் அருகில் பட்டாசு

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 2
டிசம்பர் 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## 2 ஜி அலைக்கற்றை ஊழல்:

# தனியார்மயக் கொள்ளையின் புதிய சாதனை!

நாட்டையே அதிரவைத்து எல்லோரையும் மிரள வைத்திருக்கிறது, இந்தியாவில் இதுவரை நடந்த ஊழல்களில் இதுவே மிகப் பெரியது என்று சித்தரிக்கப்படும் அலைக்கற்றை ஊழல். இந்த ஊழலால் அரசுக்கு ரூ. 1,76,000 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த 2008-ஆம் ஆண்டிலிருந்து ஸ்பெக்ட்ரம் எனப்படும் அலைக்கற்றை ஊழல் பற்றி ஊடகங்களில் அவ்வப்போது வெளிவந்த போதிலும், இதில் மக்களின் கவனம் திரும்பிவிடாதபடி காங்கிரசும் தி.மு.க.வும் கவனித்துக் கொண்டன. கருணாநிதி குடும்பச் சண்டையில் இந்த ஊழல் மீண்டும் புகையத் தொடங்கிய போதிலும், பங்காளிகளுக்கிடையே ஏற்பட்ட தற்காலிக சமரசத்துக்குப் பின்னர் அது ஈரப் போர்வையால் மூடப்பட்டது. நீதிமன்றத்தின் கண்டனங்கள், கணக்கு தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், ஊடகங்கள் மூலம் வெளிச்சத்துக்கு வந்த தொலைபேசி உரையாடல்கள் முதலானவற்றைத் தொடர்ந்து இந்த ஊழல் மீண்டும் பரபரப்பாகி, தொலைத்தொடர்புத் துறையின் தி.மு.க. அமைச்சரான ராசா இப்போது பதவி விலகியுள்ளார்.

ஒயர்லெஸ் எனப்படும் கம்பியில்லா செல்போன்கள் இயங்க ஸ்பெக்ட்ரம் என்ற அலைக்கற்றைக் கதிர்கள் அவசியம். வான்வெளியில் உள்ள ரேடியோ ஃபிரீக்வன்சி ஸ்பெக்ட்ரம் எனும் அலைவரிசையைக் கொண்டு செல்போன்களை இயக்க முடியும். தனியார்மயமும் தாராளமயமும் திணிக்கப்பட்ட பிறகு, 2001 முதல் பொதுச்சொத்தான அலைக்கற்றைத் தனியாருக்கு ஒதுக்கித் தரப்பட்டதில் அரசுக்கு பல்லாயிரம் கோடி இழப்பை ஏற்படுத்தி, அனைத்து ஓட்டுக்கட்சிகளும் கோடிகளைக் குவித்துக் கொண்டன.

பின்னர், புகைப்படங்கள் - வீடியோக்கள் போன்றவற்றைப் பரிமாறிக் கொள்ளும் புதிய அம்சங்கள் கொண்ட இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை (2ஜி ஸ்பெக்ட்ரம்) அறிவியல் வளர்ச்சியில் வந்தது. இதற்கான ஒதுக்கீட்டில் தொலைத்தொடர்புத் துறையின் அமைச்சரான ராசா, தனியார் நிறுவனங்களுக்கு செய்த ஒதுக்கீட்டில் ரூ. 1,76,000 கோடி அளவுக்கு அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பது குற்றச்சாட்டு. இவ்வளவு பெரிய இழப்பை ஏற்படுத்திய ராசாவோ, ''நான் எந்தக் கையாடலும் செய்யவில்லை, சட்டபூர்வமாகத்தான் செய்துள்ளேன், பிரதமரிடம் தெரிவித்துவிட்டுத்தான் செய்தேன்'' என்கிறார்.

ஆனால், 2ஜி அலைக்கற்றை விற்பனை குறித்து அரசின் தணிக்கைச் செயலாளரின் யோசனைகள், பிரதமரின் கடிதம், சட்டம் மற்றும் நிதி அமைச்சகங்களின் கருத்துக்கள், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் கருத்துக்கள் எனப் பலவற்றையும் அமைச்சர் ராசா புறக்கணித்துள்ளார். 2001-இல் பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் தனியாருக்கு அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்ட அதே விலைக்கு எந்த மாற்றமும் இல்லாமல் 2008-இல் இரண்டாம் தலைமுறை அலைக்கற்றையைத் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளார். வெளிப்படையான ஏல முறையைப் புறக்கணித்து முதலில் வருபவர்களுக்கு மட்டுமே உரிமம் என்ற அடிப்படையில் 122 பேருக்கு ஒரே நாளில் அதிரடியாக உரிமம் வழங்கினார். தொலைத் தொடர்புத் துறையில் எந்த அனுபவமும் இல்லாத பெயர் தெரியாத தனியார் கட்டுமான நிறுவனங்களுக்கும் வீட்டுமனை நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்து கொடுத்தார். அந்த நிறுவனங்கள் அடுத்த நிமிடமே அந்த ஒதுக்கீட்டை



படிப்பகம்

www.padippakam.com



தனியார்மயக் கொள்ளையின் புதிய சாதனை: அரசுக்கு ரூ. 1,76,000 கோடி இழப்பை ஏற்படுத்திய 2 ஜி அலைக்கற்றை ஊழலில் சிக்கிப் பதவி பறிக்கப்பட்டுள்ள முன்னாள் மைய அமைச்சர் ராசா.

வேறு நிறுவனங்களுக்கு விற்றுக் கொள்ள தாராள அனுமதியும் அளித்தார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ராசா இதுவரை பதிலளிக்கவில்லை. இதில் ராசாவும் ராசாவுக்குப் பின்னால் உள்ளவர்களும் ஆதாயமடைந்தது எத்தனை கோடிகள் என்பதும் இதுவரை தெரியவில்லை.

ராசாவின் ஒப்புதலுடன்தான் தொலைத்தொடர்புத் துறையில் எந்த அனுபவமும் இல்லாத ஸ்வான், யுனிடெக் முதலான வீட்டுமனை நிறுவனங்களுக்கு அலைக்கற்றைகள் ஒதுக்கப்பட்டன. ஷாகித் பாவ்லா, வினோத் கோயங்கா ஆகியோருக்குச் சொந்தமான ஸ்வான் டெலிகாம், 1,537 கோடி கொடுத்து 13 தொலைத்தொடர்பு வட்டங்களைப் பெற்றது. மொரீஷியசைச் சேர்ந்த எடிசலாட் என்ற நிறுவனத்துக்கு ஸ்வான் டெலிகாம் நிறுவனம் தனது 44.73 சதவீதப் பங்குகளை ரூ.3,217 கோடிகளுக்கு விற்றது. இதன்படி பார்த்தால், ஸ்வான் நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட அலைக்கற்றையின் மதிப்பு ரூ.7,192 கோடிகளாகும். இப்படி யுனிடெக், எஸ் டெல், டாடா டெலிசர்வீஸ் - எனப் பல்வேறு நிறுவனங்கள் தமது பங்குகளைப் பல்லாயிரம் கோடிகளுக்கு உடனடியாகவே விற்று ஏப்பம் விட்டன. இந்த உத்தேச மதிப்பை வைத்துத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை 1,76,000 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறுகிறது. ஆனால் அரசுக்குக் கிடைத்ததோ வெறும் ரூ.9,014 கோடிகள்தான்.

ஒரு முதலாளி இலஞ்சம் கொடுத்து உரிமம் அல்லது ஒப்பந்தத்தைப் பெறுவது தவறல்ல; அது அந்த முதலாளியின் தொழில் முனைப்பு; அந்த உரிமத்தை அந்த முதலாளி ஊக வணிகத்தில் விட்டு, கூடுதலாக மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளலாம், இலாபமடையலாம்; அது தவறில்லை என்பதுதான் தனியார்மய- தாராளமயக் கொள்கை. அதன்படியே 2ஜி அலைக்கற்றையை அடிமாட்டு விலைக்கு வாங்கி, அதை ஊக வணிகத்தின் மூலம் பல்லாயிரம் கோடிகளுக்குப் பல முதலாளிகள் விற்றுக் கொழுத்த ஆதாயம் அடைந்திருப்பதை எப்படித் தவறானது, முறைகேடானதென்று குற்றம் சாட்டமுடியும் என்பதுதான் தனியார்மயத் தாசர்களும் கார்ப்பரேட் முதலாளிகளும் எழுப்பும் கேள்வி.

# அரசை ஆட்டுவிக்கும் அதிகாரத் தரகர்கள்

மக்கள் தொடர்பு அதிகாரி, லயசன் ஆபீசர் என்றெல்லாம் குறிப்பிடப்படும் அதிகாரத் தரகர்கள், அரசாங்கத்தில் எந்தக் காரியமானாலும் செய்து முடிக்கும் வல்லமை கொண்டவர்கள்; அதிகாரத் தரகர்கள் மூலமாகப் போனால்தான் அரசாங்கத்தின் நெடிய கதவுகள் திறக்கும். பெருமுதலாளிகள் ஒரு ஒப்பந்தத்தை முடிக்கவோ, போட்டியாளர்களைக் கழுத்தறுக்கவோ, விதிமுறைகளை மீறி ஒரு புதிய தொழில் உரிமம் பெறவோ, தங்களுக்குச் சாதகமாக அரசின் கொள்கைகளை மாற்றவோ அதிகாரத் தரகர்களை அமர்த்திக் கொள்கிறார்கள். அதிகாரத் தரகு வேலைக்கான செலவுகளை பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் ''அபிவிருத்தி வேலைகளுக்கான செலவுகள்'' என்று குறிப்பிடுகின்றன. முதலாளித்துவ அரசியலமைப்பு முறையின் பிரிக்க முடியாத அங்கம்தான் இந்த அதிகாரத் தரகர்கள். இத்தகைய அதிகாரத் தரகர்களில் ஒருவர்தான் நீரா ராடியா. குறிப்பாக ரத்தன் டாடா, முகேஷ் அம்பானி நிறுவனங்களுக்கு உரிமங்கள், ஒப்பந்தங்கள் முதலானவற்றை அதிகார வர்க்கத்துடன் பேசி முடித்துத் தரும் வேலைகளை இவர் செய்துள்ளார். இப்போது நீரா ராடியாவின் தொலைபேசி உரையாடல் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பான விவகாரமாகியுள்ளது.

2009-இல் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியமைத்த போது, யார் யாருக்கு என்ன அமைச்சர் பதவி, என்ன துறை ஒதுக்கப்படும், தொலைத்தொடர்பு அமைச்சர் நியமனத்தின் பின்னணியில் அம்பானியும் டாடாவும் எப்படி காய் நகர்த்துகிறார்கள் என்ற விவரங்களும், நீரா ராடியா இதில் முக்கிய பங்காற்றியிருப்பதையும் அவரது தொலைபேசி உரையாடல்கள் நிரூபித்துக் காட்டுகின்றன. பத்மசிறீ விருது பெற்ற என்.டி.டிவி-யின் நிர்வாக ஆசிரியரான பர்கா தத், பிரபல பத்திரிகையாளரான வீர் சங்வி ஆகியோர் நீரா ராடியாவுடன் நடத்தியுள்ள தொலைபேசி உரையாடல்கள், பத்திரிகையாளர்கள் எப்படி கார்ப்பரேட் தரகர்களாக உள்ளனர் என்பதை அம்பலப்படுத்தியுள்ளன. கார்ப்பரேட் நிறுவனங்களும் பத்திரிகையாளர்களும் கள்ளக்கூட்டுச் சேர்ந்து உருவாக்கும் செய்திகளே நாளேடுகளிலும் ஊடகங்களிலும் பிரபலமாக்கப்படுவதையும் இது நிரூபித்துக் காட்டுகிறது.

முகேஷ் அம்பானியின் சகோதரரான அனில் அம்பானி, தனது அண்ணனுடன் ஏற்பட்ட தொழில் போட்டியின் காரணமாக, நீராவைச் சிக்க வைத்தால் முகேஷின் வேகமான வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என்று கணக்கிட்டுச் சில ஊடகங்களுக்கு கோடிகளை வாரியிறைத்ததன் விளைவாக, இப்போது நீரா ராடியாவின் தொலைபேசி உரையாடல்கள் கசியத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மறுபுறம் தரகுப் பெருமுதலாளியான டாடா, தனது நிறுவனத்தின் மக்கள்தொடர்பாளராக - அதிகாரத் தரகராகச் செயல்பட்ட நீரா ராடியாவுடன் தான் உரையாடியதை அமலாக்கத்



படிப்பகம்

www.padippakam.com

**காடுகள், மலைகள், கனிம வளங்கள், ஆறுகள், குளங்கள், மணல், தண்ணீர் முதலான பொதுச்சொத்துக்கள் அற்ப விலைக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டதைப் போலத்தான் அலைக்கற்றையும் அற்ப விலைக்கு பெருமுதலாளிகளுக்குத் தாரைவார்க்கப்பட்டுள்ளது.**

அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை, அவற்றின் உண்மை மதிப்பைவிடக் குறைந்த விலைக்குத் தனியார் முதலாளிகளுக்கு விற்றதன் மூலம் தனியார்மயம்-தாராளமயம் தொடங்கப்பட்ட 1991-92 ஆம் ஆண்டிலேயே அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ,3442 கோடிகள். 2000 ஆண்டு முதல் 2002 -க்குள் பால்கோ, இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம், வி.எஸ்.என்.எல், ஐ.பி.சி.எல், உள்ளிட்ட 9 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்றபோது, அந்நிறுவனங்களின் உண்மை மதிப்பை வேண்டுமென்றே குறைத்துக் காட்டி அரசுக்குப் பல்லாயிரம் கோடி இழப்பையும் முதலாளிகளுக்குக் கொழுத்த ஆதாயத்தையும் ஏற்படுத்தியதாக அரசின் கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கையே குற்றம் சாட்டியது.

நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் தொலைத்தொடர்புத் துறையில் பன்னாட்டு நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் நுழைந்து சூறையாடுவதற்கு வசதியாக தேசியத் தொலைத்தொடர்புக் கொள்கை கொண்டுவரப் பட்டது. அப்போது நடந்த ஏலத்தில் அடுத்த பத்தாண்டுகளில் ரூ.9,45,000 கோடி வருமானம் தரத்தக்க இச்சேவைப் பிரிவுகள் டாடா, எஸ்ஸார், ரிலையன்சு, பார்திஏர்டெல் நிறுவனங்களுக்கு வெறும் 1,15,000 கோடி ரூபாய்க்கு அடிமாட்டு விலைக்கு தாரை வார்க்கப்பட்டன. மக்கள் வரிப்பணத்தில் உருவான தொலைத் தொடர்புத் துறையின் வலைப்பின்னலைப் பயன்படுத்திக் கொண்டு கொழுத்த ஆதாயமடைந்த இத்தகைய நிறுவனங்கள், அரசுக்குச் செலுத்த வேண்டிய உரிமத் தொகை நிலுவையான ஏறத்தாழ 8,000 கோடிகளைக் கூடத் தள்ளுபடி செய்ய வைத்து ஏப்பம் விட்டன. பின்னர் வந்த வாஜ்பாய் அரசு தனியார்மய-தாராளமயத்தைத் தீவிரப்படுத்தி புதிய தொலைத்தொடர்புக் கொள்கையை அறிவித்தது. இக்கொள்கையால் அடுத்த பத்தாண்டுகளில் அரசுகக்கு ரூ.50,000 கோடி வருவாய் இழப்பு ஏற்படும் என்று குற்றச்சாட்டுகளும் புகார்களும் வந்த போதிலும் அவசரஅவசரமாக இதை அறிவித்து முதலாளிகளின் கொள்ளைக்குக் காவடி தூக்கியது, பா.ஜ.க.

இப்படி காங்கிரசு மற்றும் பா.ஜ.க.வின் கூட்டணி ஆட்சிகள் தொலைத் தொடர்புத் துறை மட்டுமின்றி, காடுகள், மலைகள், கனிம வளங்கள், ஆறுகள், குளங்கள், மணல், தண்ணீர் முதலான அனைத்தையும் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அற்ப விலைக்குத் தாரைவார்த்துக் கொடுத்தன. கிருஷ்ணா-கோதாவரி இயற்கை எரிவாயுப் படுகையை

துறையும் வருமானவரித் துறையும் இரகசியமாகப் பதிவு செய்து, அலைக்கற்றை ஊழலுக்குத் தொடர்பில்லாத தனிப்பட்ட விவகாரங்களை வெளியிடுவது சட்டப்படி குற்றமாகும் என்று சாடுகிறார். அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகத் தனிநபர் உரிமையையும் உச்ச நீதிமன்றம் குறிப்பிடுவதால், நீரா ராடியாவுடன் தான் தொலைபேசியில் உரையாடியாதை ஊடகங்களில் வெளியிடுவது தன்னுடைய தனிநபர் உரிமையில் தலையிடும் மனித உரிமை மீறலாகும் என்று சீறுகிறார். அரசின் பொறுப்பிலுள்ள இந்த உரையாடல் பதிவுகளை வெளியே கசிய விட்டது யார், அல்லது யார் திருடினார்கள் என்பதைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார். இதையொட்டி, உச்சநீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடுத்துள்ளார்.




குஜராத்தில் நானோ கார் தொழிற்சாலை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிகழ்ச்சியில் ரத்தன் டாடா, குஜராத் முதல்வர் மோடியுடன் அதிகாரத் தரகர் நீரா ராடியா (இடது ஓரம்).

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் போது அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து விளம்பரம் திரட்ட அரசே இத்தகைய அதிகாரத் தரகு நிறுவனங்களை அமர்த்திக் கொண்டது. அந்தத் தரகர்கள் மூலம் பல அந்நியக் கம்பெனிகள் கோடிகளை விழுங்கிக் கொள்ளையடிக்க அரசே உடந்தையாக நின்றுள்ளது. அது நியாயம் என்றால், அதே தரகு வேலையைச் செய்துள்ள நீரா ராடியா மட்டும் எப்படிக் குற்றவாளியாக முடியும்? இப்போது அமலாக்கப் பிரிவும் மையப்புலனாய்வுத் துறையும் நீரா ராடியாவிடம் விசாரிப்பதாக ஊடகங்கள் பரபரப்பூட்டினாலும், கொள்ளையடித்த முதலாளிகளிடமிருந்து பறிமுதல் செய்யவோ, தண்டிக்கவோ அடிப்படை ஏதாவது இருக்கிறதா? டாடா போன்ற தரகுப் பெருமுதலாளிகளின் பொதுக்கருத்துக்கு எதிராக அரசும் நீதித்துறையும் விசாரணை நடத்தி உண்மைகளை வெளிக் கொணரும் என்று நம்பத்தான் முடியுமா?



படிப்பகம்

www.padippakam.com



பகற்கொள்ளையர்கள்: வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புகளை உள்நாட்டு அழைப்புகளாகக் காட்டி மோசடி செய்து, அரசுக்கு ஒரு லட்சம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்படுத்திய ரிலையன்சின் அம்பானி சகோதரர்கள்.

அம்பானிக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததோடு, வரிச் சலுகைகளையும் வாரியிறைத்தது அரசு. வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புகளை உள்நாட்டு அழைப்புகளாகக் காட்டி ரிலையன்சு நடத்திய மோசடியால் அரசுக்கு ஒரு லட்சம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்ட போதிலும், ரிலையன்சுக்கு வெறும் அபராதம் மட்டுமே விதிக்கப்பட்டது. போஸ்கோ நிறுவனம், ஒரிசாவில் ஆலையை நிறுவுவதற்கான வெகுமதியாக, ஓராண்டுக்கு ஏறத்தாழ 96,000 கோடி மதிப்புடைய இரும்புத் தாதுவை அள்ளிச் செல்ல ஒப்பந்தம் போடப்பட்டது.

அதேபோலத்தான் விண்வெளியில் உள்ள பொதுச் சொத்தான அலைக்கற்றையும் அற்ப விலைக்கு பெருமுதலாளிகளுக்குத் தாரைவார்க்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே தொலைத் தொடர்பு அமைச்சர்களாக இருந்த சுக்ராம், பிரமோத் மகஜன், தயாநிதி மாறன் ஆகியோர் பெருமுதலாளிகளின் சூறையாடலுக்குத் துணைநின்று ஆதாயமடைந்துள்ளனர். பெருமுதலாளிகளுக்கிடையிலான நாய்ச்சண்டையாலும், பங்கு போடுவதில் ஏற்பட்ட தகராறினாலும் இப்போது அமைச்சர் ராசா சிக்கிக் கொண்டு பலிகிடாவாக்கப்பட்டுவிட்டார். பல்லாயிரம் கோடிகளை ஏப்பம் விட்ட பன்னாட்டுக் கம்பெனிகளும், தரகுப் பெருமுதலாளித்து கும்பல்களும், அதிகார வர்க்கமும், காங்கிரசும், ஊடகங்களும் இப்போது விவகாரம் அம்பலமானவுடன், பந்தி பரிமாறிய ராசாவை மட்டும் பலிகொடுத்துவிட்டு, மற்றவர்களைத் தப்புவிக்க முயற்சிக்கின்றன. ஊழல் மோசடியில் சிக்கியுள்ள அமைச்சர் ராசாவைத் தண்டிப்பதென்பது மொத்த விவகாரத்தின் ஒரு பகுதிதான். ஆனால், இத்தகைய தனியார்மயச் சூறையாடல்களைக் கொள்கையாகக் கொண்டு அரசு நடைமுறைப்படுத்தி வருவதுதான் அதைவிட முக்கியமானது.

இத்தகைய கொள்ளைகள் அம்பலமாகி, விசாரணையின் போது நீதித்துறை கேள்விகள் எழுப்புவதை வைத்து ஏதோ கிடுக்கிப்பிடி போடுவதாகவும் குற்றவாளிகள் தப்பிக்கவே முடியாது என்பது போலவும் ஊடகங்கள் சூடேற்றுகின்றன. நீதித்துறையின் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை வரவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இவை ஊதிப் பெருக்கப்படுகின்றன. ஆனால்,விசாரணயின் முடிவில் வழங்கப்படும் தீர்ப்பு வேறு விதமாகவே உள்ளது. அரசுத்துறை நிறுவனங்கள், பொதுச் சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு விற்று காசாக்குவது என்பது தான் அரசின் கொள்கை. அக்கொள்கை விசயத்தில் நாங்கள் தலையிட முடியாது என்பதுதான் ஏற்கெனவே பல்வேறு வழக்குகளில் நீதித்துறை தெரிவித்துள்ள கருத்து. தண்ணீரை உறிஞ்சிக் கொள்ளையிடுவது சட்டப்படி குற்றமல்ல, ஒரு முதலாளித்துவ நிறுவனத்தின் வர்த்தகச் சுதந்திரத்தில் நீதித்துறை தலையிட முடியாது என்று கோகோ கோலாவுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது, கேரள உயர்நீதிமன்றம்.

இப்போது நாடாளுமன்றத்தில் பெருங்கூச்சல் போடும் ஓட்டுக்கட்சிகள் எவையும் அலைக்கற்றை ஊழலால் ஏற்பட்டுள்ள இழப்பு ரூ.1.76 லட்சம் கோடிகளைக் கொள்ளையடித்த பெருமுதலாளிகளிடமிருந்து அதனைப் பறிமுதல் செய் என்று கோரவில்லை. தொடரும் இத்தகைய பகற்கொள்ளைக்கும் சூறையாடலுக்கும் காரணமான தனியார்மய -தாராளமயக் கொள்கையை எதிர்க்க முன்வரவுமில்லை. மாறாக, கூட்டுச் சேர்ந்து கும்மியடிக்க நாடாளுமன்ற கூட்டு விசாரணைக் குழுவை நிறுவக் கோருகின்றன. ஆனால், 1987-இல் போபர்ஸ் ஊழல் தொடங்கி இதுவரை அமைக்கப்பட்ட நான்கு நாடாளுமன்ற கூட்டு விசாரணைக் குழுக்களின் விசாரணையில் ஒருவர்கூடக் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்படவில்லை.

பெருகிவரும் இத்தகைய கொள்ளைகளுக்கும் ஊழல்களுக்கும் மோசடி முறைகேடுகளுக்கும் ஊற்றுக்கண்ணாக இருப்பது, தனியார்ம-தாராளமயக் கொள்கை. அதைச் சட்டபூர்வமாக்குவதுதான் இன்றைய முதலாளித்துவ நாடாளுமன்ற அரசியலமைப்பு முறை. இத்தகைய கொள்ளைக்கும் ஊழலுக்கு உரிமம் கோருவதுதான் ஓட்டுச்சீட்டு முறை. மோசடிகளை மூடிமறைக்கவும், ஊழலில் ஊறித்திளைக்கவும்தான் இன்றைய நாடாளுமன்ற அரசியல் அமைப்பு முறையும் அதன் சட்டம், நீதி, போலீசு, புலனாய்வு அமைப்புகளும் துணை நிற்கின்றன. இந்நிலையில், ஓட்டுப் பொறுக்கிகளைப் புறக்கணித்துவிட்டு, தனியார்மயம்-தாராளமயம் என்னும் மறுகாலனியாதிக்கக் கொள்கையையும் அதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தும் இன்றைய அரசியலமைப்பு முறைக்கும் எதிராகப் போராடுவது ஒன்றுதான், தொடரும் இத்தகைய தனியார் பெருமுதலாளிகளின் கொள்ளையையும் சூறையாடல்களையும் தடுப்பதற்கான ஒரேவழி. ●



படிப்பகம்

## ஆதர்ஷ் வீட்டுமனை ஊழல்:

# இராணுவத்தின் தேசபக்தி சந்தி சிரித்தது!

**ஊழலில் ஊறித் திளைப்பதில் இந்திய இராணுவம் விதிவிலக்கானதல்ல என்பது மீண்டும் நிரூபணமாகிவிட்டது.**

பல -று இந்தியச் சிப்பாய்களைப் பலிகொண்ட கார்கில் போர் மக்களுக்கு இலவசமாக வழங்கியது வெறும் தேசபக்தியை மட்டும்தான். ஆனால் இப்போர் வீரர்களுக்குக் காலணிகள் வாங்கியதிலும், செத்துப் போன வீரர்களுக்குச் சவப்பெட்டி வாங்கியதிலும், பல கோடிகளை சுருட்டிக்கொள்ள ஆளும் கட்சிக்குப் பயன்பட்டது. எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத ஊழல்களை அரங்கேற்ற இன்னும் அப்போர் பயன்படுகிறது என்பதற்கு இன்னொரு ஆதாரம் ஆதர்ஷ் ஊழல்.

மும்பை-கொலாபா பகுதியில் இருக்கும் இராணுவத்துக்கு சொந்தமான நிலத்தில் ஆறு மாடிகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பைக் கட்டி கார்கில் போர்வீரர்களுக்கும், அப்போரில் மாண்டவர்களின் மனைவிகளுக்கும் தரப்போவதாக ஒரு திட்டத்தை முன்வைத்து ஆதர்ஷ் கூட்டுறவு குடியிருப்பு சொசைட்டியை உருவாக்கியது மகாராட்டிர அரசு. இது தொடர்பாக எழுந்துள்ள ஊழல் விவகாரத்தில், நாளுக்கு ஒரு மோசடி குறித்த விவரம் வெளிவந்து நாறிக் கொண்டிருக்கிறது.

மகாராட்டிர முதல்வர் அசோக் சவான் தனது மாமியாருக்கும் மருமகளுக்கும் இந்தக் குடியிருப்பில் வீடு ஒதுக்கியிருப்பது அம்பலமாகவே, சவானைப் பதவி விலக வைத்து அதைக் காட்டியே உத்தம வேடம் போட முனைந்தது, காங்கிரசு. ஆனால் உள்ளே செல்லச் செல்ல, காங்கிரசு, பாரதிய ஜனதா, சிவசேனா, அதிகார வர்க்கம், இராணுவ உயர் அதிகாரிகள் என்று மிகப் பிரம்மாண்டமானதொரு ஊழல் வலைப்பின்னல் அம்பலமாகத் தொடங்கியிருக்கிறது.

முதலில் 6 மாடிகள், 40 வீடுகள் என்று போடப்பட்ட திட்டம், சுற்றுச்சூழல் விதிகளுக்கு முரணாக 31 மாடிகள், 103 வீடுகள் என்று அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு அதிகரிக்கப்பட்டபின், 60% வீடுகளை கார்கில் தியாகிகளுக்கும் மீதமுள்ள 40% வீடுகளைப் பொதுமக்களுக்கும் ஒதுக்குவது என்று விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 103 வீடுகளில் 34 பேர் மட்டும்தான் இராணுவத்தை சேர்ந்தவர்கள். அதிலும் வெறும் 3 பேர் மட்டும்தான் கார்கில் போர் முனையில் இருந்தவர்கள்.

முன்னாள் மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு (சிவசேனா), முன்னாள் முதல்வர் சுசில் குமார் ஷின்டே (தற்போது மத்திய அமைச்சர்), பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் நிதின் கட்காரி போன்ற சர்வகட்சிப் பிரமுகர்களும் ஆதர்ஷில் வீட்டுமனை ஒதுக்கீடு பெற்றிருப்பது அம்பலமாகியிருக்கின்றது.

ஒட்டுப்பொறுக்கிகளின் மோசடியைக் காட்டிலும், செத்துப்போன சிப்பாய்களின் உடலைக் காட்டி இராணுவ உயர் அதிகாரிகள் இதில் நடத்தியிருக்கும் கொள்ளைதான் மிகவும் கீழ்த்தரமானது. தரைப்படை முன்னாள் தலைமை தளபதிகள் என்.சி.விஜ், தீபக் கபூர், முன்னாள் கடற்படை தளபதி மாதவேந்திர சிங், வைஸ் அட்மிரல் மதன்ஜித் சிங், மேஜர் ஜெனரல்

போலிச் சான்றிதழ்களைக் கொடுத்து ஆதர்ஷ் குடியிருப்பில் ஒதுக்கீடு பெற்ற இந்திய இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதிகள் என்.சி.விஜ், தீபக் கபூர், மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி மாதவேந்திர சிங்.





படிப்பகம்

www.padippakam.com

ஆர்.கே.ஹூடா ஆகிய அதி உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் இக்குடியிருப்பில் வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

குடியிருப்பில் இடம் ஒதுக்க வேண்டுமானால், மும்பையில் தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் குடியிருந்திருக்க வேண்டும். ஏற்கெனவே சொந்த வீடு இருக்கக் கூடாது என்ற விதிமுறைகள் இருந்த போதிலும், குர்கானில் 6 பிளாட்டுகளும் மும்பையில் லோகன்ட்வாலாவில் ஒரு வீடும் வைத்திருக்கும் முன்னாள் தலைமைத் தளபதி தீபக் கபூர், அவை அனைத்தையும் மறைத்துப் பொய்ச் சான்றிதழ் கொடுத்துள்ளார். ஆண்டு வருமானம் குறிப்பிட்ட அளவுக்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டும்தான் வீடு ஒதுக்கப்படும் என்று விதிமுறை இருந்ததால், எல்லா இராணுவத் தளபதிகளும் தங்களது சம்பளச் சான்றிதழை மறைத்து, போர்ஜரி வேலை செய்து சம்பளத்தைக் குறைத்துக் காட்டிச் சான்றிதழ் கொடுத்துள்ளனர்.

பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரும், நாக்பூரைச் சேர்ந்த பெரும் தொழிலதிபருமான அஜய் சஞ்சேதியின் மகன், மற்றும் அவரது கார் ஓட்டுனர் ஆகியோரது பெயர்களிலும் ஆதர்ஷ் குடியிருப்பில் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ''மாதச்சம்பளம் ரூ.8000 என்று குறிப்பிட்டுள்ள கார் டிரைவர் சுதாகர் மட்கே, 60 இலட்சம் மதிப்புள்ள ஆதர்ஷ் வீட்டை எப்படி வாங்க முடியும்? இந்த நபர் கட்காரியுடைய பினாமி'' என்று குற்றம் சாட்டியிருக்கிறார் காங்கிரசின் மனிஷ் திவாரி.

விதிமுறைகளை மீறி இந்தக் குடியிருப்புக்கு அனுமதி அளித்த, 2004-இல் மாவட்ட ஆட்சியராக இருந்த பிரதிப் வியாஸின் மனைவி நீனா வியாஸ், நகர்ப்புற வளர்ச்சித்துறையின் துணைச் செயலர் பி.வி. தேஷ்முக் என ஒரு பெரிய அதிகார வர்க்கக் கும்பலும் இக்குடியிருப்பில் தமக்கு இடம் ஒதுக்கிக் கொண்டுள்ளது.

கடலிலிருந்து 500 மீட்டர் தூரம் வரையில் கடலோர ஒழுங்குமுறைப் பிராந்தியம் என்றும் அந்த இடத்தில் வீடுகளோ கட்டிடங்களோ கட்டுவது சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு எதிரானது என்றும் கூறி மீனவர் குடியிருப்புகள் மற்றும் சேரிப்பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரம் வீடுகள் மும்பையில் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், தடை செய்யப்பட்ட இந்தப் பகுதியில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் எவற்றின் மீதும் அரசு கைவைக்கவில்லை.

மேற்கு கடற்கரை ஓரம் மும்பை முதல் கோவா வரையிலான இயற்கை எழில் கொஞ்சும் கடலோரப் பகுதி, உலகிலேயே ரியல் எஸ்டேட் விலை உச்சத்திலிருக்கும் பகுதிகளில் ஒன்று. இந்தக் கடலோரப் பகுதியில் சுற்றுச்சூழல் துறையின் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டிருக்கும் குடியிருப்புதான் ஆதர்ஷ் அடுக்குமாடிக் குடியிருப்பு.

''ஏழைகளின் குடிசைகளை இடித்துத் தள்ளத் தயங்காத மகாராட்டிர அரசு, சட்டவிரோதமான ஆதர்ஷ் குடியிருப்பை இடித்துத் தள்ள மறுப்பது ஏன்?'' என்ற கேள்வி எழுப்பி, இவ்வூழலுக்கு எதிராக மும்பய் நகர ஏழைகளைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தும் மேதாபட்கர்.




கடற்படை துணை அட்மிரல் சஞ்சீவ் பாசின், ''இக்குடியிருப்பு கட்டப்பட்டுள்ள இடம், கப்பல்தளத்துக்கு வெகு அருகில் தாக்குதல் எல்லைக்குள் இருப்பதால், கடற்படைத் தளத்தை உளவு பார்ப்பது எளிதென்றும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும்'' இராணுவ அமைச்சகத்துக்கு எழுதியதால்தான் இத்திட்டம் விசாரிக்கப்பட்டு, தளபதிகளும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்தது. சஞ்சீவ் பாசின், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் மீதும் அனுமதித்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை தேவை என்றும் குறிப்பு எழுதியிருந்தார்.

ஆதர்ஷ் மோசடிகள் பற்றி அறிவதற்காக பூனாவைச் சேர்ந்த விஹார் துர்வே என்பவர், தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் இத்திட்டத்தில் பயனடைந்தவர்கள் பற்றிக் கேட்டிருந்தார். அவருக்கு இரண்டுமுறை தகவல் மறுக்கப்பட்டது. காரணம், மராட்டிய அரசின் தகவல் கமிஷனர் ரமானந்த் திவாரியின் மகனுக்கும் ஆதர்சில் வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது பின்னர் தெரியவந்தது.

தற்போது முதலமைச்சர் மாற்றம், சி.பி.ஐ விசாரணை என்ற நாடகங்கள் நடந்து கொண்டிருக்கும் நிலையில், கொலாபாவில் உள்ள இராணுவ எஸ்டேட் அலுவலகத்தின் கோப்புகளில் முக்கியமான ஆவணங்கள் பல காணாமல் போயிருக்



படிப்பகம்

www.padippakam.com

**போர் முனையில் உயிர் விட்ட தனது சிப்பாய்களுடைய பிணத்தைக் காட்டிக் கோடிக்கணக்கில் சுருட்டியிருக்கும் இராணுவ உயர் அதிகாரிகள், ஓட்டுப் பொறுக்கிகளைக் காட்டிலும் தாங்கள் கேவலமானவர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.**

கின்றன. இராணுவத்துக்குச் சொந்தமான அந்த நிலத்தில் அடுக்குமாடி வீடு கட்டுவதற்கு மார்ச் 2000-இல் வழங்கப்பட்ட தடையில்லா சான்றிதழைக் காணவில்லை. முதன்முதலில் எந்தெந்த சிப்பாய்களுக்கு வீடு ஒதுக்குவதாகச் சொல்லி இந்தத் திட்ட முன்வரைவு முன்வைக்கப்பட்டதோ, அதனையும் காணவில்லை.

மகாராட்டிர அரசின் நகர்ப்புற வளர்ச்சிச் துறையில் ஆதர்ஷ் சொசைட்டி தொடர்பான கோப்புகளிலும் முக்கியமான காகிதங்களைக் காணவில்லை என்று சி.பி.ஐ. கூறியிருக்கிறது.

இரண்டு முன்னாள் முதல்வர்களும், மூத்த அதிகாரிகளும் கையொப்பமிட்ட ஆணைகள், சுற்றுச்சூழல் விதிகளைத் தளர்த்தி நகர்ப்புற வளர்ச்சி இலாகா கொடுத்த தடையில்லாச் சான்றிதழ், சாலையின் அகலத்தை 60 மீட்டரிலிருந்து 18 மீட்டராக குறைத்துக் கொண்டு, மீதியுள்ள 42 மீட்டர் சாலையை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டுவதற்கு ஆதர்ஷ் சொசைட்டிக்கு அரசால் வழங்கப்பட்ட அனுமதி, 6 மாடிகளை 31 மாடிகளாக உயர்த்தி கட்டுவதற்கு வழங்கப்பட்ட அனுமதி - இவை தொடர்பான ஆவணங்கள் காணவில்லை என்று சி.பி.ஐ. தெரிவித்திருக்கிறது.

ஆதர்ஷ் ஊழலைத் தொடர்ந்து, இதைவிடப் பிரமாண்டமான ரியல் எஸ்டேட் ஊழலான லவாசா ஊழல் அம்பலமாகியிருக்கிறது. விவசாய நிலங்கள், பழங்குடி மக்களின் நிலங்கள் அடங்கிய சுமார் 12,316 ஏக்கர் மலைப்பிராந்தியத்தை மகாராட்டிர அரசு 2001-இல் தாரை வார்த்திருப்பது அம்பலமாகியிருக்கிறது.

''சிறு கடை வியாபாரிகளையும், குடிசை வாசிகளையும் ஆக்கிரமிப்பாளர்கள் என்று கூறி அவர்களுடைய கடைகளையும் வீடுகளையும் இடித்துத் தள்ளும் அரசு, ஆதர்ஷ் உள்ளிட்ட சட்டவிரோத கட்டுமானங்களை இடிக்க மறுப்பது ஏன்?'' என்று கேள்வி எழுப்புகிறார், மேதா பட்கர். தனக்குச் சொந்தமான நிலத்தையே காப்பாற்றிக் கொள்ளமுடியாத இராணுவம், தேசத்தை எப்படிக் காப்பாற்றும் என்று எள்ளி நகையாடுகிறார். மும்பை சாந்தாகுரூஸ் விமான நிலையத்திற்கு அருகிலேயே இராணுவத்துக்குச் சொந்தமான நிலம் ரியல் எஸ்டேட் முதலைகளுக்கு விலை பேசப்பட்டு கட்டிடங்களாக மாறியிருப்பதையும் அம்பலமாக்கியிருக்கிறார்.

நாடு முழுவதும் இராணுவத்துக்கு சொந்தமாக இருக்கும் பல இலட்சம் ஹெக்டேர் நிலங்களில் விலை பேசப்பட்டவை எத்தனை, எத்தனை ஆயிரம் கோடிகளை இராணுவ அதிகாரிகள் விழுங்கியுள்ளார்கள் என்ற விவரங்கள் ஒருக்காலும் வெளியே வரப்போவதில்லை.

ஆதர்ஷ் ஊழல் அம்பலமானவுடன் தலைமைத் தளபதிகள் கபூர், விஜ் ஆகியோர் ''இந்த வீடுகள் சிப்பாய்களுக்கு ஒதுக்கப்பட்டவை என்று எங்களுக்குத் தெரியாது'' என்று பச்சையாகப் புளுகியிருக்கின்றனர். வீடுகளைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் அறிவித்திருக்கின்றனர். தற்போதைய இராணுவத் தலைமைத் தளபதியோ, ''இந்த சிறிய விசயத்தை வைத்துக் கொண்டு இந்திய இராணுவத்தின் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது'' என்று பேசியிருக்கிறார்.

நேர்மை, கட்டுப்பாடு, தியாகம், ஒழுக்கம் என்றெல்லாம் கதை சொல்லித்தான், சிவில் சமூகத்துக்கு மேம்பட்ட கேட்பாரற்ற அதிகாரமாக இராணுவம் பாதுகாக்கப்படுகிறது. பச்சைப் படுகொலைகள் பல அம்பலமாகி, காஷ்மீரே பற்றி எரியும் சூழ்நிலையிலும், ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை எக்காரணம் கொண்டும் இரத்து செய்யக்கூடாது என்றும், தாங்கள் செய்யும் சட்டவிரோதப் படுகொலைகளுக்காக எல்லோரையும் போல நீதிமன்றத்தில் நின்று இராணுவம் பதில் சொல்ல முடியாது என்றும் திமிர்த்தனமாகப் பேசி வருகிறது இராணுவத்தின் அதிகார வர்க்கம்.

ஆனால், கேள்விக்கு அப்பாற்பட்ட புனிதப்பசுவாகச் சித்தரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் இராணுவத்தின் யோக்கியதை ஆதர்ஷ் ஊழலில் சந்தி சிரிக்கிறது. போர் முனையில் உயிர் விட்ட தனது சிப்பாய்களுடைய பிணத்தைக் காட்டி, கோடிக்கணக்கில் சுருட்டியிருக்கும் இராணுவ உயர் அதிகாரிகள், ஓட்டுப் பொறுக்கிகளைக் காட்டிலும் தாங்கள் கேவலமானவர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

பொதுச்சொத்தை கொள்ளையிடுவதற்கான வாய்ப்பைத் திறந்து விட்டிருக்கும் தனியார்மய-தாராளமயக் கொள்கைகள் இராணுவத்தின் உடுப்பையும் களைந்து நிர்வாணமாக்கியிருக்கின்றன. ஆயுதம் முதல் சிப்பாய்களுக்கான அன்றாட ரேசன் வரையில் இராணுவத்துக்காக செய்யப்படும் அனைத்துச் செலவுகளிலும், 10% கமிஷன் என்பது இந்திய இராணுவத்தில் அமல்படுத்தப்படும் எழுதப்படாத விதி. ஆதர்ஷ் ஊழலில் இந்த சதவீதக் கணக்கு கொஞ்சம் அதிகரித்திருக்கிறது. 103-க்கு 100 ஊழல். அதாவது, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 103 வீடுகளில் 3 பேர் மட்டும்தான் கார்கில் போர்முனையில் இருந்தவர்கள்.

ஆதர்ஷ் என்ற இந்திச் சொல்லுக்கு முன்மாதிரி என்று பொருள். தேசத்துக்கே இராணுவம்தான் முன்மாதிரி எனும்போது, இராணுவம் சம்பந்தப்பட்ட ஊழலும் முன்மாதிரியாகத்தானே இருக்கவேண்டும்?

● கதிர்



படிப்பகம்

www.padippakam.com

# நோக்கியாவின் கொலைக் கரங்கள்

**பன்னாட்டு நிறுவனங்கள், தமது உற்பத்தி இலக்கை எட்டுவதற்காகத் தொழிலாளர்களின் உதிரத்தை மட்டுமல்ல, உயிரையும் உறிஞ்சிவிடும் என்பதற்கு நோக்கியா ஆலைத் தொழிலாளி அம்பிகாவின் கொலையே சாட்சி.**

எந்திரன் (ரோபோ) உலக அழகியைக் காதலிப்பது ஒரு அறிவியல் கற்பனைக் கதை. இதை உலகம் முழுவதும் சொல்வதற்காக உலகத் தரத்துக்கு பிரம்மாண்டமாகவும் கோடிகோடியாகக் கொட்டிக் கவர்ச்சியான சினிமாவாகவும் உருவாக்கப்பட்டது.

இன்னொரு எந்திரன் (ரோபோ) சென்னை அருகே நோக்கியா கைபேசி ஆலையில் அம்பிகா என்ற ஒரு இளம் பெண் தொழிலாளியைக் கதறக்கதற கழுத்தை அறுத்துப் படுகொலை செய்தது. இந்த உண்மைச் சம்பவத்தை வெளியில் தெரியாமல் மறைப்பதற்கு ஆலை நிர்வாகம் மட்டுமல்ல, அரசும் செய்தி ஊடகமும் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வெற்றி பெற்றுள்ளன.

மனித இனத்தைச் சேர்ந்த, உயிருள்ள ஒரு பெண்ணைக் காதலித்த எந்திரன் மனித இன மறுஉற்பத்திக்குத் தகுதியற்றவன்; அவனுக்கு இடப்பட்ட கட்டளைகளையும், நெறிமுறைகளையும் மீறிய குற்றத்துக்குத் தண்டனையாக அவன் அங்கம் அங்கமாகப் பிய்த்து எறியப்படுகிறான், கற்பனைக் கதையில். ஆனால், உண்மை வாழ்க்கையில் நடந்ததோ வேறு விதமாக இருந்தது.

தம் கண் முன்னே இரத்தம் பீறிட சக தொழிலாளி கழுத்தறுபடுவதைக் கண்டு ஆத்திரமுற்று ரோபோவை (எந்திரனை) அடித்து நொறுக்கி அவளை மீட்க தொழிலாளர்கள் எத்தணித்தார்கள். அந்த இளம் பெண் தொழிலாளியின் கழுத்தை அறுத்துக் கொண்டிருந்த எந்திரனுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாப்பாக ''செக்யூரிட்டிகள்'' என்ற சீருடை அடியாள்படை நிறுத்தப்பட்டது. சக பெண் தொழிலாளர்கள் மயங்கி விழ, ஆண் தொழிலாளர்கள் ஆத்திரத்தோடு குமுறிக் கொந்தளிக்க அவர்கள் கண் முன்பாகவே குரூரமானதொரு கொலையை நீண்ட நேரம் சாவகாசமாக செய்வதற்கு எந்திரன் அனுமதிக்கப்பட்டான்.

நோக்கியாவின் இலாபவெறிக்குப் பலியான அம்பிகாவின் தாய்.



•••

இந்தியா, சீனா - இரண்டு நாடுகளில் இருக்கும் எல்லா நோக்கியா ஆலைகளும் வரும் டிசம்பர் மாதத் திற்குள் 100 மில்லியன் செல்போன்கள் என்ற இலக்கை அடைவதற்கு, தொழிலாளிகள் இரக்கமின்றி ஒரு எந்திரம் போல வேலை செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள். இந்த இலக்கை அடைவதற்கு அங்காடித் தெரு திரைப் படத்தில் வரும் கொடூரமான சூபர்வைசர் அண்ணாச்சியை விடக் கொடூரமான மேலாள நிர்வாகிகள் வேலை செய்கிறார்கள்.

அக்டோபர் 31 அன்று இரவு பி ஷிப்ட்டில் தொழிலாளி அம்பிகா வேலை செய்தார். அவரது யூனிட்டின் பெயர் ''இன்ஜின் ஆபரேஷன் ஃபைனல் அசம்பிளி''. இங்கு ''ரவுட்டர் கட்டிங் மிஷின்'' எனும் இயந்திரம் வரிசையாக வரும் செல்போன்களுக்குரிய ''மதர்போர்டு''களைத் தனித்தனித் துண்டுகளாக அறுத்துப் போடும் வேலையின் போது, சில பீஸ் போர்டுகள் எந்திரத்தில் விழுந்தால் தொழிலாளிகள் அதை கைவிட்டு எடுப்பார்கள். அவர்கள் கை நுழைந்த உடனேயே அந்த எந்திரத்தில் உள்ள ஆட்டோமேடிக் சென்சார் இயந்திரம் இயங்கி அறுப்பதை நிறுத்திவிடும்.

ஆனால், இந்த ஆட்டோமேடிக் சென்சார் இயந்திரம் வேலை செய்தால் சிலசமயம் வேலை தடைப்பட்டு, அதனால் பத்து - பதினைந்து நிமிடம் உற்பத்தி தாமதமாகிவிடும் என்பதால் இதை மூடியே வைத்திருந்தார்கள். அதாவது தொழிலாளி தன் உயிரைப் பணயம் வைத்து சில விநாடிகளுக்குள் விழுந்துவிட்ட போர்டுகளை எடுக்க வேண்டும். இது பச்சையான படுகொலை இல்லையா? எந்திரத்தில் சில போர்டுகள் விழுந்துவிட்டால் அதை அப்படியே விட்டுவிடவும் முடியாது. ஏனெனில், அறுக்கப்படும் எல்லா போர்டுகளுக்கும் தொழிலாளிகள் சரியான கணக்கு கொடுக்க வேண்டும்.

இந்நிலையில் 30.10.2010 மாலை சுமார் ஏழு மணிக்கு அப்படி விழுந்துவிட்ட போர்டை எடுப்பதற்கு அம்பிகா



படிப்பகம்

www.padippakam.com

முயன்றிருக்கிறார். எந்திரத்தின் சென்சார் இயங்காததால் அம்பிகா குனிந்து கீழே விழுந்த போர்டை எடுக்க முயல்வது அதற்குத் தெரியவில்லை. எனவே அதற்கு இடப்பட்ட கட்டளைப்படி, அடுத்த போர்டை அறுப்பதற்கு எந்திரத்தின் அறுவை பகுதி கீழே இறங்கி, அம்பிகா கழுத்தைப் பின்புறமாக அறுக்கத் தொடங்கியிருக்கிறது. கழுத்து அறுபட அறுபட இரத்தம் ஏராளமாக வழிய ஆரம்பித்திருக்கிறது. ஒரு கம்பி கழுத்தில் ஆழமாக சென்றுவிட்டதால் இரத்தம் உடலுக்குள்ளேயே ஏராளமாக கசிய ஆரம்பித்திருக்கிறது. இதன் காரணமாக அவருக்கு நான்கைந்து முறை மாரடைப்பு வந்திருக்கிறது. ஆனால், வெளியே யாருக்கும் இது தெரியவில்லை. சில பெண் தொழிலாளிகள் இதைப் பார்த்துவிட்டு மயக்கம் போட்டு விழுந்துவிட்டனர். சில ஆண் தொழிலாளிகள் உடனே எந்திரத்தை உடைத்து அம்பிகாவைக் காப்பாற்ற முயன்றிருக்கின்றனர்.

ஆனால், அங்கிருந்த சூபர்வைசர் மேலிடத்தில் பேசிவிட்டு மிஷனை உடைப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அதைப் பொறுமையாக ''டூல்சை'' கொண்டு படிப்படியாகக் கழட்டலாம் என்றார். எந்திரத்தை உடைக்காமல் இருப்பதற்குப் பாதுகாப்பாக செக்யூரிட்டிகளை நிறுத்தியிருக்கிறார். டூல்சை கொண்டு கழட்டலாம் என்றால், அங்கே டூல்ஸ் பாக்சும் இல்லை. இதற்குள் 10 நிமிடங்கள் கழிந்துவிட்டன. ஏராளமான இரத்தம் வழிந்துவிட்டது. கழுத்தை அறுத்த அந்த எந்திரத்தில் இருந்து அம்பிகா மீட்கப்படவில்லை. இறுதியில் வேறுவழியின்றி தொழிலாளிகள் நிர்வாகத்துடன் சண்டை போட்டு எந்திரத்தின் கட்டரை உடைத்து அம்பிகாவை மீட்கின்றனர். அதற்குள் மொத்தம் 20 அல்லது 25 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

ஆலையிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் இருக்கும் ஜெயா மருத்துவமனைக்கும் பின்னர் சென்னை கே.எம்.சி., அப்பல்லோ எனப் பிற மருத்துவமனைகளுக்கும், அதற்குள் இறந்திருந்த அம்பிகாவின் உடலைக் கொண்டு சென்றார்கள்.

ஆலைக்குள் தொழிலாளிகள் செல்பேசிகளை எடுத்துச் செல்ல தடையுள்ளது. எனவே, அம்பிகாவின் மரணம் அவர்களுக்கு உடனேயே தெரியவில்லை. ''அசம்பிள் டூ ஆர்டர் செக்சன்'' எனும் பிரிவின் சூபர்வைசர் அம்பிகாவின் மரணத்தைத் மறைத்து தொழிலாளர்களை தொடர்ந்து பணியாற்றப் பணித்திருக்கிறான்.

பின்னர் மருத்துவமனையின் நர்ஸ் மூலம் செய்தி தொழிலாளிகளுக்கு கிடைத்து, அதன்பின் இரவு 12 மணிக்குத்தான் உற்பத்தியை நிறுத்தினார்கள். அதுவும் கூட தொழிலாளிகளின் கோபத்தால் நடந்ததே அன்றி, நிர்வாகத்தால் அல்ல. ஆனால், எப்படியும் உற்பத்தியை நிறுத்தக்கூடாது என்பதுதான் நிர்வாகத்தின் நோக்கமாக இருந்தது.

எந்திரத்தை உடனே உடைத்திருந்தால், அம்பிகாவைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால், இரண்டு



நோக்கியாவின் துணை நிறுவனமான ஃபாக்ஸ்கான் தொழிற்சாலையில் நேர்ந்த விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையளித்து, நடந்த சம்பவம் மூடி மறைக்கப்பட்டது.

கோடி நட்டமாயிருக்குமே! கட்டிங் இயந்திரத்தின் சென்சார் போர்டை எப்போதும் இயக்கத்தில் வைத்திருந்தால் அம்பிகா இறந்திருக்க மாட்டார். ஆனால் நிறுத்தப்படும் ஒவ்வொருமுறையும் உற்பத்தி தடங்கலுக்குள்ளாயிருக்குமே! எனவே, 10 கோடி கைபேசி என்ற இலக்கை அடைவதற்காக, இத்தகைய அபாயகரமான சூழ்நிலையில்தான் நோக்கியா தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்ததனால்தான் இன்று அம்பிகா கொல்லப்பட்டிருக்கிறார்.

சென்ற மாதம்தான் நோக்கியா ஆலைக்கு ''6 எஸ்'' (6S) எனும் சிறந்த பாதுகாப்பு வசதிகள் கொண்ட ஆலை என்ற விருது கொடுக்கப்பட்டதாம்! அந்த பாதுகாப்பு இலட்சணத்திற்கு ரத்த சாட்சியம்தான் அம்பிகா!

போராட தொழிற்சங்க தலைமை இல்லாத காரணத்தால் தொழிலாளிகள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்கையில், தி.மு.க. பிரமுகர்கள் அம்பிகா கொலை செய்யப்பட்டதை சாதாரண விபத்தாக மாற்றுவதற்கு முயன்றார்கள். அம்பிகாவின் பெற்றோரோடு நைச்சியமாகச் சமரசம் பேசியது, நிர்வாகம். நிவாரணம், குடும்பத்தினருக்கு வேலை என்ற வழமையான சடங்கு - சம்பிரதாயங்கள் பேசப்பட்டன. ஆனால், அம்பிகாவின் மரணத்திற்கு இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்பது இருக்கட்டும், யார் மீதும் எந்த புகாரும் பதிவு செய்யப்படவில்லை.

பழுதடைந்த அந்த எந்திரத்தை அப்புறப்படுத்திவிட்டு, நல்ல நிலையில் இருக்கும் புதிய எந்திரத்தை அங்கே வைத்தார்கள். அம்பிகா கொல்லப்பட்ட

## அறிவிப்பு

**''நகரமயமாகும் தமிழகம்: நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சல்'' என்ற தொடர்கட்டுரை தவிர்க்க வியலாத காரணத்தினால் இவ்விதழில் இடம் பெறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**- ஆசிரியர் குழு.**



படிப்பகம்

www.padippakam.com




ஃபாக்ஸ்கான் நிர்வாகத்தின் அடக்குமுறை, தொழிலாளர் விரோதப் போக்குகளைக் கண்டித்து, அவ்வாலைத் தொழிலாளர்கள் காஞ்சிபுரத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இடத்தைக் கழுவி சுத்தம் செய்த பிறகு, தமிழக அரசு தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளை வைத்து ஒரு விசாரணையை நடத்தி முடித்து விட்டார்கள்.

சன் டி.வி.யிலும் சில பத்திரிக்கைளிலும் ஒரு ஒற்றை வரிச் செய்தியோடு இந்தப் படுகொலை முடிந்து விட்டது. நோக்கியா ஆலைக்குச் சென்றபோது ''வினவு'' இணையதள செய்தியாளர்களைத் தவிர அங்கு எந்த ஊடக நபர்களும் இல்லை. அதில் ஆச்சரியம் ஏதுமில்லை, எல்லா ஊடகங்களும் நோக்கியா விளம்பரம் மூலம் கல்லா கட்டுகின்றன. நோக்கியாவின் மக்கள் தொடர்பு அதிகாரிகள் எல்லா பத்திரிகைகளையும் தொடர்பு கொண்டு தாங்கள் அளித்த, அளிக்க போகின்ற விளம்பரங்களை நினைவுபடுத்தி, இந்த கொலையை மறைக்க வேலை செய்கிறார்கள். அதன் விளைவையும் ஊடகங்களில் பார்க்கிறோம்.

நோக்கியா தொழிற்சாலை முழுவதும் சி.சி.டி.வி காமராக்கள் இருக்கின்றன. தொழிலாளிகளின் ஒவ்வொரு நடவடிக்கையும் அதில் பதிவாகின்றன. இந்தக் கண்காணிப்பை வைத்துத் தொழிலாளிகளின் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அருகாமை தொழிலாளியிடம் பேசினால் கூட இங்கு குற்றம் என்பது சட்டம். எனில், அம்பிகா கொலை செய்யப்பட்ட காட்சி கூட அந்த காமராக்களில் பதிவாகியிருக்கும். இது சாதாரண விபத்து என்று ஊடகங்களின் உதவியுடன் ஊளையிடும் நோக்கியா நிர்வாகம் அந்த படப்பதிவை வெளியிடட்டுமே? உண்மையை உலகுக்கு அறிவிக்கலாமே, செய்வார்களா?

காஞ்சிபுரம் கலவைக்கு அருகே உள்ள கிராமத்தில் அம்பிகாவின் இறுதி ஊர்வலம் நடந்தது. சில -று தொழிலாளர்களைத் தவிர அங்கு வேறு யாருமில்லை. அப்போதுகூட நோக்கியாவில் உற்பத்தி நடந்தது. விடுமுறை இல்லை. தொழிலாளிகள் அதைப் புறக்கணித்து விட்டு அம்பிகாவின் இறுதி ஊர்வலத்திற்கு வந்திருக்கிறார்கள். நெடுந்தொலைவு காரணமாக நிறைய பெண் தொழிலாளிகள் வரவில்லை. தொழிலாளிகள் அரசியல் உணர்வு பெறும்வரை அம்பிகாவின் மரணத்தை நாம் நினைவில் மட்டும் வைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

அடுத்த மாதம் பின்லாந்தில் ஒரு வெற்றிவிழா நடக்கும். அது நோக்கியாவின் 100 மில்லியன் இலக்கை அடைந்த சாதனைக்கான கேளிக்கை விழா. நோக்கியா முதலாளிகளும், அதிகாரிகளும் சீமைச்சாராயத்தைப் பருகியவாறு தமது வெற்றியைச் சிலாகிப்பார்கள்.

அவர்கள் பருகுவது சாராயமல்ல, அம்பிகாவைப் போன்ற தொழிலாளிகளின் இரத்தம் என்பதை நாங்கள் குறித்து வைத்திருக்கிறோம். பழி தீர்ப்போம்!

•••

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கம் ஆதிக்கம் வகிக்கும் இன்றைய சூழலில், குறிப்பாக, பன்னாட்டு முதலாளியம் நடத்தும் நோக்கியா, ஹூண்டாய் முதலான ஆலைகளில் அம்பிகா போன்ற தொழிலாளர் படுகொலை விதிவிலக்கல்ல. முழுக்க முழுக்க ரோபோ மயமாக்கப்பட்டு, கண்காணிப்பு காமிராக்கள் மூலம், சிறிதுகூட கவனப் பிசகு இல்லாமல் முடுக்கி விடப்படும் தொழிலாளர்கள் இயந்திரங்களோடு போட்டி போட்டு, உயிரைப் பணயம் வைத்து வேலை செய்ய வேண்டியுள்ளது. தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளோ, ஆபத்துக்குத் தேவையான மருத்துவ வசதிகளோ கிடையாது.

பலரும் எண்ணுவதுபோல இத்தகைய நிறுவனங்களில் மிகையான ஊதியம் தரப்படுவதில்லை. கூடுதல் ஊதியம் பெறும் பயிற்சி பெற்ற நிரந்தரத் தொழிலாளர்களுக்குப் பதிலாக, குறை ஊதியம் பெறும் தற்காலிக ஒப்பந்தத் தொழிலாளர்கள்தாம் கூடுதலாக உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆனால், உற்பத்தி இலக்கு மட்டும் பன்மடங்கு எகிறிக் கொண்டே போகிறது.

சென்னை - பூவிருந்தவல்லி அருகே உள்ள ஹூண்டாய் ஆலையில் 1999-ஆம் ஆண்டு, 1750 நிரந்தரத் தொழிலாளர்களும், 7,500 தற்காலிகத் தொழிலாளர்களும் வருடத்துக்கு 78,000 கார்கள் உற்பத்தி செய்தனர். ஆனால், அவர்களே 2008-இல் வருடத்துக்கு 8 இலட்சம் கார்கள் உற்பத்தி செய்தனர். அந்த அளவு ரோபோ மயமாக்கப்பட்டு, தொழிலாளர்களும் இயந்திரமயமாகி உழைக்கிறார்கள். 2002-ஆம் ஆண்டு ஆலையிலேயே ஒரு தொழிலாளி மாரடைப்பால் மாண்டார். அதைத் தொடர்ந்து, ஆலை விபத்துகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. 2008-ஆம் ஆண்டு ரோபோ இயந்திரத்தின் இயக்கத்தால், இரும்புக் கம்பி ஒரு தொழிலாளி தலையின் ஒரு பக்கம் நுழைந்து மறுபுறம் வெளிவந்தது. அப்படியே கால் மணி நேரம் தொங்கிய அத்தொழிலாளி, மூன்று நாள் நினைவின்றி மருத்துவமனையில் கிடந்து மாண்டு போனார்.

ஐந்து கருங்காலிகளைக் கொண்ட தொழிலாளர் நலக் கமிட்டியை வைத்துக் கொண்டு தொழிற்சங்கம் வைக்கும் உரிமை அடியோடு மறுக்கப்பட்டு வருகிறது. அதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது 15 பேர் வேலை நீக்கமும் 89 பேர் தற்காலிக வேலை நீக்கமும் செய்யப்பட்டனர். போலீசை ஏவி முன்னணித் தொழிலாளர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

**எல்லா ஊடகங்களும் நோக்கியா விளம்பரம் மூலம் கல்லா கட்டுகின்றன. நோக்கியாவின் மக்கள் தொடர்பு அதிகாரிகள் எல்லா பத்திரிகைகளையும் தொடர்பு கொண்டு தாங்கள் அளிக்கப் போகின்ற விளம்பரங்களை நினைவுபடுத்தி, இந்த கொலையை மறைக்க வேலை செய்கிறார்கள்.**

பெண் தொழிலாளி அம்பிகாவைப் படுகொலை செய்த நோக்கியா நிறுவனத்தின் துணைநிறுவனம் ஃபாக்ஸ்கான். கடந்த ஆகஸ்ட் மாதம் ஃபாக்ஸ்கான் ஆலையில் நச்சு வாயு கசிந்து, 250-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மயங்கி விழுந்தனர். அவர்களில் பலர் பெண் தொழிலாளர்கள். முதல் ''ஷிப்ட்'' வேலையில் 127 தொழிலாளர்கள் ரத்த வாந்தி எடுத்து விழுந்த போதும், அவர்கள் ''ஆடி மாதம் விரதம் இருந்ததால் நேர்ந்தது'' என்று கேலி பேசி, இரண்டாவது ''ஷிப்ட்'' வேலை வைத்து மேலும் 145 தொழிலாளர்களை இரத்த வாந்தி எடுத்து மயங்கி விழச் செய்தது, நிர்வாகம். தொழிலாளருக்கு நேர்ந்த ஆபத்தை மூடி மறைப்பதற்காக புறநோயாளிகளாக வைத்து முதலுதவி மட்டுமே அளித்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை விரட்டிவிட்டார்கள். அரசுக்கும் அதிகாரிகளுக்கும் ''கப்பம்'' கட்டி நடந்த சம்பவத்தை ஒன்றுமில்லாததாக அமுக்கி விட்டது, நிர்வாகம்.

ஃபாக்ஸ்கான், ஃபெர்லெக்ஸ், ஸ்கல்காம் என்று பல துணை நிறுவனம் வைத்து நடத்தும் நோக்கியா கைபேசி நிறுவனம் தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமையை மறுத்து, போராடும் தொழிலாளர்கள் மீது போலீசை ஏவிக் கைது செய்து சிறையில் அடைக்கிறது. நோக்கியா, ஹூண்டாய் போன்ற பன்னாட்டுக் கம்பெனிகள் அனைத்திலும் நிரந்தரத் தொழிலாளர்களை விடத் தற்காலிக ஒப்பந்தத் தொழிலாளர்கள்தாம் பல மடங்கு உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்களோடு நிரந்தரத் தொழிலாளர்களும், இயந்திரக் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள்.

ஆனால், கொல்லைப் புறவழியே பதவிக்கு வந்த தமிழகத் தலைமைப் போலீசு இயக்குநர் லாத்திகா சரண், முதலாளிகளின் சங்கக் கூட்டத்தில் பேசுகிறார், ''தொழிற்சாலைகள், அலுவலகங்களின் உள்ளே கண்காணிப்பு கேமராக்கள், அலுவலர்களுக்கு அடையாள அட்டை, கைரேகைப் பதிவு ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். நிறுவன உயர் அதிகாரி, உரிமையாளரை எதிர்க்கும் தொழிலாளர்கள் கண்காணிக்கப்பட வேண்டும். ஏனென்றால், வெளியாட்கள் இவர்களைப் பயன்படுத்தி அந்த நிறுவனத்தை சீர்குலைக்கலாம்...''

வரம்பற்ற வேலைநேரம், விபத்து - படுகொலை என்று தொழிலாளர்களை அடக்கி ஒடுக்கித் தொழிலாளர்களை நரபலி கொடுக்கும் முதலாளியப் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழிலாளர்கள் அனுபவிக்கின்ற கொடுமைகள் குறித்து ஒருபோதும் பேசாத போலீசு அதிகாரிகள், முதலாளிகள் சங்கத்தின் கருத்தரங்கத்துக்கு போய் அவர்களுக்கு தொழிலாளர்களால் ஆபத்து விளையும் என்று அக்கறையுடன் பேசுகிறார்கள்.

மறுபுறம், இம்மாதிரி அதிகாரிகளைத் தேடிப்பிடித்து பதவி உயர்வுதரும் கருணாநிதி, தான் தொழிலாளர்களின் நண்பன் என்று முதலைக்கண்ணீர் வடிக்கிறார். அதேசமயம் நோக்கியா, ஹூண்டாய், சாம்சங் என்று பலப் பல பன்னாட்டுக் கம்பெனிகளைக் கொண்டு வந்து தமிழகத்தில் முதலீடுகளையும் தொழில்வளர்ச்சியையும் செய்து வருவதாக அப்பனும் மகனும் பேரனும் பெருமை பேசிக் கொள்கிறார்கள். இதனால் பல ஆயிரம் பேருக்கு நேரடி - மறைமுக வேலை கிடைக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள். பல ஆயிரம் கோடி வரிச்சலுகைகளோடு, நீர், நிலம், மின்சாரம் முதலானவற்றை இலவசமாக வழங்குவதோடு, சட்டத்தை மதியாது கொத்தடிமைகளாகத் தொழிலாளர்களை காலில் போட்டு மிதிப்பதற்குத் துணை நிற்கிறார்கள். இதைக் காண்பதற்கு இன்னும் வேறுபல ஆதாரங்களைத் தேடிப் போக வேண்டியதில்லை. நோக்கியா, ஹூண்டாய் ஆலைகளின் நடப்புகளே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

● மாணிக்கவாசகம்.

## தோழர் சின்னசாமியின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!



மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் நாமக்கல் மாவட்டக் கிளைத் தலைவரான தோழர் சின்னசாமி, கடந்த நவம்பர் 2-ஆம் நாள் மாரடைப்பினால் மரணமடைந்துவிட்டார். அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற 66 வயதான தோழர் பழனிச்சாமி, நாமக்கல் மாவட்டத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் கிளையைத் தொடங்க முன்முயற்சியுடன் செயல்பட்டதோடு, கிளையைக் கட்டியமைத்து அதன் தலைமைப் பொறுப்பேற்று பல்வேறு போராட்டங்களில் ஊக்கமுடன் பங்கேற்றார்.

மார்க்சிய - லெனினிய வழியில் நின்று புரட்சியைச் சாதிப்பதுதான் மனித குலத்தை அடிமைத் தளைகளிலிருந்து விடுவிக்கும் என்பதை உணர்ந்து தனது இறுதிக் காலம் வரை தொடர்ந்து பாடுபட்டார். முதுமையிலும் துடிப்புடன் செயல்பட்ட அவரது போர்க்குணத்தையும் அர்ப்பணிப்பையும் நெஞ்சிலேந்தி, அடக்குமுறைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிராகத் தொடர்ந்து போராட உறுதியேற்போம்!

– மனித உரிமைப் பாதுகாப்பு மையம், நாமக்கல்.



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் வர்கீஸ் படுகொலை தீர்ப்பு:

# தாமதமான நீதி...

கேரளத்தில் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பு நக்சல்பாரி புரட்சியாளரான தோழர் வர்கீசை 'மோதல்' என்ற பெயரில் கொலை செய்த உயர் போலீசு அதிகாரி ஒருவருக்கு அண்மையில் நீதிமன்றம் ஆயுள்தண்டனை அளித்திருக்கிறது. அரிதினும் அரிதாக, இப்படுகொலை நடந்து 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு கொலைகார போலீசு அதிகாரிக்கு நீதிமன்றம் தண்டனை அளித்திருப்பது, இந்தியாவிலேயே முதன்முறையாகும்.

அன்று இளைஞராக இருந்த தோழர் வர்கீஸ், நக்சல்பாரி பேரெழுச்சியைத் தொடர்ந்து சி.பி.எம். கட்சியிலிருந்து விலகி நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். கேரளத்தின் வயநாடு பகுதியில் தேயிலைத் தோட்ட முதலாளிகளின் - நிலப்பிரபுக்களின் கொடூரச் சுரண்டலையும் கொத்தடிமைத்தனத்தையும் விளக்கி மக்களை எழுச்சியுறச் செய்தார். ஆண்டுதோறும் வயநாட்டின் வள்ளியூர் கோயில் திருவிழாவில் பழங்குடியின மக்களைப் பிடித்து ஆடு-மாடுகளைப் போல விற்கும் நிலப்பிரபுக்களின் கொடூரத்தை எதிர்த்து நின்று போராடினார்.

இதைத் தொடர்ந்து, நக்சல்பாரிகளை ஒழிக்க கொலைகார போலீசு வெறியன் லட்சுமணா மற்றும் விஜயன் தலைமையில் ஒரு சிறப்பு அதிரடிப்படை நிறுவப்பட்டு வயநாட்டில் தேடுதல் வேட்டை தீவிரமானது. தலைமறைவாகி போராட்டங்களை நடத்தி வந்த தோழர் வர்கீஸ், திருநெல்லியில் ஒரு மூதாட்டி வீட்டில் தங்கியிருந்தபோது, 1970 பிப்ரவரி 18-ஆம் தேதியன்று போலீசு அதிரடிப்படையால் அடித்து இழுத்துச் செல்லப்பட்டார். திருநெல்லி அருகே காட்டுப் பகுதியில் மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர், அவரது கண்கள் பிடுங்கி எறியப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். போலீசாருடன் வர்கீஸ் நடத்திய ஆயுத மோதலில் அவர் குண்டடிபட்டு மாண்டதாக அன்றைய காங்கிரசு அரசும் போலீசும் கதை கட்டின. வயநாட்டில் தோழர் வர்கீசுடன் இணைந்து செயல்பட்ட இதர நக்சல்பாரி தோழர்களும் வயநாட்டுப் பழங்குடியின மக்களும் கொடூரமாக வதைக்கப்பட்டனர்.

பயங்கரவாதப் போலீசின் கொட்டங்கள் நீண்டகாலம் நிலைத்திருக்க முடியவில்லை. புதைக்கப்பட்ட உண்மைகள் பூதமாகக் கிளம்பத் தொடங்கின. 1970-களில் நக்சல்பாரி ஒழிப்பு அதிரடிப் படையிலும் பின்னர் ரிசர்வ் போலீசுப் படையிலும் கீழ்நிலை போலீசுக்காரராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பி. ராமச்சந்திரன் நாயர், ''எனது மேலதிகாரி லட்சுமணாவின் உத்தரவின் பேரில் தான் நான் வர்கீசைச் சுட்டுக் கொன்றேன். அப்போது வயநாடு எஸ்.பி.யாக இருந்த விஜயனும் திருநெல்லி டி.எஸ்.பி.யாக இருந்த லட்சுமணாவும்தான் வர்கீசைக் கொல்லும்படி எனக்கு ஆணையிட்டனர்'' என்று கடந்த 1998-ஆம் ஆண்டு பத்திரிகையாளர்களிடம் வெளிப்படையாகப் பேட்டியளித்தார். நீதிமன்றத்திலும் இதைத் தெரிவித்து உரிய தண்டனை பெற்றுக் கொள்ள தான் தயாராக இருப்பதாக அவர் அறிவித்தார். நக்சல்பாரி இயக்கத்தின் ஆதரவாளர்கள் மற்றும் மனித உரிமை இயக்கத்தினர் மூலம் பத்திரிகைகளில் வெளிவந்த இந்த உண்மை, கொலைகார போலீசின் கோரமுகத்தையும் அப்போதைய காங்கிரசு - வலது கம்யூனிஸ்டு கூட்டணி அரசாங்கத்தின் பயங்கரவாத வெறியாட்டத்தையும் நாடெங்கும் திரைகிழித்துக் காட்டியது.

கொலைகார போலீசுப்படைத் தலைவனாகிய லட்சுமணா, ஜெயராம் படிக்கல் என்ற போலீசு வெறியனோடு சேர்ந்து அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில் கள்ளிக்கோட்டை பொறியியல் கல்லூரி மாணவரும் நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தின் செயல்வீரருமான தோழர் ராஜனை 1976 -இல் காகயம் முகாமில் அடைத்து சித்திரவதை செய்து கொன்று, பின்னர் அவரது உடலை பீச்சி அணையில் வீசி எறிந்தவன். இதே லட்சுமணாவின் அதிரடிப்படை 1976-இல் நக்சல்பாரி புரட்சியாளரான விஜயனைச் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்று யாருக்கும் தெரியாமல் வர்க்கலா எனும் ஊரில் எரித்ததாக ஓய்வு பெற்ற போலீசு வாகன ஓட்டுநர் ஒருவர் கடந்த 1999-இல் வாக்குமூலம் அளித்தார்.

நாற்பதாண்டுகளுக்கு முன்பு போலீசு வெறியன் லட்சுமணாவின் ஆணைப்படிச் சுட்டுக் கொல்லப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் வர்கீஸ்.



அடுத்தடுத்து வெளிவந்த இந்த வாக்குமூலங்களால் அதிர்ச்சியடைந்த கேரள மக்கள், போலீசு படுகொலைகளுக்கு எதிரான மனித உரிமை இயக்கங்களுக்குப் பெருத்த ஆதரவு அளித்தனர். நாடெங்கும் மனித உரிமை இயக்கங்களின் கண்டனமும் நிர்ப்பந்தமும் வலுக்கத் தொடங்கியதால், வேறு வழியின்றி அப்போதைய சி.பி.எம். கூட்டணி அரசு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து தோழர் வர்கீசின் சகோதரர்களான தாமஸ், ஜோசப் ஆகியோர் 1999-இல் கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்



படிப்பகம்

www.padippakam.com



ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு, வழக்கு மன்றத்திலிருந்து வெளியே கொண்டுவரப்படும் கொலைகார போலீசு வெறியன் லட்சுமணா.

தனர். இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக ராமச்சந்திரன் நாயரும், இரண்டாவது குற்றவாளியாக லட்சுமணாவும், மூன்றாவது குற்றவாளியாக விஜயனும் சேர்க்கப்பட்டனர். ராமச்சந்திரன் நாயருடன் இணைந்து பணியாற்றிய முன்னாள் போலீசுக்காரரான முகம்மது ஹனீப், வர்கீசின் பள்ளித் தோழரான பிரபாகர வாரியார், ஜோகி என்ற விவசாயத் தொழிலாளி உள்ளிட்டு மொத்தம் 31 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். போலி மோதல் படுகொலைக்கு எதிரான பொதுக்கருத்து வலுவாக இருந்ததால், ''நக்சல்பாரி இயக்கத்தைச் சேர்ந்த ஒரு சாமானிய இளைஞனை வயநாட்டின் திருநெல்லி காட்டில் சுட்டுக் கொன்ற கொடுஞ்செயலுக்கு அதிகபட்சத் தண்டனை வழங்க வேண்டும்'' என்று அரசு தரப்பு வழக்குரைஞர் இந்த வழக்கில் வாதிட்டார். குற்றம் சாட்டப்பட்ட இரு போலீசு அதிகாரிகளும் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தில் இந்த விசாரணைக்குத் தடை கோரியதால் இந்த வழக்கு விசாரணை நீட்டித்துக் கொண்டே போனது.

இதற்கிடையில் கடந்த 2006-ஆம் ஆண்டில் முன்னாள் போலீசுக்காரரான ராமச்சந்திரன் நாயர் மரணமடைந்தார். மற்ற இருவர் மீதான வழக்கில் கடந்த அக்டோபர் 28-ஆம் தேதியன்று கொச்சியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. டி.ஜி.பி.யாகி ஓய்வு பெற்ற 83 வயதான முன்னாள் போலீசு அதிகாரி விஜயனும், ஐ.ஜி.யாகி ஓய்வு பெற்ற 75 வயதான லட்சுமணாவும் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். விஜயன் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று அவர் விடுவிக்கப்பட்டார். கொலைகார லட்சுமணாவுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. வழக்கு மன்றத்திலிருந்து லட்சுமணா வெளியே வரும்போது ''கொலைகார லட்சுமணா ஒழிக!'' என்ற முழக்கங்கள் எங்கும் எதிரொலித்தன.

''திருநெல்லியில் இன்று இரவு இரண்டு நட்சத்திரங்கள் உயர்ந்தோங்கி மின்னும். அவை தோழர் வர்கீசின் ஒளிரும் கண்களாகும்!'' என்று ஆண்டுதோறும் தோழர் வர்கீசின் நினைவு நாளான பிப்ரவரி 18-ஆம் தேதியன்று கேரளத்தில் சுவரெழுத்துக்களும் சுவரொட்டிகளும் பளிச்சிடும். தோழர் வர்கீசின் நினைவு நாற்பதாண்டுகளாகியும் இன்னமும் மக்களின் மனங்களிலிருந்து நீங்கிவிடவில்லை. தோழர் வர்கீஸ் மட்டுமின்றி, தோழர் ராஜன் படுகொலைக்கு எதிராகவும் கேரளத்தில் மக்கள் கொதித்தெழுந்ததால்தான் அங்கே இந்த அளவுக்கு விசாரணை நடந்துள்ளது.

அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில், போலீசு வெறியன் லட்சுமணாவால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட நக்சல்பாரி இயக்கத்தின் செயல்வீரர் தோழர் ராஜன்.



நக்சல்பாரி புரட்சியாளர்களான தோழர்கள் வர்கீஸ், ராஜன் முதலானோர் கொல்லப்பட்டதைப் போலவே, 1980-களின் தொடக்கத்தில் தமிழகத்தின் தருமபுரி, வேலூர் மாவட்டங்களில் போலீசு 'சூரப்புலி' தேவாரம் நடத்திய நரவேட்டையில் தோழர் பச்சையப்பன் உள்ளிட்டு பத்துக்கும் மேற்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர்கள் 'மோதல்' என்ற பெயரில் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மனித உரிமை - ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து, இரகசிய கொலைக் குழுக்களைக் கட்டியமைத்து மோதல் என்ற பெயரில் நக்சல்பாரி புரட்சியாளர்களைக் கொன்றொழிப்பதை வழமையாகக் கொண்டுள்ள இத்தகைய அரசு பயங்கரவாதப் படுகொலைகளுக்கு முடிவு கட்ட வேண்டும். கேரளத்தின் லட்சுமணா, தமிழகத்தின் தேவாரம் போன்ற கொலைகார போலீசு அதிகாரிகள், போலீசு கொலைக் குழுக்கள், இந்நரவேட்டைக் கொள்கையை வகுத்து செயல்படுத்திய அரசு அதிகாரிகள், இதற்குப் பக்கமேளம் வாசித்த ஊடகங்கள், ஓட்டுப் பொறுக்கிகள் உள்ளிட்டு அனைத்துப் பயங்கரவாதிகளும் தண்டிக்கப்பட வேண்டும். தமிழகத்தின் பயங்கரவாதப் போலீசு, இப்போது ரவுடிகளைக் கேள்விமுறையின்றிக் கொன்றொழிப்பதோடு, தனிப்பட்ட விரோதங்களுக்காக சாதாரண நபர்களையும் சுட்டுக் கொல்லும் பயங்கரவாத மிருகமாக மாறிவிட்டது. மனித உரிமைக்கான போராட்டத்தில் கேரள மக்களைப் போலவே போலி மோதல் கொலைகளுக்கு எதிராகத் தமிழக மக்களும் விழித்தெழும்போது, இங்கேயும் கொலைகார போலீசு கும்பல் தண்டிக்கப்படும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## பிரம்மரத மரியாதைக்குத் தடை:

# ஒடுங்கியது பார்ப்பனத் திமிர்! வென்றது புரட்சியாளர்களின் போராட்டம்!!

திருச்சி-திருவரங்கம் கோவிலில் முக்கிய திருவிழாக் களின்பொழுது, வேதவியாச பட்டர், பராசர பட்டர் மற்றும் அரையர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ''பிரம்மரத மரியாதை'' செய்யப்படும். இப்பட்டர்களுக்கு மாலைகள், சந்தனம் கொடுத்து, பல்லக்கில் அமர வைத்து, யானை முன்னே செல்ல குடை மற்றும் தீப்பந்தங்கள் பிடித்து, அப்பல்லக்கை மனிதர்களே தூக்கிச் சென்று அவர்களை வீட்டில் கொண்டுபோய் விடுவதுதான் பிரம்மரத மரியாதை.

தமிழகத்தில் கைரிக்ஷா இழுப்பது ஒழிக்கப்பட்ட பின்னும், மனிதர்களை மனிதர்களே தூக்கிச் செல்லும் இந்த இழிவை, மதச் சம்பிரதாயம், குருவுக்குச் சிஷ்யன் செலுத்து மரியாதை என்ற பெயரில் நியாயப்படுத்தி வருகிறது, பார்ப்பனக் கும்பல்.

இந்த இழிவைச் சகித்துக் கொள்ள முடியாத பல்லக்குச் சுமக்கும் கோவில் ஊழியர்கள் இனி பல்லக்குத் தூக்க முடியாது எனக் கலகத்தில் இறங்கினர். இதனையடுத்து திருவரங்கம் கோவிலின் இணை ஆணையர் ஜெயராமன், ''கோவிலின் சார்பாக கோவில் ஊழியர்கள் பல்லக்குத் தூக்கமாட்டார்கள். கோவிலுக்கு வெளியே பட்டர்கள் தங்களின் சொந்த பல்லக்கில் அமர்ந்துகொண்டு, அதனைத் தூக்கிச் செல்ல தாங்களே வெளியாட்களை நியமித்துக் கொள்ளலாம்'' என ஆணை பிறப்பித்தார். இதனையடுத்து, லெட்சுமி நரசிம்ம பட்டர் உள்ளிட்ட பட்டர்கள் இணை ஆணையர் உத்தரவுக்குத் தடை விதிக்கக் கோரி மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் வழக்குத் தொடுத்தனர்.

பார்ப்பனக் கும்பல் திணித்துவரும் இந்த இழிவுக்கு எதிரான கோவில் ஊழியர்களின் போராட்டத்தை அறிந்த திருச்சி நகரைச் சேர்ந்த மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் பல்வேறு ஜனநாயக அமைப்புகளும், சுயமரியாதைமிக்க சமூக ஆர்வலர்களும் கோவில் ஊழியர்களுக்கு ஆதரவாகத் திரண்டனர். குறிப்பாக, மனித உரிமை பாதுகாப்பு மையம், ''இந்த வழக்கில் தங்களையும் இணைத்துக் கொள்ளக் கோரி'' மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்து, பார்ப்பனக் கும்பலுக்கு எதிராகச் சட்டப் போராட்டத்தை நடத்தி வருகிறது.



பிரம்மரத மரியாதையை நடத்த முடியாமல் தோற்றுப்போய், கோவிலின் பின்வாசல் வழியே தப்பியோடும் நரசிம்ம பட்டர்.



திருவரங்கத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, பிரம்மரத மரியாதை தடுத்து நிறுத்தப்பட்ட வெற்றியைக் கொண்டாடும் நக்சல்பாரி புரட்சியாளர்கள்.

வழக்கு நிலுவையில் இருப்பதைச் சாதகமாக்கிக் கொண்டு, கடந்த 17.11.2010 - கைசிக ஏகாதசி நாளன்று, ''கோவில் வளாகத்துக்கு உள்ளேயும், வெளியிலும் தங்களைப் பல்லக்கில் தூக்கிச் செல்ல பாதுகாப்பு தர வேண்டும்'' எனக் கோரி பட்டர்கள் போலீசிடம் மனு கொடுத்தனர். கோவில் பிரகாரத்தில் பல்லக்கில் செல்லத் தடை விதித்த போலீசு உதவி ஆணையர், வெளியில் தங்களின் சொந்தப் பொறுப்பில் பல்லக்கில் செல்ல பட்டர்களுக்கு அனுமதி வழங்கினார்.

''மனிதனை மனிதன் சுமப்பது கோவிலாக இருந்தாலும், வெளியிடமாக இருந்தாலும் சமூகக் குற்றம்தான்; உழைக்கும் மக்களைவிடத் தாங்கள் உயர்வானவர்கள் எனப் பார்ப்பனர்கள் காட்டிக் கொள்வதை அனுமதிக்க முடியாது. இதையும் மீறி பட்டர்கள் பிரம்மரத மரியாதையை நடத்த முயன்றால், அதைத் தடுத்து நிறுத்துவோம்'' என திருச்சி நகரைச் சேர்ந்த மக்கள் கலை இலக்கியக் கழகமும் மனித உரிமை பாதுகாப்பு மையமும் இணைந்து அறிவித்தன.

இதன்படி, கைசிக ஏகாதசி நாளன்று ம.க.இ.க., மற்றும் ம.உ.பா.மையத்தைச் சேர்ந்த தோழர்கள் திருவரங்கக் கோவிலின் ரெங்கா கோபுரம் முன்பாகத் திரண்



படிப்பகம்

www.padippakam.com

டனர். சூத்திர ஆட்சி நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் தி.மு.க. அரசின் போலீசோ, பட்டர்கள் கோவிலுக்கு வெளியே பிரம்மரத மரியாதையை நடத்துவதற்கு வசதியாக -ற்றுக்கணக்கான போலீசாரைக் குவித்ததோடு, மனித உரிமை பாதுகாப்பு மைய வழக்குரைஞர் போஜ குமார் மற்றும் ம.க.இ.க. தோழர்கள் உள்ளிட்ட ஏழு பேரைக் கைது செய்து போராட்டத்தைத் தடுத்துவிட முயன்றது.

கைசிக ஏகாதசி நாளன்று அதிகாலையிலேயே, கவுசிகப் புராணம் பாடிய பின், தனது சொந்தக் காசைப் போட்டுத் தயாரித்திருந்த பல்லக்கில் ஏறி, கோவில் முன்வாசல் வழியாகப் பவனி வருவதற்கான ஏற்பாட்டுடன் இருந்த நரசிம்ம பட்டர், தான் நக்சல்பாரி புரட்சியாளர்களால் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டு, தனது ஏற்பாடுகள் அனைத்தையும் கைவிட்டுவிட்டு, கோவில் நிர்வாகம் அளித்த மாலை, சந்தனம், குடை போன்ற மரியாதைகளைக்கூட ஏற்றுக் கொள்ளும் தெம்பின்றி, பின் வாசல் வழியாக போலீசின் பாதுகாப்புடன் தப்பியோடிப் போனார்.

*1993* - இல் திருவரங்கம் கோவிலின் கருவறைக்குள் நுழைந்து, இந்து மதம் என்பது பார்ப்பன மதம் என்பதை இந்தியாவெங்கும் மீண்டும் வெளிச்சம் போட்டுக் காட்டிய நக்சல்பாரி புரட்சியாளர்கள், இன்று அக்கோவிலில் மதச் சம்பிரதாயம் என்ற பெயரில் நடந்துவரும் இழிவை, பார்ப்பனத் திமிரைத் துடைத்தெறிந்துவிட்டனர்.

இந்த வெற்றியை திருவரங்கத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தும், பட்டாசுகள் வெடித்தும், ''தமிழகத்தைப் பார்ப்பனியத்தின் கல்லறையாக்குவோம்! பெரியாரின் வாரிசுகள் என்பதை நிலைநாட்டுவோம்!!'' என விண்ணதிர முழக்கமிட்டும் கொண்டாடினர்.

இணை ஆணையரின் உத்தரவை அமல்படுத்துவதற்கு திராவிடர் கழகம் மற்றும் பல்வேறு சமூக ஆர்வலர்கள் ஆதரவு தெரிவித்திருந்தபோதும், ம.க.இ.க. தோழர்கள்தான் களத்தில் இறங்கி, போலீசின் உதவியுடன் பட்டர்கள் நடத்தத் திட்டமிட்டிருந்த பிரம்மரத மரியாதையைத் தடுத்து முறியடித்தனர். ஆனால், தி.க. வீரமணி கும்பலோ, ஏதோ தங்களின் போராட்ட அறிவிப்பாலும், விடுதலை நாளிதழில் செய்தி வெளியிட்டதாலும்தான், பட்டர் பின்வாசல் வழியாக ஓடிவிட்டதாகத் தனது பத்திரிகையில் எழுதி, இந்த வெற்றியைச் சொந்தம் கொண்டாட முயலுகிறது. தான் கூவிதான் பொழுது விடிகிறது எனச் சேவல் எண்ணிக்கொள்வதைதான் வீரமணியின் தம்பட்டம் நினைவுபடுத்துகிறது.

**– ம.க.இ.க., திருச்சி.**

# தண்ணீர்க் கொள்ளையர்களை விரட்டியடிப்போம்!

**–மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஆர்ப்பாட்டம்.**

**வி**ருதை மினரல்ஸ் என்ற நிறுவனம் விருத்தாச்சலம் நகரிலுள்ள ஆலடி ரோடு, எம்.ஆர்.கே. நகர் குடியிருப்புப் பகுதியில் ஆழ்குழாய் கிணறு தோண்டி தண்ணீர் எடுத்து விற்கும் வியாபாரத்தை 2008-ஆம் ஆண்டு தொடங்கியது.

இத்தண்ணீர் வியாபாரத்தால் எதிர்காலத்தில் உருவாகும் அபாயங்களை உணர்ந்துகொண்ட அப்பகுதி மக்கள் அப்பொழுதே அத்தண்ணீர்க் கொள்ளையர்களை எதிர்த்து ஊர்வலம், சாலை மறியல் எனப் போராடத் தொடங்கினர். இப்போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையம் இந்நிறுவனத்தை மூடக் கோரி மக்களின் சார்பாக நகராட்சி அதிகாரிகளிடம் மனு கொடுத்தது. இதனையடுத்து அந்நிறுவனம் திறக்கப்பட்ட உடனேயே இழுத்து மூடப்பட்டது.



தற்போது அதே பகுதியில் மீண்டும் தண்ணீர்க் கொள்ளையர்கள் நுழைந்துள்ளனர். பெயர்ப் பலகையின்றி, இரவில் நிலத்தடியில் இருந்து தண்ணீரை உறிஞ்சுவதும், பகலில் தண்ணீரை ஏற்றிச் செல்வதுமென தண்ணீர் வியாபாரம் நடைபெறத் தொடங்கியிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மக்களின் போராட்டத்திற்கு அடிபணிந்து விருதை மினரல்ஸ் நிறுவனத்தை மூட உத்தரவிட்ட விருத்தாச்சலம் நகராட்சி இப்பொழுது தண்ணீர்க் கொள்ளையர்களுக்குச் சலாம் போடுகிறது.

ஒரு நிறுவனம்தானே என்று இன்று கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டால், நாளேயே தண்ணீர்க் கொள்ளையர்கள் புற்றீசல் போல இப்பகுதியில் புகுந்துவிடுவார்கள். ஓரிரு ஆண்டுகளிலேயே நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி எடுத்து, ஆலடி ரோட்டுப் பகுதியில் அமைந்துள்ள எம்.ஆர்.கே. நகர், முல்லை நகர், வீ.என்.ஆர். நகர், ராமதாஸ் நகர் உள்ளிட்ட பல குடியிருப்புப் பகுதிகளைப் பாலைவனமாக்கி, அங்கு வாழும் மக்களைக் குடிதண்ணீருக்கு அலைய வைத்து விடுவார்கள்.

இந்நிலையில் எம்.ஆர்.கே. பகுதியில் இயங்கும் தண்ணீர் கம்பெனியை அகற்றக் கோரியும், மக்கள் நலனில் அக்கறையின்றி இத்தண்ணீர்க் கொள்ளையர்களுக்கு அனுமதியளித்த நகராட்சியைக் கண்டித்தும் கடலூர் மாவட்ட மனித உரிமை பாதுகாப்பு மையம் சார்பாக 29.10.2010 அன்று விருத்தாசலம் - பாலக்கரை பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் மட்டுமின்றி, சமூக அக்கறை கொண்டோரும், குடியிருப்பு நலச் சங்கத்தைச் சேர்ந்தோரும் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

– மனித உரிமைப் பாதுகாப்பு மையம்,
கடலூர் மாவட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

## அமெரிக்க பயங்கரவாதம்:

# புதைக்கப்பட்ட உண்மைகள் பூதமாகக் கிளம்பின!

**விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ள அமெரிக்காவின் போர்க்குற்றங்கள் நாஜிக்கள் நடத்திய இனப்படுகொலைகளுக்கு இணையானவை.**

அமெரிக்க மேல்நிலை வல்லரசு, தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் ஆப்கானிலும், ஈராக்கிலும் கடந்த பத்து வருடங்களாகப் பேரழிவுப் போர்களை நடத்திவருகிறது. இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குக் காரணமான அல்கயிதா அமைப்பை ஒழிப்பதையும், அவர்களுக்கு ஆதரவு தரும் தலிபான்களை ஒடுக்குவதையும் காரணம் காட்டி முதலில் ஆப்கான் மீது அமெரிக்கா படையெடுத்தது. பின்னர், பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கிறது எனப் பச்சையாகப் பொய் சொல்லி, ஈராக் மீது போர் தொடுத்தது.

முடிவின்றி நீண்டுகொண்டே செல்லும் இந்தப் போர்களில் அமெரிக்கக் கூட்டணிப் படையினர் பல மனித உரிமை மீறல்களையும், போர்க் குற்றங்களையும் செய்துள்ளனர். அபுகிரைப் சிறைச் சித்திரவதை துவங்கி, குவாண்டனாமோ சிறைச்சாலை வரை அமெரிக்காவின் பல போர்க் குற்றங்கள் தொடர்ந்து அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்தகைய குற்றச்சாட்டுகளை மறுப்பது, திசை திருப்புவது போன்ற வழிமுறைகளைக் கையாண்டு, அவற்றிலிருந்து தப்பி வந்திருக்கிறது அமெரிக்க அரசு. ஆனால், இதுவரை இல்லாத அளவிற்கு, மிகப்பெரிய அளவில் அமெரிக்காவின் போர்க் குற்றங்களை நிருபிக்கின்ற அந்நாட்டு இராணுவத்தின் இரகசிய ஆவணங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

சர்வதேச அளவில், பல்வேறு நாட்டு அரசுகளின் இரகசிய ஆவணங்களை அம்பலமாக்கும் 'விக்கிலீக்ஸ்' எனப்படும் இணையதளம், கடந்த ஜூலை மாதம் 'ஆப்கான் போர்க் குறிப்புகள்' என்ற பெயரில், அமெரிக்க இராணுவத்தின் நாற்பதாயிரம் இரகசிய ஆவணங்களை வெளியிட்டது. அதே இணையதளம் கடந்த அக்டோபர் இறுதியில், 'ஈராக் போர்க் குறிப்புகள்' என்ற பெயரில், 4 இலட்சம் ஆவணங்களை வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணங்கள் அனைத்தும் போர்க்களத்தில் அமெரிக்க இராணுவ வீரர்களால் பதிவு செய்யப்பட்டு, ஒன்றாகத் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் இரகசியக் குறிப்புகள். 2004-ஆம் ஆண்டு முதல் 2009-ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலான காலக்கட்டத்தில், ஆப்கான் மற்றும் ஈராக்கில் அமெரிக்க இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்களும், அதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையும் இதில் பதிவாகியுள்ளன. மேலும் அமெரிக்கக் கூட்டணிப்படையினரின் நடவடிக்கைகள், தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் குற்றங்கள் பலவும் இதில் பதிவாகியுள்ளன. தனது மேலாதிக்க நலன்களுக்காக அமெரிக்க அரசு எத்தகைய கொடிய இழிவான செயல்களிலும் ஈடுபடும் என்பதை இந்த ஆவணங்கள் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்துகின்றன.

விக்கி லீக்ஸ் வெளியிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் கோப்புகள், ஆப்கானில் இருபதாயிரம் பொது மக்களும், ஈராக்கில் 66 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறுகின்றன. சர்வதேச பொதுமன்னிப்பு சபை உள்ளிட்ட அமைப்புகள் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கையை இலட்சங்களில் கூறுகின்றன. அவற்றைக் காட்டிலும் தற்போது விக்கிலீக்ஸ் மூலம் வெளிவந்திருக்கும் அமெரிக்க இராணுவத்தின் கொலைக்கணக்கு மிகவும் குறைவுதான் என்றபோதிலும், தனது இராணுவத்தால் தொகுக்கப்பட்டிருக்கும் படுகொலைப் பட்டியலைக்கூட இருட்டடிப்பு செய்து, கொலைக்கணக்கை அமெரிக்க இராணுவம் மேலும் குறைத்துக் காட்டியிருப்பது விக்கிலீக்ஸ் மூலம் அம்பலமாகியிருக்கிறது.

இதுவரை உலகத்துக்குத் தெரிந்திராத பல படுகொலைகளையும் இந்த ஆவணங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. 2008-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆப்கானில், பிரான்ஸ் நாட்டு இராணுவத்தால் ஒரு

விக்கி லீக்ஸ் இணையதள நிறுவனர் ஜூலியன் அசங்கி.





படிப்பகம்

www.padippakam.com

பேருந்து நிறைய பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு இரண்டு மாதம் கழித்து அதே போன்றதொரு சம்பவத்தில் பலர் அமெரிக்க இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச செய்தி நிறுவனமான ராய்டர்சின் நிருபர்கள் இருவரை ஈராக்கில் அமெரிக்க ஹெலிகாப்டர் சுட்டு வீழ்த்தியதும், அந்த நிருபர்களுக்கு உதவ ஓடி வந்த ஒரு சிறுமி உட்பட அப்பாவி பொதுமக்கள் பலரையும் அமெரிக்கச் சிப்பாய்கள் சுட்டுக் கொன்றதும் வீடியோ ஆதாரங்களுடன் வெளியாகியுள்ளன. இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு அதே ஹெலிகாப்டர் வீரர்கள், கையை உயர்த்திச் சரணடைய வந்த பொதுமக்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.




அமெரிக்கா, வடக்கு வஸிரிஸ்தான் பகுதியில் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தைகள்.

ஆப்கானில் அமெரிக்காவிற்கு எதிராகப் போரிடும் தலிபான் தலைவர்களைக் குறிவைத்துக் கொல்வதற்கென பிரத்யேகமாக ஒரு இராணுவக் குழுவையே அமெரிக்கா அமைத்துள்ளது. ''அதிரடிப்படை 373'' எனப்படும் இந்தக் குழு, தலிபான் தலைவர்களைக் கொல்வது என்ற பெயரில் அப்பாவி பொதுமக்களை கொன்று வருவதையும் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியிருக்கிறது. தலிபான் தலைவர்கள் ஏதாவதொரு நகரத்தில் தங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்தால் உடனே அந்த நகரத்தை நோக்கி ஆளில்லா உளவு விமானங்களை அனுப்பி ஐம்பதாயிரம் அடி உயரத்திலிருந்து குண்டுகளைக் கொட்டி மொத்தப் பகுதியையும் உருத்தெரியாமல் அழித்துவிடுவது என்பதை ஒரு வழிமுறையாகவே அமெரிக்க இராணுவம் கடைப்பிடித்து வருகிறது. இத்தகைய தாக்குதல்களில் ஆயிரக்கணக்கில் அப்பாவி ஆப்கானியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வெளிப்படையாக அப்பாவிகளைக் கொன்று குவித்தது மட்டுமல்லாமல், மக்களிடையே பிரிவினையைத் தூண்டி நிரந்தரமாக அவர்களை மோதவிடும் சதியையும் அமெரிக்கா செய்து வருகிறது. ஈராக்கில் சியா, சன்னி பிரிவினரிடையே பகைமையைத் தூண்டும் வகையில் சன்னி பிரிவினரின் மீது தாக்குதல்களைக் கட்டியமைத்துள்ளது. பாக்தாத் நகரின் சேரிகளிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட சியா பிரிவு குண்டர்களைக் கொண்டு ''ஓநாய் படை'' என்ற கொலைகாரப் படையை உருவாக்கி, சன்னி பிரிவினரின் மீது தாக்குதல் தொடுத்து, கலவரங்களைத் தூண்டி வருகிறது. இலத்தின் அமெரிக்க நாடுகளில் செய்ததைப் போன்று இப்படையினருக்கும் சித்தரவதை செய்வதற்குத் தனியாகப் பயிற்சி கொடுத்து வளர்க்கிறது.

''ஓநாய் படையினரின்'' கையில் சிக்குவதைவிடச் செத்துவிடலாம் என நினைக்கும் வகையில் அப்படையினரின் சித்திரவதைகள் கொடூரமாக இருக்கின்றன. கண்களைத் நோண்டுவது, கை-கால்களில் ஓட்டை போடுவது. விரல்களை ஒவ்வொன்றாக வெட்டுவது, உயிருடன் தோலை உரிப்பது எனக் காட்டுமிராண்டித்தனமான சித்தரவதைகளை, அமெரிக்கா அப்படையின் மூலம் செய்து வருகிறது. ஓநாய்ப் படையினரின் அட்டகாசத்தின் காரணமாக சியா பிரிவு மக்களுக்கு எதிராக சன்னி பிரிவினர் தாக்குதல் தொடுத்ததும், இதன் விளைவாக இரத்த ஆறு ஓடியதும் இராணுவ ஆவணங்களில் பதிவாகியுள்ளது.

ஈராக்கின் ஓநாய்ப் படையைப் போன்றே ஆப்கானின் பாதுகாப்புப் படையையும் அமெரிக்கா பயிற்றுவித்துள்ளது. அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக் கொல்வது முதல் போதை மருந்து கடத்தல், கோஷ்டி மோதல் வரை அமெரிக்கப் படைகளால் பயிற்றுவிக்கப்பட்ட ஆப்கான் பாதுகாப்புப் படையினர் நிகழ்த்திய பல அட்டூழியங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

சித்திரவதை குறித்தும் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தும் சர்வதேச அளவில் எழும் கண்டனங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே, இது போன்ற கூலிப்படையினரை அமெரிக்கா பயிற்றுவித்து வளர்க்கிறது என்ற உண்மையும் இந்த ஆவணங்கள் மூலம் ஆதாரபூர்வமாக அம்பலமாகியிருக்கிறது. மேலும், இவர்கள் குறித்து அமெரிக்க இராணுவத்திற்கு 20,000-க்கும் அதிகமான புகார்கள் வந்த போதும் அவற்றைப் பற்றி விசாரிக்காமல், சம்பந்தப்பட்ட படையினரிடமே அந்தப் புகார்களை அனுப்பிவிடும்படி அமெரிக்க அரசே இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

ஈராக் போரை நியாயப்படுத்த அமெரிக்கா கூறிய பொய்களில் ஒன்று, அல்கயிதாவிற்கு சதாம் உசேன் ஆதரவளித்தார் என்பதாகும். இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு அல்கயிதாவினர் ஈராக்கிலிருந்துதான் திட்டமிட்டனர் என்ற பொய்யை அமெரிக்கா பிரச்சாரம்



படிப்பகம்

www.padippakam.com

செய்தது. ஆனால், உண்மையில் சதாம் ஆட்சி செய்தவரை ஈராக்கில் அல் கயிதா இயக்கமே இல்லை. அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர் தான் அங்கே அல்கயிதா இயக்கமே தோன்றியது. 'மெசபடோமியா அல் கயிதா' என்ற பெயரில் இயங்கிவரும் அந்த அமைப்பு, அமெரிக்காவிற்கு உதவும் சியா பிரிவு மக்களைக் கொல்வதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுவருகிறது. சியா மற்றும் சன்னிப் பிரிவினர் தமக்குள் அடித்துக் கொண்டு சாவதை உத்திரவாதப்படுத்துவதற்காக அல் காய்தாவின் நடவடிக்கைகளை அமெரிக்க இராணுவம் மறைமுகமாக ஊக்குவித்திருக்கிறது என்பதையும் விக்கி லீக்ஸ் அம்பலப் படுத்துகிறது.

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., ஆப்கானில் உள்ள தலிபான்களின் ஒரு பிரிவைக் கட்டுப் படுத்துகிறது என்பது அப்பட்டமாகத் தெரிந்த நிலையிலும் அமெரிக்கா அதனை அனுமதித்து வருகிறது என்பதும் இந்த ஆவணங்களில் பதிவாகியுள்ளது. தீவிரவாதத்திற்கு எதிரான போரில் ஈடுபடுவதற்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கொடுக்கும் நிதி உதவிகளை, ஐ.எஸ்.ஐ., தலிபான்களுக்கு மடைமாற்றிவிடுகிறது என்பதும்; பாகிஸ்தானின் இராணுவ ஜெனரல் கயானி, தலிபான்களுக்கு உதவும் ஐ.எஸ்.ஐ. பிரிவுக்குத் தலைமை தாங்குகிறார் என்பதும் தெளிவாகத் தெரிந்திருந்தும், ஒபாமாவின் அரசு அவரது பதவியை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்க பாகிஸ்தானை நிர்பந்தப்படுத்தியது.

பாகிஸ்தானைப் பயன்படுத்தி, அமெரிக்க ஆதரவு 'நல்ல தலிபான்களை' உருவாக்க அமெரிக்க எடுத்து வரும் முயற்சிகளும் ஆதாரபூர்வமாக அம்பலமாகியிருக்கின்றன. ஜப்பான் உள்ளிட்ட கூட்டணி நாடுகளின் உதவியோடு முப்பது கோடி டாலர் நிதியைத் திரட்டி, தலிபான்களின் இரண்டாம் கட்டத் தலைவர்களை வழிக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது. இம்முயற்சிக்குத் தடையாக இருக்கும் தலைவர்களைக் கொல்லவும், அமெரிக்காவை ஆதரிக்கும் இரண்டாம் மட்டத் தலைவர்களை மேலே கொண்டுவரவும் திட்டமிட்டுள்ளது. தான் கொடுக்கின்ற நிதியுதவி மற்றும் ஆயுதங்களின் மூலம் தலிபான்கள் அமெரிக்கச் சிப்பாய்களைக் கொல்கின்றனர் என்பது தெரிந்தேதான் இந்த அழுகுணி ஆட்டத்தை அமெரிக்க அரசு ஆடிவருகிறது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் நாஜிப்படையின் போர்க்குற்றங்களை -ரம்பர்க் விசாரணை ஆதாரங்களுடன் நிரூபித்து, குற்றவாளிகளைத் தண்டித்தது. இன்றோ, மற்றவர்கள் யாரும் ஆதாரம் தந்து நிரூபிக்கும் தேவையே இல்லாமல், எல்லாப் போர்க் குற்றங்களுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் தருகின்றன விக்கி லீக்ஸ் வெளியிட்டுள்ள அமெரிக்க இராணுவ ஆவணங்கள். இருப்பினும், பிற ஏகாதிபத்தியங்கள் அமெரிக்காவுடன் கூட்டுக் களவாணித்தனத்தில் ஈடுபட்டிருப்பதாலும், தட்டிக் கேட்பாரில்லாத தனிப்பெரும் ரவுடியாக அமெரிக்கா உலகை மேலாதிக்கம் செய்து வருவதாலும், இந்த போர்க் குற்றங்களுக்காக அமெரிக்காவை விசாரணைக் கூண்டில் ஏற்ற முடியாத நிலைமை உள்ளது.




## விக்கிலீக்ஸ் தோண்டியெடுத்த "அடுத்த பூதம்"!

இந்தியா, இசுரேல், ரசியா, துருக்கி, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள், அந்நாடுகளின் நிலவரம் பற்றி அமெரிக்க உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பியிருந்த இரகசியக் கடிதங்களை, விக்கிலீக்ஸ் இணையதளம் வெளியிடத் தொடங்கியிருக்கிறது.

இந்த இரகசிய ஆவணங்கள் அமெரிக்காவின் மேலாதிக்க நோக்கங்களையும், அதன் திமிரையும் வெட்டவெளிச்சமாக்கும் என்பதால், அமெரிக்க அரசு விக்கலீக்ஸ் நிர்வாகத்தை மிரட்டி இந்த ஆவணங்கள் வெளிவராமல் தடுக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துபோனது.

அமெரிக்கத் தூதரகங்கள் பல்வேறு நாடுகளில் உளவு அமைப்பைப் போலச் செயல்பட்டு வருவதும், ஐ.நா. மன்றத்தின் உயர் அதிகாரிகளைக் கூட அமெரிக்கா உளவு பார்த்துவருவதும் இப்பொழுது எவ்விதச் சந்தேகத்திற்கும் இடமின்றி அம்பலமாகிவிட்டது.

இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே நடந்து வந்த அணுசக்தி ஒப்பந்தம், இராணுவக் கூட்டுறவு குறித்த பேச்சுவார்த்தைகள் பற்றி இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அனுப்பியிருக்கும் கருத்துகள் இதன் மூலம் அம்பலத்துக்கு வரும் எனக் கூறப்படுகிறது. இதன் விளைவாக, இந்திய அரசின் அமெரிக்க அடிமைத்தனம் மேலும் அம்பலமாகக் கூடும் என்பதால் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகமும் அதிகாரிகளும் அரண்டு போயுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ஜூனியர் புஷ், தனது பதவிக் கால நினைவுகளைத் தொகுத்து எழுதியுள்ள ‘‘தீர்மானக் குறிப்புகள்’’ (Decision Points) என்ற -வில், ‘‘உலகளவில் தடை செய்யப்பட்டுள்ள சித்திரவதைகளை ஏவிவிட்டதன் மூலம்தான் வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள், இலண்டனில் உள்ள ஹீத்ரு விமான நிலையம் உள்ளிட்ட பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பயங்கரவாதிகள் தாக்கத் திட்டமிட்டிருந்ததை அறிந்து கொள்ள முடிந்தது’’ எனக் குறிப்பிட்டு, இத்தகைய போர்க் குற்றங்கள் அனைத்தையும் நியாயப்படுத்தியிருப்பதோடு, இதற்கு எதிராக எழும் கண்டனங்களை எள்ளி நகையாடியிருக்கிறார். தற்பொழுது அமெரிக்காவின் உள்துறை செயலராக இருக்கும் ஹிலாரி கிளிண்டன், ‘‘இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்துவது அமெரிக்கத் தேச நலனுக்கு எதிரானது’’ எனக் குறிப்பிட்டு, விக்கிலீக்ஸுக்கு எதிராக அமெரிக்கத் தேசிய வெறியைத் தூண்டிவிட முயலுகிறார். கருப்பின அதிபர் ஒபாமாவோ இந்தப் போர்க் குற்றங்களைப் பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாமல், ஆப்கான் மீதும், பாகிஸ்தானின் எல்லைப்பகுதிகள் மீதும் நடத்தப்படும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை முன்னைவிடத் தீவிரப்படுத்தி வருகிறார்.

விக்கி லீக்ஸ் ஆவணங்களை அமெரிக்க அரசு பொய்யென்று மறுக்கவுமில்லை; அதற்காக வெட்கித் தலைகுனியவுமில்லை மாறாக, இவ்வாறு உண்மைகளை வெளியிடுவதைக் குற்றம் எனத் திமிருடன் கூறி, இதனை வெளியிட்ட விக்கி லீக்ஸ் நிறுவனர் அசங்கி மீது பாலியல் வன்புணர்ச்சி வழக்கொன்றைப் புனைந்திருக்கிறது. மேலும், அவரைத் தேடிப் பிடிக்க சர்வதேசப் பிடியாணையையும் பிறப்பித்திருக்கிறது. குற்றத்தை அம்பலப்படுத்தியவர் ஓடி ஒளிந்து கொண்டிருக்க, குற்றவாளி அமெரிக்காவோ அவரைத் துரத்திக் கொண்டிருக்கிறது.

• அழகு



# நரகமானது, கடலூர் நகரம்!

கடலூர்-நகரமா, இல்லை நரகமா எனக் கேட்குமளவுக்கு, அந்நகரில் அரைகுறையாக இருந்துவந்த அடிக்கட்டுமான வசதிகள் அனைத்தும் சிதைக்கப்பட்டுவிட்டன. பாதாளச் சாக்கடை அமைப்பது என்ற பெயரில் அந்நகரையே பாதாள உலகமாக மாற்றிவிட்டது, நகராட்சி நிர்வாகம். பாதாளச் சாக்கடை அமைப்பதற்காக நகரில் ஒரு இடம்கூடப் பாக்கியின்றி அனைத்துச் சாலைகளையும் தெருக்களையும் நகராட்சி குதறிப் போட்டிருப்பதால், போக்குவரத்து, குடிநீர், மின்சாரம், கழிவு நீர் வரத்து உள்ளிட்ட அனைத்து வசதிகளும் நகரமெங்கும் சீர்கெட்டுக் கிடக்கின்றன.

மூன்று வருடங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட இப்பாதாள சாக்கடைத் திட்டம் ஆமை வேகத்தில்கூட நகரவில்லை. 66 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம், அதிகார வர்க்கத்திற்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் பணம் காய்க்கும் மரமாக மாறிவிட்டது.

இதுவொருபுறமிருக்க, ஆட்டோ ஓட்டுநர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் போன்ற வேலைகளுக்குச் செல்லும் அடித்தட்டு மக்கள் வாழ்ந்து வரும் தானம் நகர், நவநீதம் நகர், சங்கர நாடார் தெரு, கம்மியம்பேட்டை ரோடு ஆகிய பகுதிகள் நகராட்சி நிர்வாகத்தால் அடியோடு புறக்கணிக்கப்பட்டுவிட்டன. அப்பகுதிகளில் ஒழுங்கான சாலை கிடையாது, கழிப்பறை கிடையாது, மின்சாரம் கிடையாது. பன்றித் தொழுவங்களைவிடக் கேடுகெட்டுப் போன இடத்தில் உழைக்கும் மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இந்த அவலத்தைக் கண்டித்தும், பாதான சாக்கடைத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றக் கோரியும் கடலூர் நகரில் செயல்பட்டு வரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும் புதிய ஜனநாயகக் கட்டுமான தொழிலாளர் சங்கமும் இணைந்து 22.11.2010 அன்று, தானம் நகர் பெட்ரோல் பங்க் அருகில் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தின. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் இப்புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் மட்டுமின்றி, கடலூர் நகரப் பேச்சுரிமைக் கழகத்தைச் சேர்ந்த திரு.செல்வம், மனித உரிமை பாதுகாப்பு மைய வழக்குரைஞர் செந்தில்குமார், ம.தி.மு.க.வின் 24-ஆவது வட்டப் பிரதிநிதி திரு.கே.துரை ஆகியோரும் கண்டன உரையாற்றினர்.

இதே கோரிக்கையை முன்வைத்து கடலூர் அனைத்து மோட்டார் வாகனத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு 23.11.2010 அன்று கடலூர் நகரில் நடத்திய முழு அடைப்புப் போராட்டத்திலும் இப்புரட்சிகர அமைப்புகள் பங்கு கொண்டன. முழுயடைப்பு நாளன்று பேரணியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த பு.மா.இ.மு. மாவட்ட அமைப்பாளர் தோழர் பாலுவையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி மன்னாதனையும் பேரணி தொடங்குவதற்கு முன்பே போலீசார் கைது செய்து இழுத்துச் சென்றனர். அதன் பின், பேரணியைப் பாதிவழியிலேயே மறித்த போலீசார், 300-க்கும் மேற்பட்டோரைக் கைது செய்தனர். எனினும், பேரணியில் கலந்துகொண்ட பலர் போலீசாரிடமிருந்து தப்பித்து, ஜவான்ஸ் பவன் அருகே சாலை மறியலில் ஈடுபட்டு போலீசாரின் முகத்தில் கரியைப் பூசினர். பொதுமக்கள் அடிப்படை வசதிகள் கோரி சட்டபூர்வமான வழியில் போராடுவதைக்கூட தி.மு.க. அரசால் சகித்துக் கொள்ள முடிவதில்லை என்பதைத்தான் இந்த அடக்குமுறை எடுத்துக் காட்டுகிறது.

– பு.ஜ. செய்தியாளர், கடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழின் தொடர்ச்சி...

# டாடா குழுமத்தின் கோர முகம்

**டாடா குழுமம், தனது இலாபவெறிக்காகச் செய்துவரும் சமூக விரோத–சட்டவிரோதச் செயல்பாடுகளின் தொகுப்பு.**

## நச்சுப் பொருட்களின் கிடங்கு

### உப்புக் கழிவு:

2003 - செப்டம்பரில், டாடா கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் குஜராத் மாநிலம் மித்னாபூர் சோடா உப்பு ஆலையில் கழிவு நீர்க் கசிவு ஒன்று ஏற்பட்டது. கட்ச் வளைகுடாவில் உள்ள தேசியக் கடற்பூங்காவில் 150 ஏக்கருக்கு மேலான கடற்பகுதிக்கு அது பரவியது. மாந்தோப்புகள், பவளப்பாறைகள், களிமண் வாழ் உயிரினங்கள், திமிங்கலம், சுறா போன்றவைகளைக் கொண்ட மிகவும் பல்வகை உயிரினங்களுக்காக இந்தக் கடற்பூங்கா அமைந்துள்ளது. இங்கு டாடா கெமிக்கல்ஸ் ஆலையின் கழிவுகளால் படிந்த திடப் பொருட்கள் காரணமாக 10 கிலோமீட்டர் தூரத்துக்கு கடல் வாழினங்கள் பாதுகாக்கப்படும் பகுதி மாசுபட்டும் சீரழிந்தும் போய்விட்டதென்று தேசியக் கடலியல் ஆய்வு நிறுவனம் கூறுகிறது. மித்னாபூர் பகுதியில் உள்ள டாடா கெமிக்கல்சின் உப்பளங்கள் அங்குள்ள நிலத்தடி நீரைப் பெருமளவு உப்பு நீராக்கிவிட்டன. டாடா கம்பெனியின் உப்புக் கழிவு நீரைக் கொட்டி வைக்கும் திறந்தவெளிக் கிடங்குகளுக்காக பல கிராமங்கள் விவசாய நிலங்களை இழந்துவிட்டிருக்கின்றன.

### ஜூக்சாலை-கழிவுப் பொருட்களின் மலைகள்:

ஜாம்சேத்பூர் மாநகரில் உள்ள ஜூக்சாலைப் பகுதியின் மையத்தின் திறந்தவெளியில் ஆயிரக்கணக்கான டன்கள் கொதிகலன் சாம்பலைக் கொட்டி மலை மலையாகக் குவித்திருக்கிறது, டாடா எஃகு ஆலை. கோடை காலத்தில் அச்சாம்பல் மலைகளில் இருந்து பறந்து வரும் கனரக உலோகத் துகள்கள் நிரம்பிய காற்று சாலைகளில் வாகனங்கள் செல்லமுடியாத அளவுக்கு பார்வையைப் பதிப்பதோடு, சுவாச நோய்களையும் பரப்புகின்றது. டாடா எஃகு நிறுவன ஒப்புதல்படியே அப்பகுதி நிலத்தடி நீர் மாசுபட்டு, அனுமதிக்கப்படும் அளவைவிட மிகையாகக் கடினநீராகி, திடப்பொருட்களின் கரைசல் நிரம்பியதாக உள்ளது.

### ஜோடா சுரங்கங்கள்:

டாடா, பிர்லா, மற்றும் ஜிண்டால் போன்ற குழுமங்களின் இரும்புக் கனிமச் சுரங்கங்கள் அமைந்துள்ள ஜோடா நகரம் 1950-களில் கனிமவளம் கொழிக்கும் நகராக விளங்கி, பல கூட்டுப்பங்கு நிறுவனங்களின் செல்வவளங்களைப் பெருக்கியது; ஆனால், அதனால் அந்த நகரம் ஒரு பயனும் பெறவில்லை. பத்திரிக்கையாளர் தரும் விவரப்படி, ஜோடா நகரமும் அதற்குச் செல்லும் சாலையும் ஒரு பெரிய பாதாளக் குழியாக உள்ளது. அடுத்தடுத்து தொடர்ச்சியாக கனிமச் சுமையேற்றிய லாரிகள், இரவுபகலாக 24 மணிநேரமும் நடக்கும் சுரங்கம் வெட்டுதல் ஆகியவை காரணமாக உள்ளூர்வாசிகள், தொழிலாளர்கள், பயணிகள் சுவாசிக்க நல்ல காற்றே கிடையாது. மிக மோசமாகத் தூசு கிளப்பும் இந்தச் சுரங்கங்கள் யானைகளும் புலிகளும் புகலிடமாகக் கொண்டுள்ள சித்தமாதா ரிசர்வ் காடுகளின் எல்லையில் அமைந்துள்ளன என்பது வியப்புக்குரிய ஒன்றாகும்.

### கரிக்குழம்புகளின் குவியல்:

மேற்கு பொக்காரோவில் டாடா எஃகு நிறுவனத்தின் நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. பொக்காரோவில் உள்ள நிலக்கரி கழுவுமிடத்திலிருந்து நிலக்கரி தூசுகள் நிறைந்த கரிக் குழம்புகள் பொக்காரோ ஆற்றுக்குள் கொட்டப்படுகிறது; இதனால் ஆற்றுப்படுகை முழுவதும் நிலக்கரி சாம்பல் படிந்து ஆறே நாசமடையச் செய்து அழிக்கப்பட்டு விட்டது. ஆற்றில் இருந்து பெருமளவு தண்ணீர் உறிஞ்சப்பட்டு, நிலக்கரி தூசுக் குழம்பும் கழிவும் கொட்டப்படுகிறது.

## பேராபத்து விளைவித்த நிகழ்வுகள்

### நிறுவனர் நாள் தீ:

1989 மார்ச் மூன்றாம் நாள், டாடா குழுமத்தின் நிறுவனர் நாள் விழாக் கொண்டாட்டம் நடந்தது. அப்போது பிரபலங்களின் இருக்கைப் பகுதியில் திடீரென்று தீப்பற்றிக் கொண்டு விட்டது. அலட்சியம் காரணமாக ஏற்பட்ட இத்தீவிபத்தில் 60 குழந்தைகள் மாண்டு போயினர்; 111 பேர் படுகாயமுற்றனர்; மோசமான ஏற்பாடுகள் காரணமாக உரிய நேரத்தில் விபத்து நடந்த இடத்திற்கு தீயணைப்பு வண்டிகள் போய்ச் சேர முடியாமல் போனது. தீ விபத்து சம்பவத்தை மூடி மறைப்பதற்காக, படுகாயமுற்று- தீக்காயத்தில் செத்துக் கொண்டிருந்தவர்களுக்குச் சிறப்புச் சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதை டாடாக்கள் மறுத்துவிட்டதால் பிரச்சினை மேலும் கடுமையாகியது. டாடா எஃகு நிறுவனம்தான் விபத்துக்கு முழுப்பொறுப்பாகும் என்று



படிப்பகம்

www.padippakam.com

ஆலைகளுக்கான ஆய்வகம் அறிக்கை அளித்துள்ளது. ஆனால், இத்துயரச் சம்பவம் நடந்து பத்தாண்டுகளுக்கு மேலாகியும் பலியானவர்களின் உறவினர்களுக்கோ, படுகாயமுற்றவர்களுக்கோ டாடா நிறுவனம் இன்னமும் நட்டஈடு வழங்கவில்லை. டாடா இரும்பு எஃகு நிறுவனம் ஆலை விபத்துகளுக்குக் கொடுத்து வந்த நட்டஈடுகளை சுட்டிக் காட்டி, அதே அளவு நீதிமன்ற நடுவரிடம் செலுத்த வேண்டும் என்று உச்சநீதி மன்றம் பிறப்பித்த ஆணையைக் கூட டாடா நிறுவனம் மதிக்காது மறுத்து வருகிறது.

### டாடா குழுமத்தின் தொழிலாளர் விரோத முன்னுதாரணங்கள்

*1920*-கள் மற்றும் *1930*-களில், டாடா இரும்பு எஃகு கம்பெனியின் ஐரோப்பிய பார்சி நிர்வாகத்துக்கு எதிராகப் பழங்குடித் தொழிலாளர்கள் போர்க்கோலம் பூண்டு பலமுறை போராடியிருக்கிறார்கள். வேலை நிலைமைகள், சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமை ஆகியன அவர்கள் ஒன்று திரண்டு போராடுவதற்கான முக்கியமான மையப் பிரச்சினைகளாக இருந்தன. ஆனால், பல ஆண்டுகளாக, தொழிற்சங்கங்களை உடைப்பதற்கு அடிக்கடி வன்முறை வழிகளில் ஈடுபடுவதில் டாடா கம்பெனி பெயர்பெற்றதாக விளங்கியது.



**1850-களில் இருந்து அந்நூற்றாண்டின் இறுதிவரை சீனாவிற்கு ''ஓபியம்'' என்ற கஞ்சா போதை மருந்து ஏற்றுமதி செய்வதில் டாடா குடும்பம் ஈடுபட்டிருந்தது; இப்படி ஓபியம் கடத்திக் குவித்த மூலதனத்தைக் கொண்டுதான் துணி ஆலைகளையும் இரும்பு-எஃகு ஆலையையும் டாடா குடும்பம் நிறுவியது**

### தொழிலாளர் தற்கொலைகள்:

*1991*-இல் ரத்தன் டாடா தலைமைப் பொறுப்பேற்ற பிறகு ஆட்குறைப்பு மற்றும் நெறிப்படுத்துவதை மூர்க்கமாக டாடா குழுமம் மேற்கொண்டது. *2003*-ஆம் ஆண்டு, டாடா ஹைட்ரோ கம்பெனிகள் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த இரண்டு தொழிலாளர்கள் தங்களுக்குத் தாங்களே மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு டாடா நிறுவனத்தின் தலைமையகத்தின் முன்பு தீக்குளித்தார்கள். டாடா மின்சக்தி கம்பெனியிலிருந்து சட்டவிரோதமாக ஒப்பந்தத் தெழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத்தான் அவ்விரு தொழிலாளர்களும் தீக்குளித்து மாண்டனர்.

*1980*-களில் வீட்டுமனை நிலங்களின் விலை கிடுகிடுவென உயர்ந்தன; மும்பையின் முதன்மை வீட்டுமனை இடங்களில் இருந்த துணி ஆலைகள் அப்போது நலிவடைந்திருந்தன. துணி ஆலைகளைத் தேவைக்கேற்ப புதுப்பிக்கவும் நவீனப்படுத்தவும் ஆலை நிர்வாகங்கள் தவறிவிட்டன. செல்வம் கொழிக்கும் வீட்டுமனை பேரங்கள் ஆலைகளை மூடி பெரும் பணம் பார்க்க உதவும் என்று நம்பிய ஆலை நிர்வாகங்கள், ஆலைகளை இடித்துத் தள்ளுவது என்று முடிவு செய்தார்கள். மும்பையில் இருந்த மிகப் பழமை வாய்ந்த துணி ஆலைகளில் ஒன்றான சுதேசி ஆலையை நடத்திவந்த டாடாக்கள், தமது சொந்த நிலத்தில் நான்கில் ஒரு பகுதியை விற்பதற்கான அனுமதியை ஏற்கெனவே பெற்றிருந்தது; அதற்கு டாடாக்கள் சொல்லியிருந்த காரணம், தமது ஆலையில் ஆட்குறைப்பால் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஒரு பொதுத்துறை ஆலை, ஒரு பொழுதுபோக்கு மையம், ஒரு பொதுமக்களுக்கான வீட்டுவசதித் திட்டம் ஆகியவற்றுக்குப் பாதிக்கும் மேலாக நிலம் அளிக்கப்படும் என்பதுதான். ஆனால், அந்த நிலம் விற்கப்பட்டபோது இவையெதுவும் நடக்கவில்லை. விற்கப்பட்ட நிலமும் குறைமதிப்பீடு செய்து விற்கப்பட்டு, ஆலையைப் புனரமைப்பு செய்வதற்காக அல்லது தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கென்றிருந்த நிதி டாடாக்களின் வேறு வர்த்தக நிறுவனங்களுக்கு மடைமாற்றம் செய்யப்பட்டுவிட்டதென்று தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டினார்கள். *2000*-ஆம் ஆண்டு ஆலை மூடப்பட்டு, *28000* ஆலைத் தொழிலாளர்கள் அகதிகளாக வீசப்பட்ட போது, சுதேசி ஆலையின் ஒரு தொழிலாளி தற்கொலை செய்து கொண்டார்.

### தொழிலாளர் முறை ஒப்பந்தம் - வேலைப் பாதுகாப்பின்மையைப் புகுத்துதல்:

செலவுகளைக் குறைக்கும் ஒரு முயற்சியாக, ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பெருமளவு வேலைக்கு அமர்த்தும் காரியத்தில் டாடாக்கள் ஈடுபட்டார்கள் என்று அக்கம்பெனியின் உயர்நிலை அதிகாரிகளே ஒப்புக் கொண்டுள்ளார்கள். ஒப்பந்தத் தொழிலாளர் மற்றும் நிரந்தரமாக்கும் சட்டத்திற்கு முரணாக, பயிற்சி பெற்ற நிரந்தரத் தொழிலாளர்கள் மட்டுமே செய்யக்கூடிய வேலைகளையும் மற்றும் நிரந்தர நீண்டகால வேலைகளையும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் செய்யக்கூடாதவை என்று தடைவிதிக்கப்பட்ட பணிகளையும் கூடச் செய்யும்படி ஒப்பந்தத் தொழிலாளர்களை ஈடுபடுத்



படிப்பகம்

தினர். தனது நிரந்தரத் தொழிலாளர்களுக்கும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் இடையே டாடா கம்பெனி பாரா பட்சம் காட்டுவதாகத் தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக, ஜாம்சேத்பூர் டாடா எஃகுக் கம்பெனியின் தொழிலாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்களை விடக் கூடுதல் தரமுடைய உணவைப் பெறுகிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்கள் செய்யும் வேலை, கம்பெனியின் நிரந்தரத் தொழிலாளர்களுடையதைவிட தன்மையில் மாறுபாடானது அல்லவெனினும், சம்பள வித்தியாசம் பெருமளவு வேறுபாடானது. கடினமான வேலைகளை நீண்டநேரம் ஒப்பந்தத் தொழிலாளர்களும் செய்கிறார்கள். திறமைக் குறைவு மற்றும் வேலைநிர்பந்தங்கள் காரணமாக ஒப்பந்தத் தொழிலாளர்கள் கூடுதலான விபத்தில் சிக்கிக் கொள்கிறார்கள்.




**கதவடைப்பு:**

தொழிற்பாதுகாப்பு தருபவர்கள் என்ற டாடாக்கள் பெற்றிருக்கும் ''நல்ல'' பெயருக்கு மாறாக, டாடா குழுமத்தின் கார்ப்போரேட் நிறுவனம் பெரிய அளவுக்கு ஆட்குறைப்பில் ஈடுபடுகிறது. இதற்கு முதன்மை நிறுவனமான டாடா எஃகு ஆலை எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 1994-இல் டாடாக்களின் நிறுவனங்களில் பணியாற்றுவோர் எண்ணிக்கை 78,000 ஆக இருந்தது. அதுவே, 1997-இல் 65,000 ஆகக் குறைக்கப்பட்டது. 2002-க்குள் மேலும் 15,000 வேலைகள் ஒழித்துக் கட்டப்பட்டன. 2006-ஆம் ஆண்டில் டாடா நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் தொகை 38,000 ஆனது; அதாவது தாராளமயமாக்கம் தொடங்கிய போதிருந்ததில் பாதியளவுக்குச் சற்று மேலாகும். வேலை இழந்தவர்களில் (40,000 பேர்களில்) 25,000 பேர் விருப்பு அடிப்படையில் விலகி அதற்குரிய ஈட்டுத்தொகை பெற்றார்கள். இருப்பினும், அனைவரும் தாமே முன்வந்து விலகும் திட்டத்தின் கீழ் விலகியவர்கள் அல்ல என்று பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர். திடகாத்திரமான தொழிலாளர்கள் கூட கடும் உணர்வு நிலை அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு வேலையிழந்தார்கள். விருப்பு விலகல் முறையை ஏற்கவில்லையானால், சாலைகளைப் பெருக்கும்படி ஆசிரியர்கள் கூட நிர்பந்திக்கப்பட்டார்கள் என்று செய்திகள் குற்றஞ்சாட்டுகின்றன.

**தொழிற்சங்கங்களை உடைப்பது:**

1989-இல், பூனேயில் உள்ள டாடாவின் டெல்கோ ஆலையில் உள்ள டெல்கோ தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்டு வேலை நிறுத்தம் செய்தார்கள். போட்டித் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் ஊதிய உயர்வு கொடுத்தும், தொழிலாளர் அமைதியின்மை நீடித்ததால் கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்று போராடும் தொழிலாளர்களை மிரட்டியும் வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு, டாடா நிர்வாகம் முயன்றது. 1989, செப்டம்பரில் 3000 தொழிலாளர்கள் காலவரையறையற்ற உண்ணாநோன்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்கள் மயங்கி விழுந்தோடு சமரசத்துக்கான அறிகுறியே இல்லாமல் வேலை நிறுத்தம் முன்னேறிய போது, டாடாக்கள் மற்றும் பிற முதலாளிகளின் கடுமையான நிர்பந்தத்துக்கு மாநில அரசாங்கம் ஆளானது. செப்டம்பர் 29 அன்று இரவு, இருள் சூழ்ந்ததைப் பயன்படுத்திக் கொண்டு மாநில ரிசர்வ் மற்றும் பூனே நகரப் போலீசார் ''தகர்ப்பு நடவடிக்கை''யைத் தொடங்கினர். உண்ணா நோன்பிருந்த தொழிலாளர்களை வளைத்துக் கைது செய்வதற்காக 80 பேருந்துகள் கொண்டு வரப்பட்டன. போலீசின் உதவியோடு வேலைநிறுத்தத்தை டாடாக்கள் உடைத்தனர்.

**படுகொலைகள்:**

குறைந்தது இரண்டு தொழிலாளர் முன்னணியாளர்கள் கடந்த காலத்தில் கொல்லப்பட்டனர். அப்துல் பாரி மற்றும் வி.ஜி. கோபால் ஆகிய இருவரும் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தைக்குச் சென்றபோது போட்டி தொழிற்சங்கத்துக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்விரு சம்பவங்களிலும் டாடா நிர்வாகம் பின்னணியில் இருந்து செயல்பட்டதாக டாடா தொழிலாளர்களும் சுயேச்சையான பார்வையாளர்களும் குற்றஞ்சாட்டினர்.

**டாடாவுக்கு டாடா:**

நாட்டின் பல்வேறு இடங்களிலும் வர்த்தக நிறுவனங்கள் அமைப்பதற்கு டாடா கம்பெனி முயற்சித்த போது, உள்ளூர் மக்கள் அம்முயற்சிகளை வெற்றிகர

**1877, ஜனவரி முதல் நாளில் ஒரு பருத்தி துணி ஆலையை நிறுவினார் டாடா. அதேநாளில் விக்டோரியா மகாராணி இந்தியாவின் பேரரசியாகப் பிரகடனம் செய்யப்பட்டதைக் கொண்டாடும்முகமாக அத்துணி ஆலைக்குப் பேரரசி ஆலை என்று டாடா பெயர் சூட்டினார்.**



படிப்பகம்

www.padippakam.com

**டாடா நிறுவனர் நாள் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நட்ட ஈட்டினை நீதிமன்ற நடுவரிடம் டாடா செலுத்த வேண்டும் என்று உச்சநீதி மன்றம் பிறப்பித்த ஆணையைக்கூட டாடா நிறுவனம் மதிக்காது மறுத்து வருகிறது.**

மாக முறியடித்தனர் என்ற உண்மையிலிருந்து டாடாவுக்குள்ள அவப்பெயர் தானே விளங்கும். இதற்கு மே.வங்கம் சிங்கூரில் நடந்த போராட்டமும், ஒரிசா கலிங்கா நகரில் நடந்துவரும் போராட்டமும் சமீபத்திய பிரபலமான இரு எடுத்துக்காட்டுகள். ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரிசா பழங்குடி மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாக இராயகடா மாவட்டத்தில் உள்ள புனித பாஃபிளி மாலி மலைகளில் பாக்சைடு கனிமச் சுரங்கம் அமைக்கும் முனைப்பைக் கைவிடும்படி டாடாக்கள் தள்ளப்பட்டார்கள். 2000-ஆம் ஆண்டு அந்த சுரங்கம் அமையவிருந்த பகுதியில் ஒரு அமைதியான ஆர்ப்பாட்டம் நடந்தபோது மூன்று பழங்குடி இளைஞர்கள் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 2000-ஆம் ஆண்டு, ஒரிசாவில், கோபால்பூர்-கடல் என்ற கடற்கரை நகரில் ஒரு எஃகு ஆலையை அமைக்கும் முயற்சியில் டாடாக்கள் ஈடுபட்டனர். அந்த ஆலையை நிறுவுவதற்கு அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் 20,000 பேருக்கு மேல் திரண்டு நடத்திய மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து அத்திட்டம் கைவிடப்பட்டது. இந்த ஆலைத்திட்டமும் கூட மக்கள் இரத்தம் சிந்திப் போராடிய பிறகுதான் முடிவுக்கு வந்தது. 1997 ஆகஸ்டில் சிந்திகோவன் நகரில் நடந்த டாடா எதிர்ப்புப் பேரணிக்கு எதிராக போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டின்போது, சிதறி ஓடிய மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு பெண்கள் கொல்லப்பட்டனர்.

ஒரிசாவின் கிழக்கு கடற்கரையில் உள்ள சர்வதேசப் புகழ் பெற்ற சில்கா கடல்நீர் ஏரியின் பெரும் பகுதியை மீன்பண்ணை அமைப்பதற்கு டாடாக்கள் வளைத்துப் போட முயன்றனர். அதற்கு எதிராக 1990-களின் பிற்பகுதியில், சில்கா ஏரியைத் தமது வாழ்வாதாரத்துக்காகச் சார்ந்துள்ள 1,20,000 மீனவர்கள் கடுமையாகப் போராடிய பின்னர் அத்திட்டம் கைவிடப்பட்டது.

### டாடாக்களின் தரகு வரலாறு

#### போதை மருந்து கடத்தல்:

1850-களில் இருந்து அந்-ற்றாண்டின் இறுதிவரை சீனாவிற்கு ''ஓபியம்'' என்ற கஞ்சா போதை மருந்து ஏற்றுமதி செய்வதில் டாடா குடும்பம் ஈடுபட்டிருந்தது; இதை ஜாம்சேத்ஜி நுஸ்ஸர்வான்ஜி டாடாவின் புகழ்பாடும் ஆவணங்கள் பதிவு செய்யாமல் போய்விட்டன. ஓபியம் இந்தியாவில் விளைவிக்கப்பட்டு, ஆங்கிலேயக் காலனியவாதிகளுக்காக டாடா போன்ற தரகர்கள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்தார்கள். (சீன மக்களை ஓபியம் போதைப் பழக்கத்தில் மூழ்கடித்து அடிமைப்படுத்திக் காலனியாக்கிக் கொள்ள ஆங்கிலேயர்கள் எத்தணித்தபோது அதற்கு எதிராக சீன மக்கள் நடத்தியது தான் பிரபலமான ஓபியம் போர். ஓபியம் கடத்திக் குவித்த மூலதனத்தைக் கொண்டுதான் துணி ஆலைகளையும் இரும்பு-எஃகு ஆலையையும் டாடா குடும்பம் நிறுவியது - மொ-ர்)

#### எம்ப்ரஸ் (பேரரசி):

1877, ஜனவரி முதல் நாளில், பருத்தி விளையும் மத்திய இந்தியாவில் ஒரு பருத்தி துணி ஆலையை நிறுவியதுதான் டாடாவின் முதல் ஆலை முனைப்பு ஆகும். அந்த நாள்தான் விக்டோரியா மகாராணியை இந்தியாவின் பேரரசியாகப் பிரகடனம் செய்த நாள்; அதைக் கொண்டாடும் முகமாக துணி ஆலைக்கு பேரரசி ஆலை என்று டாடா கம்பெனி பெயர் சூட்டியது.

#### பிரிட்டானிய விரிவாக்கத்துக்குத் தூபம் போடும் வேலை:

முதல் உலகப் போரின்போது வடக்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டனின் போர் முன்னெடுப்புகளுக்கு முக்கியத் தேவையாக ஆங்கிலேயப் பேரரசுக்கு ரயில் தண்டவாளங்கள் சப்ளை செய்யும் வேலைக்காக 1906-ஆம் ஆண்டு ஜாம்சேத்பூரில் டாடா இரும்பு எஃகு கம்பெனி தொடங்கப்பட்டது. இந்தியாவில் வைசிராயாக இருந்த சேம்ஸ்போர்டு பிரபு, போர் முடிந்த பிறகு சொன்னார், ''மெசபடோமியா (ஈராக்) மட்டுமல்ல; எகிப்து, பாலஸ்தீனம் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவுக்குக்கூட டாடா கம்பெனி எஃகுத் தண்டவாளங்கள் கொடுத்துதவ முடியாமல் போயிருந்தால், நாங்கள் என்ன செய்திருப்போம் என்று கற்பனை கூடச் செய்ய முடியவில்லை.''

#### பிரிட்டானியப் படைக்கு டாடா சப்ளை:

1865-இல் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுற்றது; அது அமெரிக்காவின் தென்மாநிலங்களில் இருந்து இங்கிலாந்தின் துணி ஆலைகளுக்கான பருத்தியை சப்ளை செய்வதற்கு வழிவிட்டது; அந்த ஆலைகளில் இருந்து இந்தியாவுக்கு -லை அனுப்ப முடிந்தது. இருப்பினும் பல ஆலைகள் இன்னமும் மீள முடியாத நிலையில், 1868-இல் அபிசீனியா (இப்போதைய எத்தியோப்பியா)வில் மக்டாலாப் போரை நடத்திக் கொண்டிருந்த ஆங்கிலேயப் படைக்கு உடை, உணவு சப்ளை செய்யும்-லாபம் கொழிக்கும் ஒப்பந்தங்களைப் பெற்று டாடா குடும்பம் மட்டும் வெற்றிகரமாக தொழில்புரிய முடிந்தது. **(முற்றும்)**

(போபாலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக சர்வதேசப் பிரச்சாரம் என்ற இணையத்தளத்தில் வெளியான கட்டுரையின் மொழியாக்கம்.)

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா, அமெரிக்காவின் சுமைதாங்கியானது

**அமெரிக்காவின் பொருளாதாரச் சுமைகளை இந்தியா மீது திணித்துவிட்டுச் சென்றுள்ள ஒபாமாவின் வருகையைக் கூத்தாடிக் கொண்டாட முடியாது.**

கடந்த நவம்பர் 6-ஆம் தேதி முதலாக நாளொன்றுக்கு 900 கோடி ரூபாய் செலவில் மூன்றுநாள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வருகை தந்தார், அமெரிக்க அதிபர் ஒபாமா. இந்திய ஆளும் வர்க்க ஊடகங்கள் ஏதோ தேவதூதர் பூமிக்கு எழுந்தருளியதைப் போல வானளாவப் புகழ்ந்து, அவரைத் துதிபாடின. சிறுவர்களுடன் சேர்ந்து அவர் ஆடிய டப்பாங்குத்து டான்சையும், அவரது மனைவி பாண்டி விளையாடியதையும் அவரது 'எளிமை'யையும் வியந்தோதி, ஒபாமாவின் இந்திய வருகையால் அமெரிக்க முதலீடு அதிகரித்து நாட்டில் பாலாறும் தேனாறும் பாய்ந்தோடப் போவதைப் போல, ஒரு கீழ்த்தரமான சினிமாவை இந்திய ஊடகங்கள் விளம்பரப்படுத்தின.

இந்திய வருகைக்கு முன்னதாக ''நியூயார்க் டைம்ஸ்'' நாளேட்டில் ஒபாமா எழுதிய கட்டுரையில், ''நமது ஒவ்வொரு பில்லியன் டாலர் ஏற்றுமதிக்கும் அமெரிக்காவில் ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். இந்தியச் சந்தையில் தங்கு தடையின்றி நாம் நுழைவதற்கான சூழலை உருவாக்குவதே எனது பயணத்தின் நோக்கம். அமெரிக்காவில் வேலை வாய்ப்பைப் பெருக்குவதே உடனடி இலட்சியம்'' என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து அவரது இந்தியா மற்றும் பிற ஆசிய நாடுகளுக்கான பயணத்தின் நோக்கத்தை யாவரும் புரிந்து கொள்ள முடியும்.

கொலைகார யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவர் ஆண்டர்சனைப் பாதுகாத்துவரும் அமெரிக்க வல்லரசின் அதிபர் ஒபாமாவின் இந்திய வருகையை எதிர்த்து, போபால் நச்சுவாயுவினால் நடைபிணமாகிவிட்டவர்கள் தமது குடும்பத்தாருடன் டெல்லியில் நடத்தும் ஆர்ப்பாட்டம்.




தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு வளரும் நாடுகள் சந்தையை அகலத் திறந்து விட வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு. ''உலக வர்த்தகக் கழக விதிகளின்படி, இந்த விசயத்தில் சம அளவிலான போட்டி இருக்க வேண்டும்; எனவே, உங்கள் நாட்டு விவசாய உற்பத்திக்கும் விளைபொருட்களுக்கும் நீங்கள் கொடுக்கும் மானியத்தைக் குறையுங்கள்'' என்கின்றன வளரும் நாடுகள். இது அமெரிக்காவுக்குச் சங்கடமாக இருக்கிறது. இதனால்தான் கொல்லைப்புறமாக இந்தியா மற்றும் பிற வளரும் நாடுகளுடன் பேரங்கள், ஒப்பந்தங்கள் மூலம் இச்சிக்கலிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறது, அமெரிக்கா.

எனவேதான், ''அமெரிக்காவில் 50 ஆயிரம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக 44 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல ஒப்பந்தங்கள் இந்தியாவுக்கும் அமெரிக்காவுமிடையே கையெழுத்தாகியுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் அடுத்த ஐந்தாண்டுகளில் இரட்டிப்பாகும்'' என்று அறிவித்த ஒபாமா, ''அமெரிக்காவின் 12-வது வர்த்தகப் பங்குதாரராக உள்ள இந்தியா, முதன்மைப் பங்குதாரராக வருவதற்கு வர்த்தகத் தடைகளை நீக்க வேண்டும்'' என்று நிபந்தனை விதித்து இந்திய-அமெரிக்க வர்த்தகக் கவுன்சில் கூட்டத்தில் பேசினார். அமெரிக்க அயலுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரான கிராவ்லி, அதிபர் ஒபாமாவின் இந்தியப் பயணம் எதிர்பார்த்த அனைத்தையும் சாதித்து விட்டது என்று ஊடகங்களுக்கு விளக்கியுள்ளார். மொத்தத்தில் அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியின் சுமைகளை இந்தியாவின் தலையில் பகுதியளவுக்கு ஏற்றிவிட்டு, அமெரிக்காவின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அமெரிக்க முதலாளிகளின் ஆதாயத்திற்காகவுமே ஒபாமா இந்தியாவுக்கு வந்து ஒப்பந்தங்களைப் போட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தங்களின்படி, சில்லறை வணிகம், வங்கி - காப்பீடுதுறை, விவசாயம், உயர்கல்வி முதலானவற்றில் அமெரிக்க முதலீட்டுக்குக் கதவை அகலத் திறந்து விடுவதன் மூலம் இந்திய நாடு



படிப்பகம்

முற்றாக அமெரிக்காவின் இரும்புப் பிடியில் சிக்கிக் கொள்ளும். அமெரிக்காவின் வால்மார்ட்டும், மான்சாண்டோவும், தீவட்டிக் கொள்ளை நிதி நிறுவனங்களும், டப்பா பல்கலைக் கழகங்களும் வரை முறையின்றி நாட்டைச் சூறையாடும். அமெரிக்காவின் அயல்பணி (அவுட்சோர்சிங்) களைச் செய்து வந்த இந்தியாவுக்கு இனி வரம்புகள் நீடிக்கும். இவை தவிர, இந்தியாவின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இரு நாடுகளும் இணைந்து தனியார் பங்கேற்புடன் 1000 கோடி டாலர் தொகையுடன் நிதித் தொகுப்பு உருவாக்குவது, இந்தியாவின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய நீடித்த பசுமைப் புரட்சிக்கு ஒத்துழைப்பு - என ஒபாமா வருகையையொட்டி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.



அமெரிக்காவின் ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத் தலைவர் ஜெப்ரி இம்மெல்ட், அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் ரிலையன்சின் அனில் அம்பானி: அமெரிக்காவின் உலக மேலாதிக்கத் திட்டத்துக்குச் சேவை செய்து ஆதாயமடையத் துடிக்கும் முயற்சி.

இத்தகைய வர்த்தக ஒப்பந்தங்களைவிட, இராணுவ மற்றும் அணுஉலை தொடர்பான ஒப்பந்தங்கள் முக்கியமானது. இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அணு உலைகளை அமைப்பதிலும் இந்திய அரசு அந்நிய முதலீடுகளை அனுமதித்துள்ளது. ஏகாதிபத்திய நாடுகளில் கழித்துக் கட்டப்பட்ட அணு உலைகளை இந்தியாவில் நிறுவி அதில் விபத்து ஏற்பட்டால், அதற்கான பொறுப்பிலிருந்து அந்நிய முதலாளிகளைக் கழற்றிவிடும் வகையில் புதிய சட்டத்தையும் அண்மையில் மன்மோகன் சிங் அரசு நிறைவேற்றியுள்ளது. கடந்த நவம்பர் 8-ஆம் தேதியன்று ஒபாமாவும் மன்மோகன் சிங்கும் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தத்தில், விபத்து ஏற்பட்டால் அணுஉலையை வழங்கிய அமெரிக்க முதலாளிகள் மீது அணுஉலையை இயக்குபவர்கள் எந்த வகையிலும் இழப்பீடு கோர முடியாது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெஸ்டிங்ஹவுஸ், ஜெனரல் எலக்ட்ரிக் ஆகிய அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து அணு உலைகளைப் பெறத் தடையாகவுள்ள அணுவிபத்து இழப்பீடு சட்டத்திலுள்ள விதிகளை, வருமாண்டிற்குள் இந்தியா திருத்தியமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டுக்கே அவமானம்: இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றும் அனைத்துலக மக்களின் பொது எதிரியான அமெரிக்க வல்லரசின் அதிபர் ஒபாமா.



தெற்காசியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்த்தந்திரத் திட்டங்களுக்குத் துணை நிற்கும் நம்பகமான அடியாளாக இந்தியாவை நிலைநாட்டுவதே அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலாகும். ஒபாமாவின் ஒப்பந்தங்களின்படி, இந்திய விமானப் படைக்கு நீண்ட தூரம் டாங்கிகள் உள்ளிட்ட கனரக ஆயுதத் தளவாடங்களைக் கொண்டு செல்லக் கூடிய அமெரிக்காவின் போயிங் நிறுவனத் தயாரிப்பான சி-17 ரக விமானங்கள் பத்து இந்தியாவின் தலையில் கட்டப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் காலனியாதிக்கக் கொடுங்கோன்மை தொடரும் ஆப்கானிஸ்தானில், அமைதி மற்றும் வளர்ச்சிப் பணிகளில் இந்தியாவுக்கு கூடுதல் இடமளிக்கப்படும் என்று ஒபாமா கூறியுள்ளார். ஆப்கானில் நேரடியாக நேட்டோ படைகளுடன் இணைந்து போர்த் தாக்குதல் நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபடாது என்றாலும், ஆப்கான் தேசியப் பாதுகாப்புப் படைக்குப் பயிற்சியளிக்கும் வேலையில் ஈடுபடும். தரகுப் பெருமுதலாளிகள் ஆப்கானில் கட்டுமான - மறுசீரமைப்புப் பணிகள், இராணுவப் பயிற்சி முதலானவற்றின் மூலம் ஆதாயமடைய முடியும் என்பதால் இத்திட்டத்தைப் பேருற்சாகத்துடன் வரவேற்கின்றனர்.

இராணுவத் தளவாட உற்பத்தியில் நேரடி அந்நிய முதலீட்டை26 சதவீதத்திலிருந்து 49 சதவீதமாக இந்தியா உயர்த்தியிருப்பதும், வரும் மார்ச் மாதத்திற்குள் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் கோடிகள் மதிப்பில் இராணுவத் தளவாடங்களை ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் இணைத்துப் பார்த்தால், இந்தியா எவ்வாறு தெற்காசிய வட்டகையில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் பங்காளா நாயாக வளர்க்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# “ஒபாமாவுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு! தேசிய அவமானம்!!”

–புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்–ஆர்ப்பாட்டம்.

உலக மக்களின் எதிரியான அமெரிக்க மேல்நிலை வல்லரசின் அதிபர் பாரக் ஒபாமாவின் இந்திய வருகையை எதிர்த்து நாடெங்கும் இடதுசாரி இயக்கங்களும் புரட்சிகர – ஜனநாயக சக்திகளும் கடந்த நவம்பர் 8–ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் கடையடைப்புப் போராட்டங்களையும் நடத்தின. அமெரிக்கக் கொலைகார யூனியன் கார்பைடு நிறுவனத்தின் நச்சுவாயுவால் நடைபிணங்களாகி விட்டவர்கள் போபாலில் ஒபாமாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அமெரிக்க மான்சாண்டோவின் பி.டி. பருத்தியால் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் போண்டியாகி தற்கொலைக்குத் தள்ளப்பட்டதை எதிர்த்து, கணவனை இழந்து விதவைகளாகிவிட்ட விவசாயத் தாய்மார்கள் ‘‘கொலைகார அமெரிக்காவின் அதிபரே, திரும்பிப் போ!’’ என்று விதர்பா பிராந்தியத்திலுள்ள ஹிவாரா கிராமத்தில் பேரணியும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர்.

உலக மேலாதிக்க பயங்கரவாத அமெரிக்க வல்லரசின் அதிபரான ஒபாமாவின் வருகையை எதிர்த்துத் தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் வீச்சான பிரச்சாரத்தை மேற்கொண்டதோடு, இந்திய நாடாளுமன்றத்தில் ஒபாமா உரையாற்றிய நவம்பர் 8–ஆம் தேதியன்று தமிழகத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.




பி.டி. பருத்தியால் போண்டியாகிப் போன விதர்பா பிராந்தியத்தைச் சேர்ந்த விவசாயிகள், ‘‘கொலைகார அமெரிக்காவின் அதிபரே, திரும்பிப் போ!’’ என்ற முழக்கத்துடன் ஹிவாரா கிராமத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

அமெரிக்க மேலாதிக்க வல்லரசின் அதிபரான ஒபாமாவின் வருகையை எதிர்த்துப் புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்.




அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த்தேரில் இந்தியாவைப் பிணைத்து விசுவாச அடியாளாக உறுதிப்படுத்துவதோடு, அமெரிக்க முதலீட்டுக்கு கதவை அகலத் திறக்குமாறு இந்தியாவை நிர்ப்பந்தித்து, நாட்டையும் மக்களையும் காவு கொள்ளும் ஒப்பந்தங்களை நிறைவேற்ற வந்துள்ள ஒபாமாவின் வருகையை எதிர்த்தும், அவருக்கு வரவேற்பு அளிப்பது நாட்டுக்கே அவமானம் என்பதை விளக்கியும், அமெரிக்க கைக்கூலி மன்மோகன் சிங்கின் சதிகளை அம்பலப்படுத்தியும், அமெரிக்காவின் தலைமையில் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதை எதிர்த்தும் திருச்சி – புத்தூர் நாலுரோட்டிலும், தஞ்சை –பனகல் கட்டிடம் அருகிலும், கடலூர் – மஞ்சக்குப்பம் ஏ.எல்.சி. சர்ச் அருகிலும், சென்னை – குரோம்பேட்டையிலும், உடுமலை மையப் பேருந்து நிலையம் அருகிலும், கோவை செஞ்சிலுவைச் சங்கம் அருகிலும் இவ்வமைப்புகள் எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

புரட்சிகரப் பாடல்களோடும் விண்ணதிரும் முழக்கங்களோடும் நடந்த இந்த ஆர்ப்பாட்டங்கள், உழைக்கும் மக்களிடம் ஒபாமா பற்றிய மாயையைத் திரைகிழித்துக் காட்டிப் போராட அறைகூவுவதாக அமைந்தன.

–பு.ஜ. செய்தியாளர்கள்.

இந்தியாவுக்கு வந்த ஒபாமா, பாகிஸ்தானை கண்டித்து அடக்கிவைப்பார், ஐ.நா. பாதுகாப்பு அவையில் இந்தியா நிரந்தர இடம்பெற உதவுவார் என்ற ஆளும் வர்க்கங்களின் எதிர்பார்ப்பும் பொய்த்துப் போய்விட்டது. ஐ.நா. மறுசீரமைப்பு செய்யப்படும்போது நிரந்தர இடத்தைப் பெற, இந்தியா அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதில் நிரந்தரமற்ற உறுப்பினராக இருந்து எடுக்கும் நிலைப்பாடுகள்தான் உதவும் என்கிறார், ஒபாமா. தனது மேலாதிக்க நோக்கங்களுக்கு அடங்க மறுக்கும் ஈரான், வடகொரியா, கியூபா முதலான நாடுகளின் மீது அமெரிக்கா விதித்துள்ள ஒருதலைப்பட்சமான பொருளாதாரத் தடைகளை இந்தியா விசுவாசமாக ஆதரிக்க வேண்டும்; நாளை இன்னும் இதர நாடுகள் மீது அமெரிக்கா மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகளையும் ஆதரிக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

அமெரிக்க மேலாதிக்க வல்லரசுக்கும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய உலகுக்கும் விசுவாச அடியாளாகச் செயல்படுவதன் மூலம் அந்நிய முதலீடுகளை ஈர்த்து, இந்தியப் பெருமுதலாளிகள் தெற்காசிய வட்டகையில் தமது சந்தையை விரிவுபடுத்தி, நாட்டை ‘வல்லரசாக்க’ விழைகிறார்கள். அதற்காக நாட்டை விற்கவும் அவர்கள் தயங்குவதில்லை. ஒபாமாவின் வருகையும் போடப்பட்டுள்ள ஒப்பந்தங்களும் இந்த உண்மையை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

● மனோகரன்



படிப்பகம்

## போஸ்கோ ஒப்பந்தம்:

# காங்கிரசின் கபடத்தனம்

**போஸ்கோ திட்டத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியை மறுஆய்வு செய்வது என்ற காங்கிரசின் திட்டம் ஒட்டுப் பொறுக்கும் தந்திரம்தான்.**

தென்கொரியாவின் தேசங்கடந்த தொழிற்கழகமான போஸ்கோ, ஒரிசா மாநிலத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ள இரும்பு உருக்காலைக்கு எதிராக கடந்த ஐந்தாண்டுகளாக போராட்டம் நடந்து வருகிறது. ஒரிசா மாநில அரசு பல்வேறு விதமான அடக்குமுறைகளை ஏவிவிட்ட பின்னும், அப்போராட்டம் பின்னடைவுக்கு உள்ளாகவில்லை. போஸ்கோவின் திட்டங்களுக்கு உறுதுணையாய் நிற்பதாக நவின் பட்நாயக்கிற்கு உறுதியளித்திருக்கிறார், பிரதமர் மன்மோகன் சிங். இப்படிபட்ட நிலையில் இப்பிரச்சினையில் மைய அரசு திடீர் உத்தமர் வேடம் போடக் கிளம்பியிருக்கிறது.

தென்கொரியாவின் தேசங்கடந்த தொழிற்கழகமான போஸ்கோ, ஒரிசா மாநிலத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ள இரும்புச் சுரங்கம், இரும்பு உருக்காலை மற்றும் இரும்புத் தாதுவை ஏற்றுமதி செய்வதற்கான துறைமுகம் ஆகியவற்றுக்கு விதிமுறைகளின்படி சுற்றுப்புறச் சூழல் அனுமதி பெற்றுள்ளதா? அந்நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டபொழுது இந்திய வனச் சட்ட விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டனவா? இத்திட்டத்தால் தங்களின் வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படும் மக்களுக்கு உரிய நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளதா? அவர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்கள் உள்ளனவா? - ஆகியவை குறித்து ஆராய மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் கடந்த ஜூலை மாதம் நான்கு பேர் கொண்ட கமிட்டியொன்றை அமைத்தது.

பழங்குடியின விவகாரங்கள் குறித்த ஆராய்ச்சியாளர் ஊர்மிளா பிங்க்ளே, முன்னாள் இந்திய வன அளவை இயக்குநர் ஜெனரல் தேவேந்திர பாண்டே, சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞரும் மனித உரிமை ஆர்வலருமான வீ.சுரேஷ் ஆகிய மூவரும் இக்கமிட்டியின் உறுப்பினர்களாகவும், மீனா குப்தா என்பவர் இக்கமிட்டியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் போஸ்கோ திட்டத்திற்குத் தேவைப்பட்ட அனுமதிகளை வாரிவழங்கியபொழுது, மீனா குப்தா அத்துறையில் செயலராக இருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்படிபட்ட பின்னணி கொண்டவரை கமிட்டியின் உறுப்பினராக மட்டுமின்றி, தலைவராகவும் நியமித்ததில் இருந்தே மைய அரசின் எண்ணவோட்டத்தைப் புரிந்து கொள்ளலாம்.

மீனா குப்தாவும் மைய அரசை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கவில்லை. அவர் இது தொடர்பாக அரசுக்கு அளித்துள்ள அறிக்கையில், "போஸ்கோவிற்கு சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனச் சட்டங்களை மீறி அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும், அத்திட்டத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க போஸ்கோவிற்கு கால அவகாசம் அளிப்பதன் மூலமும், சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு தொடர்பாக இன்னும் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றுமாறு போஸ்கோவிற்கு உத்திரவிடுவதன் மூலமும் இத்திட்டத்தைத் தொடர அனு

போஸ்கோ திட்டத்திற்காக ஒரிசாவின் பாலிதுதா கிராமத்தில் விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவதற்காகக் குவிக்கப்பட்ட போலீசு பட்டாளம் (இடது) மற்றும் போஸ்கோ திட்டத்திற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படங்கள்)







படிப்பகம்

www.padippakam.com

மதிக்கலாம்'' எனக் குறிப்பிட்டுள்ளார். அதேபொழுதில் மற்ற மூன்று உறுப்பினர்கள், ''உண்மைகளை மூடி மறைத்தும் சட்ட விரோதமான முறையிலும் போஸ்கோ திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக''த் தமது அறிக்கையில் நிரூபித்துள்ளதோடு, போஸ்கோ திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளனர்.

● போஸ்கோ ஒரிசாவில் அமைக்கத் திட்டமிட்டுள்ள உருக்காலை ஆண்டொன்றுக்கு 1.2 கோடி டன் இரும்பை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. ஆனால், இத்திட்டம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள சுற்றுப்புறச் சூழல் ஆய்வறிக்கையோ, போஸ்கோ ஆலையின் முதல் கட்டத்தின் உற்பத்தி இலக்கான 40 இலட்சம் டன் இரும்பு உற்பத்தியை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. அதாவது, 1.2 கோடி டன் இரும்பை உற்பத்தி செய்வதால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்யாமல், 40 இலட்சம் டன் இரும்பை உற்பத்தி செய்வதால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்து அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன்படி இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

● போஸ்கோவின் இரும்பாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள 1,620 ஹெக்டேர் நிலப்பரப்பில் 1,253 ஹெக்டேர் நிலப்பரப்பு பல்லுயிர்களும், விதவிதமான தாவர வகைகளும் நிறைந்த வனப்பகுதியாகும். இத்திட்டத்தால் ஏறத்தாழ 8 கிராமங்கள் அழிந்துபோகும் வாய்ப்புண்டு. இப்படிபட்ட நிலையில் இத்திட்டம் குறித்து முழுமையான சுற்றுப்புறச் சூழல் ஆய்வு நடத்தியிருக்க வேண்டும். ஆனால், இத்திட்டத்தால் மழைக் காலங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மட்டுமே ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. மேலும், போஸ்கோ அமைக்கவுள்ள இரும்பு உருக்காலை, மின் உற்பத்தி நிலையம், துறைமுகம் ஆகிய மூன்றையும் ஒன்றாகச் சேரத்து, அவை சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகளை ஆராயாமல், தனித்தனியாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இப்படி ஆய்வு நடத்துவது சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு குறித்த விதிகளுக்குப் புறம்பானது.

● கடற்கரை ஒழுங்குமுறை விதிகளின்படி, பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளாக வரையறுக்கப்பட்டுள்ள கடற்கரைப் பகுதிகளில் இரும்பு உருக்காலைகளை அமைக்க முடியாது. போஸ்கோவின் இரும்பு உருக்காலை இப்படிபட்ட கடற்கரைப் பகுதியில்தான் அமையவுள்ளது என நன்கு தெரிந்திருந்தும், விதிமுறைகளுக்கு முரணாக அந்நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

● போஸ்கோ இரும்பாலை அமையவுள்ள பகுதி பழங்குடியின மக்கள் வாழும் கிராமங்களையும் உள்ளடக்கியிருப்பதால், ஆலை அமைவதற்கான தடையில்லாச் சான்றிதழை கிராமப் பஞ்சாயத்திடமிருந்துதான் பெற வேண்டும். ஆனால், ஒரிசா மாநில அரசோ இப்பகுதிகளில் பழங்குடியின மக்கள் வாழ்ந்துவருவதை மறைத்துவிட்டதோடு, தடையில்லாச் சான்றிதழையும் கிராமப் பஞ்சாயத்திற்குப் பதிலாக ஜகத்சிங்பூர் மாவட்ட நீதிபதியிடமிருந்து பெற்றுள்ளது.

● இத்திட்டத்தால் தமது வாழ்வாதாரங்களை இழக்க நேரிடும் பழங்குடியின மக்கள், மீனவர்கள் உள்ளிட்ட பல்வேறு தட்டு மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்து எந்தவொரு திட்டமும் போஸ்கோவிடமும் இல்லை என்பது மட்டுமல்ல, மறுவாழ்வு அளிப்பது குறித்த சிந்தனையே போஸ்கோவிடம் இல்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளிட்டு பல்வேறு முறைகேடுகளைச் சுட்டி காட்டியுள்ள அம்மூவரும், ''சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் போஸ்கோவிற்கு அனுமதி அளித்துள்ள விவகாரத்தில் தனது விதிகளைத் தானே பின்பற்றவில்லை'' என்றும் அம்பலப்படுத்தியுள்ளனர். ''வளர்ச்சி என்ற பெயரில் சட்டம் ஓரங்கட்டப்படுவதற்கு போஸ்கோ நல்ல உதாரணமாகும்; இத்தகைய முயற்சிகள் வெற்றி அடையுமானால், அதனால் கொள்ளை இலாபப் பேர்வழிகள்தான் பலனடைவார்களே தவிர, நாட்டின் வளர்ச்சியையும் சாதிக்க முடியாது; சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாக்க முடியாது'' என இம்மூவரும் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த மூவர் அளித்த அறிக்கை ஒருபுறமிருக்க, வெளிநாட்டு வாழ் இந்தியர்களால் நடத்தப்படும் சுரங்கப் பகுதி மக்கள் ஒற்றுமை இயக்கம் போஸ்கோ திட்டத்தால் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புகள், வரி வருமானம் ஆகியவற்றை ஆராய்ந்து, இத்திட்டத்தால் இந்தியாவுக்குக் கிடைக்கும் இலாபங்களை விட நட்டமே அதிகம் என அம்பலப்படுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பி.டி. கத்தரிக்காயை அனுமதிப்பது தொடர்பாக கொல்கத்தாவில் நடத்தப்பட்ட கருத்துக் கேட்பு நாடகத்தின்பொழுது, அத்தொழில்நுட்பத்தை எதிர்க்கும் ஆர்வலர்களால் கெரோ செய்யப்படும் சுற்றுப்புறச் சூழல் துறையின் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ். (கோப்புப் படம்)





படிப்பகம்

www.padippakam.com

போஸ்கோ திட்டத்தால் கிடைக்கும் சமூக நலன்களை ஆராய்ந்த பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில் என்ற அமைப்பு, இது தொடர்பாக 2007-ஆம் ஆண்டு அளித்த அறிக்கையில், ''இத்திட்டத்தால் 8,70,000 வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் 2017 ஆம் ஆண்டில் ஒரிசா மாநிலத்தின் மொத்த வருவாயில் போஸ்கோவின் பங்கு 11.5 சதவீதமாக இருக்கும் என்றும்'' கூறி, இத்திட்டத்தைப் புகழ்ந்து தள்ளியது. ஒரிசா மாநில அரசும் இப்புள்ளிவிவரங்களைக் காட்டிதான் இந்தத் திட்டத்தின் அவசியத்தைத் தூக்கிப் பிடித்து வந்தது.

''இந்த அறிக்கை சுதந்திரமாகத் தயாரிக்கப்பட்டதல்ல; போஸ்கோ நிறுவனத்திடம் காசு வாங்கிக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை'' என்ற உண்மையை சுரங்கப் பகுதி மக்கள் ஒற்றுமை இயக்கம் அம்பலப்படுத்தியிருக்கிறது. பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில் போஸ்கோ குறித்த அறிக்கையைத் தயாரிப்பதில் அரசனை விஞ்சிய விசுவாசியாக நடந்து கொண்டுள்ளது. போஸ்கோ நிறுவனம் தனது இணைய தளத்தில் ஒரிசாவில் அமையவுள்ள தனது ஆலைகளின் மூலம் அடுத்த 30 ஆண்டுகளில் 4,67,000 பேருக்கு வேலை கிடைக்கும் எனக் குறிப்பிட்டிருக்கும்பொழுது, பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சிலின் அறிக்கையோ போஸ்கோ திட்டத்தின் மூலம் 8,70,000 பேருக்கு வேலை கிடைக்கும் என ஊதிப் பெருக்கியுள்ளது.

இவ்விரண்டு புள்ளிவிவரங்களுமே மோசடியானவை எனக் குறிப்பிட்டுள்ள சுரங்கப் பகுதி மக்கள் ஒற்றுமை இயக்கம், ''போஸ்கோ திட்டத்தின் மூலம் 48,000 பேருக்கு மட்டுமே வேலை கிடைக்கும்; அதுவும் கட்டுமான வேலைகள் நடக்கும்பொழுது மட்டும்தான் இவ்வளவு பேருக்கும் வேலை கிடைக்கும்; போஸ்கோ திட்டத்தால் ஜகத்சிங்பூர் பகுதியில் நடந்து வரும் பணப் பயிர் விவசாயம் உள்ளிட்ட உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்புகளை போஸ்கோ நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை; போஸ்கோ திட்டத்தின் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் எனக் காட்டுவதற்காக, உற்பத்திச் செலவு குறைத்துக் காட்டப்பட்டுள்ளது'' எனத் தனது அறிக்கையில் அம்பலப்படுத்தியிருக்கிறது.

போஸ்கோ திட்டம் நமது நாட்டின் இரும்புக் கனிம வளத்தைக் கொள்ளையடிப்பதற்கான திட்டம்தான் என்பது மேலும்மேலும் அம்பலமாகி வருகிறது. இப்படிபட்ட நிலையில் இத்திட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட அனைத்து அனுமதிகளையும் ரத்து செய்து, போஸ்கோவை நாட்டைவிட்டுத் துரத்துவதுதான் நாணயமிக்க செயலாக இருக்க முடியும். ஆனால், சுற்றுப்புறச் சூழல் அமைச்சகமோ இப்பிரச்சினையில் பாம்பும் சாகக் கூடாது, தடியும் நோகக்கூடாது என்ற நிலையில் உள்ளது. இதற்கு, போஸ்கோ திட்டம் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டியின் நான்காவது உறுப்பினர் அளித்த அறிக்கையைப் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறார், சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.



கர்நாடகாவில் மரபீணி மாற்றம் செய்யப்பட்ட நெல் ரகம் இரகசியமாகப் பயிரிட்டுப் பரிசோதித்துப் பார்க்கப்படுவதை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம்.

போஸ்கோ திட்டம் குறித்து சுற்றுப்புறச் சூழல் அமைச்சகத்திடம் எதிரும் புதிருமான இரண்டு அறிக்கைகள் உள்ள நிலையில், அத்துறையின் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், ''இந்த இரண்டு அறிக்கைகளும் அடிப்படையில் வேறுபடவில்லை; விளக்கம் அளிப்பதில்தான் வேறுபட்டுள்ளன'' எனப் புளுகியிருப்பதோடு, போஸ்கோவிற்கு அளிக்கப்பட்ட அனுமதியை, கிழக்காசிய நாடுகளோடு பொருளாதார உறவு கொள்ளும் இந்திய அரசின் கொள்கையோடு இணைத்துப் பார்க்க வேண்டும் எனக் கூறி இந்த சட்டவிரோதமான அனுமதியை நியாயப்படுத்த முயன்றுள்ளார். இந்த இரண்டு அறிக்கைகள் பற்றியும் ஒரிசா மாநில அரசிடமும் கலந்து ஆலோசித்துவிட்டுத்தான் இறுதி முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்திருப்பதன் மூலம் போஸ்கோ திட்டம் பற்றி அரசின் உள்ளக்கிடக்கையைச் சூசகமாக விளங்க வைத்துவிட்டார், அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

பி.டி. கத்திரிக்காய்க்கு அனுமதி அளிப்பதற்கு எதிராக விவசாயிகள் போராட்டம் நடத்தியபொழுது, கருத்துக் கேட்பு நாடகங்களை நடத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், போஸ்கோ பிரச்சினையிலும் அதே தந்திரத்தைக் கையாளுகிறார். போஸ்கோவிற்கு எதிராகப் போராடிவரும் மக்கள் மத்தியில் அத்திட்டத்திற்கு எதிராக ஏதோ செய்யப்போவது போலக் காட்டிக் கொள்ளவும், அதேசமயம், நைச்சியமான வழியில் போஸ்கோவிற்கு வழங்கப்பட்டுள்ள சட்டவிரோதமான அனுமதியைத் தொடரவும்தான் இந்தக் கமிட்டியை அமைத்திருக்கிறது சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம்.

நியம்கிரி மலையில் பாக்சைட்டைத் தோண்டுவதற்கு மட்டும் வேதாந்தாவிற்குத் தடை விதித்து கோந்த் பழங்குடி இன மக்களின் சிப்பாயாக ராகுலுக்கு முடிசூட்டியதைப் போல, போஸ்கோ பிரச்சினையையும் தனது ஓட்டு வேட்டைக்குப் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறது, காங்கிரசு கும்பல். போஸ்கோவிற்கு எதிராகப் போராடி வரும் ஒரிசா மாநில மக்கள் காங்கிரசின் இந்த நயவஞ்சகத்திற்கு எதிராகவும் விழிப்புணர்வோடு இருக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

● திப்பு



படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீர்:

# காங்கிரசு-பா.ஜ.க.வின் கள்ளக்கூட்டு!

**அருந்ததிராய், சையத் அலி ஷா கீலானி மீது தேசத்துரோக வழக்கு பாய்ந்ததில், காங்கிரசும், பா.ஜ.க.வும் ஜாடிக்கேத்த மூடியாய்ச் செயல்பட்டன.**

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கமிட்டி என்ற அமைப்பு காஷ்மீர் பிரச்சினை குறித்து, ''விடுதலை: ஒரே வழி'' என்ற கருத்தரங்கை கடந்த அக்டோபர் 21 அன்று டெல்லியில் நடத்தியது. இக்கருத்தரங்கில் காஷ்மீரைச் சேர்ந்த ஹுரியத் மாநாட்டுக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான சையத் அலி ஷா கீலானி, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நக்சல்பாரி புரட்சியாளரான தோழர் வரவர ராவ், எழுத்தாளர் அருந்ததி ராய் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கைச் சீர்குலைக்கும் திட்டத்தோடு அரங்கத்தில் நுழைந்திருந்த இந்துத்துவா பாசிசக் கும்பல் கருத்தரங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுதே ரகளையில் ஈடுபட்டதோடு, சையத் ஷா கீலானி, அருந்ததி ராய் ஆகியோரைத் தாக்கவும் முனைந்தது. இக்கருத்தரங்கையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காஷ்மீரின் வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சியையும் அடித்து நொறுக்கியது, அக்கும்பல்.

தில்லி போலீசின் அனுமதி பெற்று, சட்டபூர்வமான முறையில்-அமைதியான வழியில் நடைபெற்றுக் கொண்டிருந்த இக்கருத்தரங்கின் மீது வன்முறைத் தாக்குதலை நடத்திய இக்கும்பல், அக்கருத்தரங்கில் உரையாற்றிய அருந்ததி ராயையும் சையத் ஷா கீலானியையும் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்ய வேண்டும் என்றும் சாமியாடி வருகிறது. சில 'தேசிய'ப் பத்திரிகைகள் இந்துத்துவா கும்பலின் இந்த பாசிச கோரிக்கைக்கு ஆதரவாக செய்திகளையும், தலையங்கக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளன. சில தனியார் ஆங்கிலத் தொலைக்காட்சி ஊடகங்கள் அருந்ததி ராயைத் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்ய வேண்டிய அவசியம் குறித்து புதுப் பணக்கார கும்பலைக் கூட்டிவைத்து ''டாக் ஷோ''க்களை நடத்தித் தூபம் போட்டன.

அருந்ததி ராய் அக்கருத்தரங்கில், காஷ்மீர் மக்கள் நடத்தும் போராட்டத்தை, இந்தியாவின் மையப் பகுதியில் நக்சல்பாரிகள் நடத்தும் போராட்டத்தோடும், நர்மதை அணையை எதிர்த்துப் பழங்குடியின மக்கள் நடத்தும் போராட்டத்தோடும் ஒப்பிட்டுப் பேசியதோடு, ''போராடும் பழங்குடியின மக்களின் கரங்களில் உள்ள வில்லும் அம்பும், காஷ்மீர் இளைஞர்களின் கரங்களில் உள்ள கற்களும் அவசியமானவைதான். ஆனாலும், அதற்கு மேலும் நமக்குத் தேவைகள் உள்ளன. நாகலாந்து, மணிப்பூர், சட்டிஸ்கர், ஒரிசா, காஷ்மீர் என இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நீதிக்காகப் போராடி வரும் மக்கள் ஐக்கியப்பட வேண்டிய அவசியத்தை''த் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

காஷ்மீர் பிரச்சினை குறித்து அம்மாநில மக்களின் கருத்தை அறிவதற்காக மைய அரசு நியமித்துள்ள மூவர் குழுவைப் புறக்கணிக்கக் கோரி அக்கருத்தரங்கில் அறைகூவல் விடுத்த சையத் ஷா கீலானி, ''சுயநிர்ணய உரிமை, காஷ்மீர் மக்கள் அனைவரின், காஷ்மீரில் வாழும் சீக்கியர்கள், இந்துக்கள், புத்த மதத்தினர் உள்ளிட்ட அனைவரின் அடிப்படை உரிமையாகும்; காஷ்மீர் மக்களின் போராட்டத்தை இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் மக்கள் ஆதரிக்கத் தொடங்கியிருப்பது நல்ல அறிகுறியாகும்'' என உரையாற்றினார்.

நீர், நிலம், கனிம வளம் என நாட்டின் பொதுச் சொத்துகள் அனைத்தையும் ஏகாதிபத்திய முதலாளிகளுக்கு பட்டா போட்டுக் கொடுப்பது தேசத் துரோகமா? இல்லை, அந்த அநீதியைத் தடுப்பதற்குப் போராடி வரும் மக்களிடம் ஐக்கியப்பட்டுப் போராடுங்கள் எனக் கோருவது தேசத் துரோகமா? சிறப்புப் பொருளாதார மண்டலங்




டெல்லியில் நடந்த காஷ்மீர் பிரச்சினை குறித்த ''சுதந்திரம்; ஒரே வழி'' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட அருந்ததி ராய் (வலமிருந்து இரண்டாவது), சையத் ஷா கீலானி (வலமிருந்து மூன்றாவது) மற்றும் பிற பேச்சாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



டெல்லியில் நடந்த காஷ்மீர் பிரச்சினை குறித்த கருத்தரங்கில் புகுந்து வன்முறையில் ஈடுபடும் இந்துத்துவா குண்டர்கள்.

கள் என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியாவைப் பகுதிபகுதியாக ஆட்சியாளர்கள் பட்டா போட்டுக் கொடுப்பதைக் காட்டிலும், காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிக்க வேண்டும் எனக் கோருவது எந்த விதத்தில் தேசத் துரோகமாகிவிடும்?

இந்துத்துவா கும்பலோ அருந்ததி ராயைத் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்வதை நியாயப் படுத்துவதற்காக, ''காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்ததில்லை '' என அருந்ததி ராய் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராகவும், பிரிவினைவாதத்தை ஆதரித்துப் பேசியதாகவும் குறிப்பிடுகிறது. சில முதலாளித்துவ அறிஞர்கள், ''அருந்ததி ராய் தேச ஒருமைப்பாட்டுக்கு எதிராகப் பேசியிருந்தாலும், அவர் வன்முறையில் ஈடுபடவில்லை; எனவே, அவரைக் கைது செய்ய வேண்டியதில்லை'' என இப்பிரச்சினை குறித்துக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இந்த இரண்டு கருத்துகளும் ஒன்றுக்கொன்று எதிரானது போலத் தோற்றமளித்தாலும், சாரத்தில் இந்துத்துவா கும்பலும், இந்த முதலாளித்துவ அறிஞர்களும் காஷ்மீரின் வரலாற்றை மூடிமறைக்கிறார்கள் என்பதே உண்மை.

''காஷ்மீர் 1947-இல் இந்தியாவுடன் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொள்ளப்பட்டதே தவிர, அம்மாநிலம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது கிடையாது'' என்பது அருந்ததி ராயின் சொந்தக் கற்பிதம் கிடையாது. அது ஒரு வரலாற்று உண்மை. மேலும், காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்திருப்பது குறித்து அம்மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அப்பொழுது இந்திய அரசு ஒத்துக் கொண்டது. இந்த வரலாற்று உண்மைகளை இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் மக்களிடம் எடுத்துக் கூறுவதல்ல, அவ்வரலாற்று உண்மையை மூடிமறைத்துவிட முயலுவதுதான் துரோகமும் நயவஞ்சகமும் ஆகும்.

டைம்ஸ் நௌ, நியூஸ் 24, பயோனீர் உள்ளிட்ட சில ஊடகங்கள் அருந்ததி ராயைத் தண்டிக்கக் கோரும் விவகாரத்தில் இந்துத்துவா கும்பலைவிடக் கேவலமாக நடந்து கொண்டன. அருந்ததி ராய் அக்கருத்தரங்கில் இந்திய இராணுவத்தை வன்புணர்ச்சி வெறிகொண்ட கும்பலாகச் சித்தரித்ததாக இந்த ஊடகங்கள் செய்திகளைத் தயாரித்து வெளியிட்டன. அருந்ததி ராய் இந்த அண்டப்புளுகை அம்பலப்படுத்திய பின்னும், இந்திய தேசியவெறி பிடித்த இந்த ஊடகங்கள் ஒரு புளுகுணிச் செய்தியை வெளியிட்டதற்காக வெட்கப்படவுமில்லை; மறுப்பு வெளியிடவும் இல்லை.

அக்கருத்தரங்கில் காஷ்மீருக்குச் சென்று மடிந்து போகும் ஏழை இந்தியச் சிப்பாய்களின் அவல நிலையைச் சுட்டிக் காட்டிப் பேசிய அருந்ததி ராய், அதற்கு மாறாக, இந்திய இராணுவத்தை வன்புணர்ச்சி வெறி கொண்ட கும்பலாகச் சித்தரித்துப் பேசியிருந்தாலும் கூட அதில் தவறொன்றும் காண முடியாது. துப்பாக்கிச் சூட்டில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள கற்களை வீசும் காஷ்மீர் இளைஞர்களைப் பிடித்துக் கொண்டுபோய் அதற்குத் தண்டனையாக அவர்களின் விரல் நகங்களைப் பிடுங்கி எறியும் இந்திய இராணுவம்,

இந்துத்துவா குண்டர்களால் தாக்கப்பட்ட அருந்ததி ராயின் வீடு (வலது பக்கம்). புவனேஷ்வரில் நடந்த காட்டுவேட்டைக்கு எதிரான கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த அருந்ததி ராய்க்கு எதிராக இந்துத்துவா கும்பல் நடத்திய கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின்பொழுது, அக்குண்டர்களால் அவர் தாக்கப்படாமல் அரண் அமைக்கப்பட்டுப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்படுகிறார்.







படிப்பகம்

www.padippakam.com

காஷ்மீரத்துப் பெண்களிடம் மட்டும் கண்ணியத்துடன் நடந்து கொண்டிருக்குமா?

அருந்ததி ராய், கீலானிக்கு எதிராக இந்துத்துவா கும்பல் சாமியாடியவுடனேயே காங்கிரசு கூட்டணி அரசு அவர்கள் இருவர் மீதும் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடரும் ஏற்பாடுகளில் இறங்கியது. பின்னர், அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டதாக மைய அரசு கூறினாலும், எந்த நேரத்திலும் அருந்ததி ராய் மீது வழக்குத் தொடுக்கும் நிலையில்தான் இப்பிரச்சினையை தில்லி போலீசிடம் விட்டு வைத்துள்ளது. உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், ''இப்பிரச்சினை பற்றி முடிவு செய்யும் சுதந்திரம் டெல்லி போலீசுக்கு உண்டு'' எனக் கூறியிருப்பதில் இருந்தே காங்கிரசின் கபடத்தனத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.

காங்கிரசின் இந்த ஜனநாயக வேடத்தைக்கூட இந்துத்துவா கும்பலால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அருந்ததி ராய் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடர உத்தரவிடக் கோரி அக்கும்பல் தில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, அதில் வெற்றியும் பெற்றுவிட்டது.

ஏதோ சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் கண்ணியவான் போல வழக்குத் தொடுத்துள்ள இந்துத்துவா கும்பல், இன்னொருபுறம் தனது மகளிர் அணியை இறக்கிவிட்டு அருந்ததி ராய் வீட்டின் மீது தாக்குதல் தொடுத்து, அவரை மிரட்டிப் பணிய வைக்க முயன்றது. இத்தாக்குதல் ஏதோ யாருக்கும் தெரியாமல் சதித் திட்டம் தீட்டப்பட்டு, அதன்பின் நடத்தப்பட்ட திடீர்த் தாக்குதல் அல்ல. ''ஓவியர் ஹுசைனை வேட்டையாடியதைப் போலவே அருந்ததி ராயையும் வேட்டையாடுவோம்'' என பஜ்ரங் தள் கும்பல் பத்திரிகைகளுக்கு செய்தியளித்துவிட்டு நடத்திய தாக்குதல் இது.

குறிப்பாக, என்.டி.டிவி., டைம்ஸ் நௌ, நியூஸ் 24 ஆகிய மூன்று தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர்களும், ஒளிப்பதிவாளர்களும் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்பாகவே அருந்ததி ராயின் வீட்டின் முன் குவிந்துவிட்டனர். இதனைத் தாக்குதல் செய்தியை முதல் ஆளாக ஒளிபரப்பிவிட வேண்டும் என்ற ஆர்வக் கோளாறாகப் பார்ப்பதா? இல்லை, இந்துத்துவா கும்பலுக்கும் சில தேசிய செய்தி ஊடகங்களுக்கும் இருக்கும் நெருக்கத்தைக் காட்டும் சான்றாகப் பார்ப்பதா? மைய அரசு, முன்னரே அறிவித்துவிட்டு நடந்த இத்தாக்குதலைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தது. இதன் மூலம், இவ்விவகாரத்தில் காங்கிரசும், பா.ஜ.க.வும் ஜாடிக்கேத்த மூடியாய்ச் செயல்படுவதாகக் கூறலாம்.

டெல்லிக்கு அடுத்து, ஒரிசா மாநிலத்திலுள்ள புவனேஷ்வர் நகரில் நடந்த காட்டு வேட்டைக்கு எதிரான கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த அருந்ததி ராய்க்கு எதிராகக் கருப்புக் கொடி காட்டிய இந்துத்துவா கும்பல், அக்கருத்தரங்கை நடத்தவிடாமல் ரகளையிலும் இறங்கியது. இவ்வன்முறையில் ஐந்து பேர் காயமுற்றனர்.



காஷ்மீர் பிரச்சினை குறித்து சண்டிகர் நகரில் நடந்த கருத்தரங்கில் நுழைந்த இந்துத்துவா கும்பல் வன்முறையில் இறங்கியதையடுத்து, போலீசு பாதுகாப்போடு அக்கருத்தரங்கில் உரையாற்றும் மீர்வாயிஸ் உமர் பாரூக் (வலமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர்).

அருந்ததி ராய், இந்துத்துவா கும்பலின் இந்த சலசலப்புகளுக்கு அஞ்சாததோடு, காஷ்மீர் பிரச்சினை குறித்து தான் கூறிய கருத்துகளைத் திரும்பப் பெற முடியாது என்றும் அறிவித்திருக்கிறார்.

ஹுரியத் மாநாட்டுக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான மிர்வாயிஸ் உமர் பாரூக் அரியானா மாநிலத் தலைநகர் சண்டிகரில் காஷ்மீர் பிரச்சினை குறித்த நடந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு, உரையாற்றத் தொடங்கும் முன்பே ரகளையில் ஈடுபட்ட இந்துத்துவா கும்பல், அவரை நெட்டித் தள்ளி வன்முறையில் இறங்கியது. ''அவரின் அரசியல் கருத்துக்களுக்காகத்தான் மிர்வாயிஸ் தாக்கப்பட்டதாக''க் கூறி, இந்துத்துவா கும்பலின் இந்த வன்முறையை விசிறிவிட்டுள்ளார், காங்கிரசின் கூட்டாளியும் ஜம்மு-காஷ்மீர் முதல்வருமான ஒமர் பாரூக்.

அருந்ததி ராயும், சையத் ஷா கீலானியும், மிர்வாயிஸ் உமர் பாரூக்கும் காஷ்மீர் பிரச்சினை குறித்து என்ன பேசி வருகிறார்களோ, அதுதான் காஷ்மீர் மக்களின் பொதுக் கருத்தாகும். இந்திய அரசின் காஷ்மீர் கொள்கைக்கு எதிரான இக்கருத்தைப் பேசுபவர்கள் மீது வழக்கு பாயும்; தாக்குதல் தொடுக்கப்படும் என ஒருபுறம் காட்டிவிட்டு, இன்னொருபுறம் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கருத்துக் கேட்பு நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறது, காங்கிரசு கும்பல்.

இந்துத்துவா கும்பலோ, முசுலீம் தீவிரவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் எதிர்ப்பதில், தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதில் காங்கிரசைவிடத் தனக்குத்தான் அதிக அக்கறை உண்டு எனக் காட்டிக் கொள்ள தற்பொழுது காஷ்மீர் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்ள முனைகிறது. அருந்ததி ராயின் பேச்சை மட்டுமல்ல, காங்கிரசு அரசு அமைத்துள்ள மூவர் குழுவின் சில்லறை ஆலோசனைகளை எதிர்ப்பதன் மூலமும்; அருந்ததி ராயைக் கைது செய்யாத காங்கிரசு அரசு, அஜ்மீர் வெடிகுண்டு வழக்கில் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களைக் கைது செய்வதாகப் புலம்புவதன் மூலமும் தனது இந்து-இந்திய தேசிய வெறியைக் காட்டி வருகிறது, அக்கும்பல்.

● செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



வெடித்து, தோழர் லெனின் படம் அச்சிடப்பட்ட வாழ்த்து அட்டையுடன் இனிப்புகள் வழங்கி செங்கொடியேற்றும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, இரு சக்கர வாகனங்களில் முழக்கமிட்டபடியே முக்கிய வீதிகள் வழியாக வந்து தியாகத் தோழர் பீட்டர் இல்லத்திலும், பர்மா காலனி, கீழவாசல் ஆகிய இடங்களிலும் கொடியேற்றப்பட்டது. மாலையில் வடக்கு வாசல் சமுதாயக் கூடத்தில் முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர். இசைச் சித்திரம், மாவீரன் பகத்சிங் நாடகம் ஆகியவற்றோடு, பொதுவுடமை இயக்கத்தின் மூத்த தோழரும் லாவணி இசைக் கலைஞருமான தோழர் காதர் பாடிய பாடல்கள் நிகழ்ச்சிக்கு எழுச்சியூட்டின.



**சென்னையில்...**

மதுரவாயல் பகுதியில் காலையில் செங்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி பு.மா.இ.மு. தலைமையில் தோழர்கள் உறுதியேற்றனர். மாலை 4 மணியளவில் எஸ்.வி. மகாலில் பு.மா.இ.மு; ம.க.இ.க; பெ.வி.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் தோழர்கள் தங்கள் குடும்பத்தோடு திரண்டு நவம்பர் புரட்சிநாள் விழாவை எழுச்சியோடு நடத்தினர். குறிப்பாக, பு.மா.இ.மு.வைச் சேர்ந்த மாணவர்களும் இளைஞர்களும் பெருந்திரளாக தமது குடும்பத்துடன் கலந்து கொண்டனர். இளம் தோழர்கள் நிகழ்த்திய பாடல் நிகழ்ச்சி, பு.மா.இ.மு. மாணவியரின் நடன நிகழ்ச்சி, இளைஞர்களின் பறைமுழக்கம், பெ.வி.மு. தோழர்கள் நடத்திய பெண் விடுதலைக்கான விவாதம், அயோத்தி தீர்ப்பைத் தோலுரித்து இந்துவெறி பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட அறைகூவல் விடுத்த இசைச் சித்திரம் முதலான நிகழ்ச்சிகள் 700 பேருக்கு மேல் திரண்டு வந்த பார்வையாளர்களிடம் போராட்ட உணர்வூட்டி உற்சாகமான வரவேற்பைப் பெற்றன. இறுதியாக, தியாகத்துக்கு அஞ்சாமல் வர்க்க உணர்வோடு ஒவ்வொருவரும் போல்ஷ்விக்குகளாக மாற வேண்டிய அவசியத்தை விளக்கி தோழர் துரை.சண்முகம் எழுச்சியுரையாற்றினார்.

**கோவையில்...**

ம.க.இ.க; பு.ஜ.தொ.மு. சார்பாக கோவை கே.என்.ஜி.புதூரிலுள்ள எஸ்.ஆர்.ஐ. பு.ஜ.தொ.மு. சங்க அலுவலகக் கட்டிடத்தில் செங்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி நவம்பர் புரட்சிநாள் விழா தொடங்கியது. ம.க.இ.க. தோழர்கள் புரட்சிகர பாடல்களை இசைக்க, தோழர் பூவண்ணன் தலைமையில் தொழிலாளர்கள் பெருந்திரளாகக் குடும்பத்தோடு கலந்து கொண்ட இந்த விழாவில், பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசு சிறப்புரையாற்றினார்.

இவை தவிர சேலம், புதுச்சேரி, கடலூர், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள நாட்றாம்பாளையம், ஆம்பூர், உடுமலை வட்டத்திலுள்ள ஆண்டியூர், துறையூர் வட்டத்திலுள்ள காளிப்பட்டி, பென்னாகரம் வட்டத்திலுள்ள வி.வி.மு. கிளைகள் - எனப் பல்வேறு பகுதிகளிலும் இப்புரட்சிகர அமைப்புகள் பட்டாசுகள் வெடித்து செங்கொடியேற்றி நவம்பர் புரட்சிநாளை எழுச்சியோடு நடத்தின. இப்புரட்சிகர அமைப்புகள் செயல்படும் பகுதிகள் அனைத்தும் அந்நாளில் விழாக்கோலம் பூண்டிருந்தன. திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்ற இந்த விழாக்களில் சிலம்பாட்டம், சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகள், விவாத அரங்கம், முன்னணியாளர்களின் சிறப்புரை, புரட்சிகரப் பாடல்கள், விளையாட்டுப் போட்டிகள் - எனத் தொடர்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள், இங்கேயும் ஒரு நவம்பர் புரட்சியைச் சாதிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தின.



போலி கம்யூனிஸ்டுகள் தீபாவளிக்கு வசூல் வேட்டை நடத்தி வாழ்த்து தெரிவித்துவிட்டு, சோசலிசப் புரட்சி நாளை திவசம் போல நடத்திவரும் நிலையில், இப்புரட்சிகரத் திருநாளை வர்க்க உணர்வூட்டும் மக்கள் திருவிழாவாகவும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு விழாவாகவும் இப்புரட்சிகர அமைப்புகள் எழுச்சியோடு நடத்தி, சோசலிசப் புரட்சியைச் சாதித்த போல்ஷ்விக்குகளின் உண்மையான வாரிசுகள் தாங்கள்தான் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளன.

– பு.ஜ.செய்தியாளர்கள்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# வெல்லட்டும் ஐரோம் ஷர்மிளாவின் போராட்டம்! வீழட்டும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம்!!

மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த ஐரோம் ஷர்மிளா ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி நடத்தி வரும் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம், கடந்த நவம்பர் 4-ஆம் தேதியன்று பத்தாவது ஆண்டைக் கடந்துவிட்டது.

பத்தாண்டுகளுக்கு முன்பு, மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலுக்கு அருகேயுள்ள மாலோம் என்ற புறநகர்ப் பகுதியில் அசாம் துப்பாக்கிப் படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் நடத்திய கண்மூடித்தனமானத் துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டனர்; 34 பேர் படுகாயமுற்றனர். சுட்டுக்கொல்லப்பட்ட அனைவரும் சாலையோரத்தில் பேருந்துக்காகக் காத்து நின்ற அப்பாவிகள்.

மாலோம் படுகொலை என்று அழைக்கப்படும் இந்த அரசு பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய சிப்பாய்களுள் ஒருவன் கூட இதுநாள்வரை தண்டிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தப் படுகொலை நீதிமன்ற விசாரணையைக்கூட இன்னும் எட்டவில்லை. ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம்தான் அச்சிப்பாய்கள் விசாரிக்கப்படுவதையும் தண்டிக்கப்படுவதையும் தடுத்து, அவர்களுக்குச் சட்டபூர்வ பாதுகாப்பை வழங்கி வருகிறது.

ஐரோம் ஷர்மிளா, மாலோம் படுகொலை நடந்து முடிந்த மூன்றாவது நாளே ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை விலக்கக் கோரித் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். அவரின் போராட்ட உறுதியையும், அவரது போராட்டத்திற்கு மக்கள் அளித்த ஆதரவையும் கண்டு அரண்டு போன மணிப்பூர் மாநில அரசு, ஐரோம் ஷர்மிளா உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கிய ஒருசில நாட்களிலேயே அவர் மீது தற்கொலைக்கு முயன்றதாக வழக்குப் பதிவுசெய்து கைது செய்தது. அவரை மருத்துவமனையில் அடைத்து வைத்து அவருக்கு வலுக்கட்டாயமாகத் திரவ உணவை மூக்கின் வழியாகச் செலுத்தி வருகிறது. அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவமனை அறை, கிளைச் சிறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஐரோம் ஷர்மிளா, 2006-ஆம் ஆண்டில் அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, இம்பாலில் இருந்து டெல்லிக்கு வந்து, ஐந்தர் மந்தர் பகுதியில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரும் கோப்புப் படம். (உள்படம்) ஐரோம் ஷர்மிளா.

ஐரோம் ஷர்மிளா, தனது போராட்டத்தைத் தொடங்கிய பின் கடந்த பத்தாண்டுகளில் ஒருமுறைகூடத் தனது வீட்டிற்குச் செல்லவில்லை. மணிப்பூர் மாநில அரசு அவரை விடுதலை செய்யும்பொழுதெல்லாம் - அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டின் கீழ் அவரை ஓராண்டு மட்டுமே சிறையில் அடைத்துவைக்க முடியும் - அவர் தனது போராட்டத்தை ஆதரித்து வரும் மேய்ரா பாய்பி என்ற மகளிர் அமைப்பின் அலுவலகத்துக்குச் சென்று உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார். உடனே, மணிப்பூர் மாநில அரசு அவரை மீண்டும் கைது செய்து மருத்துவமனையில் அடைத்துவிடும்.

அவர் கடந்த பத்தாண்டுகளாக எந்தவிதமான திட உணவையும் உட்கொள்ள மறுத்து வருவதால், அவரது முக்கிய உடல் உறுப்புகள் அனைத்தும் பாதிக்கப்பட்டு எந்த வேளையிலும் அவர் மரணத்தைச் சந்திக்கக் கூடும் என்ற அபாயகரமான கட்டத்தில் இருந்து வந்தாலும், அவர் தனது போராட்டத்தைக் கைவிடாமல் தொடர்ந்து வருகிறார்.

ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்குவது பற்றி ஆராய கமிட்டி அமைக்கிறோம்; எனவே, உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு மாநில அரசு நடத்திய பேரத்தையெல்லாம் ஐரோம் ஷர்மிளா ஒரு பொருட்டாக மதிக்கவேயில்லை. அவரைப் பொருத்தவரை, ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை முற்றிலுமாக நீக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே வீட்டிற்குச் சென்று வயது முதிர்ந்த தனது தாயாரின் மடியில் தலை சாய்ப்பேன் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

மியான்மர் இராணுவ ஆட்சியாளர்கள் ஆங் சான் சூ கி-யைப் பதினைந்து ஆண்டுகளாக வீட்டுச் சிறையில் அடைத்து வைத்திருந்ததற்கும் இந்தியக் 'குடியரசு' ஐரோம் ஷர்மிளாவைப் பத்தாண்டுகளாக மருத்துவமனை என்ற கிளைச் சிறையில் அடைத்து வைத்திருப்பதற்கும் பெரிய வேறுபாடு கிடையாது.

போராளிகளின் மனவுறுதியையும் கொள்கைப் பற்றுறுதியையும் அடக்குமுறைகளின் மூலம் சிதைத்துவிட முடியாது என்பதற்கு ஐரோம் ஷர்மிளா வாழும் உதாரணமாகத் திகழ்கிறார். வெல்லட்டும் அவரது போராட்டம்! வீழட்டும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம்!!



படிப்பகம்